

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை - 2021

செலவுத் தலைப்பு இலக்கம் - 425/426

சேதனப் பசளை உற்பத்தி மேம்பாடு மற்றும் விநியோக ஒழுங்குறுத்துகை மற்றும் நெல், தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு, விதை உற்பத்திகள் மற்றும் உயர் தொழில்நுட்ப கமத்தொழில் இராஜாங்க அமைச்சு

கமத்தொழில் அமைச்சு

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை - 2021

சேதனப் பசளை உற்பத்தி மேம்பாடு மற்றும் விநியோக ஒழுங்குறுத்துகை மற்றும் நெல், தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு, விதை உற்பத்திகள் மற்றும் உயர் தொழில்நுட்ப கமத்தொழில் இராஜாங்க அமைச்சு

இராஜாங்க அமைச்சர் - **ஷஷீந்திர ராஜபக்ஷ**

செயலாளர் - **திரு. எம்.என் ரணசிங்க**

2235/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் 2021 ஆம் ஆண்டின் ஜூலை மாதம் 07 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நெல் மற்றும் தானியவகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாட்டு, விதை உற்பத்தி மற்றும் உயர்தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சு (செலவுத் தலைப்பு 425) மற்றும் சேதன மற்றும் இயற்கை உர உற்பத்தி, வழங்கல்கள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சு (செலவுத் தலைப்பு 426) என்பன ஒன்றிணைக்கப்பட்டன.

உள்ளடக்கம்

அத்தியாயம் 01	நிறுவன விபரம் / நிறைவேற்றுச் சுருக்கம்	7-11
அத்தியாயம் 02	முன்னேற்றம், எதிர்கால நோக்கு மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள்	12-156
அத்தியாயம் 03	வருடத்தின் ஒட்டுமொத்த நிதிசார் செயலற்றுகை	157-186
அத்தியாயம் 04	செயலாற்றுகை குறிகாட்டிகள்	187
அத்தியாயம் 05	நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) பூர்த்தி செய்வது தொடர்பான செயலற்றுகை	188-189
அத்தியாயம் 06	மனிதவள விபரம்	189-190
அத்தியாயம் 07	இணக்கப்பாட்டு அறிக்கை	191-204

நிறுவன விபரம் / நிறைவேற்றுச் சுருக்கம்

2021 ஆம் ஆண்டில் உலகின் அபிவிருத்தி செயல்முறைகளின் மீது காணப்பட்ட பல்வேறு விதமான சூழல் மற்றும் மனித தாக்கங்கள் காரணமாக விவசாயத் துறையின் தொடர்ச்சியான அபிவிருத்தியை உறுதி செய்வதற்கு பல முக்கிய சவால்களை வெற்றிகொள்ள வேண்டியிருந்தது. அவ்வப்போது ஏற்பட்ட தொற்றுநோய்ப் பரவல்கள், விவசாயத் துறையில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள், புதிய நோக்கு, பசுமை விவசாயத்திற்கான கொள்கை உருவாக்கம், புதிய தொழில்நுட்பங்களின் பயன்பாடு, புதிய பயிர்ச் செய்கை முறைகளைப் பின்பற்றல், (பாதுகாக்கப்பட்ட இல்லங்களில் மேற்கொள்ளும் பயிர்ச் செய்கை மற்றும் அவற்றின் பன்முகத்தன்மையை அடையாளம் காணல் போன்ற) என்பன சவால்களை வெற்றிகொள்ள வேண்டிய முக்கிய துறைகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. அதேபோன்று, 2021 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து அதிகரித்து வந்த கொவிட் 19 தொற்றுநோய்ப் பரவலுக்கு மத்தியில் விவசாய அபிவிருத்தியை தங்குதடையின்றி மேற்கொள்வது என்பது ஒரு பாரிய சவாலாக காணப்படுகிறது.

ஆயினும்கூட, விவசாயத் துறையுடன் இணைந்து பயணிக்கும் நீர்ப்பாசனம், கால்நடைகள் மற்றும் கிராமியப் பொருளாதார அபிவிருத்தி போன்ற அனைத்து பரந்த விடயப் பரப்புகளையும் அணிதிரட்டுவதன் மூலம் ஒட்டுமொத்த விவசாயத் துறையின் அபிவிருத்தி தொடர்பான சவால்களை வெற்றிகொள்வதற்கு கமத்தொழில் இராஜாங்க அமைச்சு தற்போது திடசங்கற்பம் பூண்டுள்ளது.

மேலும், புவி வெப்பமடைதல் மற்றும் காலநிலை மாற்றம் என்பன காரணமாக விவசாயத்தின் மீதும் மனித வாழ்க்கை முறையின் மீதும் அவை பெரும் தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றன. மண் சரிவு, வறட்சி மற்றும் வெள்ளப் பெருக்கு போன்ற அனர்த்தங்கள் விவசாய நடவடிக்கைகள் மீது தீவிரமான தாக்கங்களை ஏற்படுத்துவதுடன் அவற்றின் மூலம் ஏற்படும் பின்னடைவுகளைத் தடுப்பதற்காக அடையாளம் காணப்பட்ட விஷேட துறைகளான காலநிலைத் தாக்கங்களைக் குறைத்தல், சந்தைப்படுத்தல், மனித வள அபிவிருத்தி, பயிர் உற்பத்தித்திறனை அதிகரித்தல் மற்றும் வன விலங்குப் பாதிப்புகள் மற்றும் அறுவடைக்கு பிந்தைய இழப்புகளைக் குறைத்தல் போன்ற துறைகளை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நிலைபேறான விவசாயப் பொருளாதாரத்தின் மூலம் சுபீட்சத்தை உருவாக்க மேற்கொள்ளும் இப்பயணத்தில், கிராமிய மக்களின் வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் நிலைபேறான விவசாயத்தை கட்டியெழுப்புதல் என்பவை தொடர்பாக அரசாங்கம் மேற்கொண்டுவரும் வேலைத்திட்டங்களை மேலும் பலப்படுத்துவது நமது பொறுப்பாகக் காணப்படுகிறது.

அதன்படி, பிராந்திய அபிவிருத்தியில் விவசாயத் துறையின் ஊடாக மேலும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய பகுதிகள் மற்றும் இதுவரைக்கும் அபிவிருத்தியில் குறைவாகக் கவனம்செலுத்தப்பட்ட பிரதேசங்களை அடையாளம் கண்டு, அவற்றில் காணப்படும் வளங்களை முறையாக முகாமைத்துவம் செய்வதன் மூலம் விவசாய உற்பத்திகளின் உற்பத்தித்திறனை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும். அதேபோன்று, பண்டைய விவசாய வாழ்க்கை முறையுடன் இணைந்த கால்நடை வளர்ப்பு மற்றும் நீர்ப்பாசன தொழில்நுட்பம் ஆகியவற்றை விருத்தி செய்வதன் மூலம் கிராமப்புற பொருளாதாரத்தை தன்னிறைவு பெற்றதாக மாற்ற முடியும் என்றும் உணரப்படுவதால் அத்துறைகளை மேலும் அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் 2030 ஆண்டளவில் வெற்றிகொள்ள வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளில், நிலைபேறான விவசாயத் துறையை ஊக்குவிப்பதற்கான பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல் மற்றும் நிலைபேறான விவசாயத்தை ஊக்குவிக்கும் விஷேட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உர மானியத்தை வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன் அதன் மூலம், நெற் செய்கைக்குத் தேவையான உர வகைகளை விவசாயிகளுக்கு இலவசமாக விநியோகம் செய்தல் மற்றும் ஏனைய பயிர்களுக்குத் தேவையான உர வகைகளை மானிய விலைக்கு வழங்குதல் ஆகியவற்றுக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

உர உற்பத்தி மற்றும் வழங்கல்கள், இரசாயன உரங்கள் மற்றும் கிருமிநாசினி பாவனை ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சின் கீழ் செயற்படும் நிறுவனமான தேசிய உரச் செயலகத்தின் ஊடாக அரசாங்கத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக நெல் மற்றும் ஏனைய பயிர்களுக்கான உர மானிய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல் மற்றும்

மாவட்ட ரீதியாக உர மாதிரிகளை பரிசோதித்தல், விவசாயிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல், மாவட்ட உரக் குழுக் கூட்டங்களை நடாத்துதல் மற்றும் சேதன உரப் பாவனையை ஊக்குவிக்கும் நிகழ்சிகளை நடாத்துதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் மூலம் தரத்தில் சிறந்த உர வகைகளின் பாவனையை ஊக்குவித்தல் மற்றும் ஒழுங்குறுத்துகை மேற்கொள்ளல், விவசாயிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல் மற்றும் சேதன உரப் பாவனை தொடர்பாக விவசாயிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்ற பெறுபேறுகளை அடைந்துகொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

தொலைநோக்கு

உலகின் சேதன விவசாயத்தை மேற்கொள்ளும் நாடுகளில் முதன்மை நாடாக இலங்கை மாறல்.

செயற்பணி

விவசாயிகளை பசுமை விவசாயத்தின் பங்குதாரர்களாக மாற்றிக்கொள்ளும் பொருட்டு அவர்களுக்கு அறிவு, உயர் தொழில்நுட்பம் மற்றும் தேவையான உதவிகளை வழங்குதல், பசுமை விவசாயச் செய்கைக்குத் தேவையான சேதன உர உற்பத்தி மேற்கொள்ளும் பொருத்தமான தொழில்முனைவோரை உருவாக்குதல், அவற்றின் பாவனையை ஊக்குவித்தல் மற்றும் உயர் தரப் பண்புகளைக் கொண்ட உணவு வகைகளை சந்தைக்கு அறிமுகம் செய்து, உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல்.

விடயப் பரப்பு

"சுபீட்சத்தின் நோக்கு" எனும் தேசிய கொள்கையின் அடிப்படையில் அமைந்த பொருளாதார அபிவிருத்தி மற்றும் சமூக முன்னேற்றம் என்பவற்றை துரிதப்படுத்துவதுடன் தொடர்பான கொள்கைகளுக்கு அமைவான திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.

பணிகளும் செயற்பாடுகளும்

கமத்தொழில் அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதலின் பிரகாரம், **'தரச் சிறப்புமிக்க சூழல் நட்பு சேதன உரங்களின் பயன்பாட்டை ஊக்குவித்தல் மற்றும் உயர் தொழில்நுட்ப விவசாயத்தை உருவாக்குதல்"** என்பதுடன் தொடர்பான சட்டங்கள் மற்றும் சட்ட விதிகளுக்கு அமைவாக, சேதனப் பசளை உற்பத்தி மேம்பாடு மற்றும் விநியோக ஒழுங்குறுத்துகை மற்றும் நெல், தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு, விதை உற்பத்திகள் மற்றும் உயர் தொழில்நுட்ப கமத்தொழில் இராஜாங்க அமைச்சின் விடயப் பரப்புடன் தொடர்பான கொள்கைகளை உருவாக்குவதற்கு உதவுதல், தேசிய வரவுசெலவுத் திட்டம், அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் ஆகியவற்றின் கீழ் உள்ள செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் அமைச்சின் கீழ் செயற்படும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் அமைப்புச் சட்ட நிறுவனங்கள் ஆகியவற்றின் செயற்பாடுகள் மற்றும் பணிகள் மற்றும் அவற்றுடன் தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

விஷேட முன்னுரிமைகள்

(1) நெல், தானிய வகைகள், மிளகு, கிராம்பு, கொக்கோ உள்ளிட்ட பிரதான பயிர்கள் மற்றும் காய்கறிகள், பழங்கள் மற்றும் வீட்டுத் தோட்டச் செய்கை என்பவற்றுக்கு தொழில்நுட்ப பயிர்ச் செய்கை முறைகள், உயர்தர விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் மற்றும் உரிய தரத்தைக் கொண்ட சூழல் நட்பு சேதன உரங்களை உரிய நேரத்தில் விநியோகிப்பதற்கான வழிமுறைகளைத் தயாரித்தல்.

(2) உள்நாட்டு மூலப்பொருட்களைப் பயன்படுத்தி சர்வதேச தர நிரனயங்களுக்கு ஏற்றசூழல் நட்பு சேதன உர வகைகளை உற்பத்தி செய்தல் மற்றும் உயர் தரத்திலான உர வகைகளை உள்நாட்டிலே உற்பத்தி செய்தல் என்பவற்றை ஊக்குவித்தல்.

(3) உள்நாட்டு விவசாயிகள் மற்றும் நுகர்வோர் திருப்தியுறும் வகையிலான நியாயமான விலைக் கொள்கைகள் மற்றும் பயிர்களைப் பன்முகப்படுத்துதல் என்பவற்றுக்கு உரிய நிறுவனங்களுடன் இணைந்து செயற்படல்.

(4) சேதனப் பசளைகளின் பயன்பாடு மற்றும் நச்சுத்தன்மையற்ற உணவு உற்பத்தி என்பவற்றை ஊக்குவிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

(5) சேதன மரக்கறி மற்றும் பழங்களின் நுகர்வினைக் குடும்ப மட்டத்தில் விரிவுபடுத்துவதற்காக சமுர்த்தி மற்றும் குறைந்த வருமானம் பெருவோருக்கான வீட்டுத்தோட்டச் செய்கை நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.

(6) செத்தல் மிளகாய், சோளம், சோயா, பயறு, கௌபீ, வெங்காயம், உருளைக்கிழங்கு போன்ற உற்பத்திகளை அதிகரிப்பதன் மூலம் அவற்றின் இறக்குமதிகளைக் குறைத்தல்.

(7) மேலதிக உற்பத்திகளைக் களஞ்சியப்படுத்தல் மற்றும் பெறுமதி சேர்ப்பதன் மூலம் அவற்றை ஏற்றுமதி செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தலும் அதற்கான செயற்றிட்டமொன்றை நடைமுறைப்படுத்தலும்.

(8) விவசாய உற்பத்திகளைப் பெறுமதி சேர்த்து ஏற்றுமதி செய்வதற்கான விவசாய அறுவடைகளைக் களஞ்சியப்படுத்தல் மற்றும் பதனிடும் நிலையங்களை ஏற்படுத்துதல்.

(9) மரக்கறி வகைகள், பழவகைகள் தொடர்பான ஏற்றுமதி உற்பத்தித் தொழில்துறையை மேம்படுத்துவதற்கான திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.

(10) சர்வதேச மட்டத்தில் தரமான விதைகளை உற்பத்தி செய்வதற்காக உள்நாட்டு விதை உற்பத்திக் கொள்கைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்.

(11) ஏற்றுமதி விதைகளின் தரத்தை உறுதிப்படுத்துவதற்காக இலங்கைத் தரக்கட்டுப்பாட்டு நிறுவனத்தின் மூலம் தரச்சான்றிதழ் ஒன்றின் அடிப்படையில் அதற்கான இறக்குமதிகளை மேற்கொள்ளுதல்.

(12) தரமான விதைகள் மற்றும் பயிர் நடுகைகளுக்கான பொருட்களை உற்பத்தி செய்வதற்குத் தனியார் துறையினரை ஊக்குவித்தல்.

(13) தனித்துவமான தரத்தினைக் கொண்ட மற்றும் நோய்களுக்குத் தாங்கு திறன் கொண்ட மற்றும் கூடிய விளைச்சலைத்தரும் விதைகள் மற்றும் நாற்று வகைகளை அறிமுகப்படுத்துதல்.

(14) அரச பண்ணைகள் மற்றும் விவசாய உற்பத்திப் பண்ணைகள் என்பவற்றை அபிவிருத்தி செய்தலும் நிவாரணச் சேவைகளும்.

(15) புதிய தொழில்நுட்ப அடிப்படையில் நிலத்தடி நீர், நிலத்தை தயார்படுத்தல், விதைகள், கன்றுகளைத் தெரிவு செய்தல் பசளையிடல், அறுவடைக்குப் பின்னர் மற்றும் முன்னரான நிலைமைகள் தொடர்பாக பிரதேச மட்டத்தில் ஆராய்ந்து விவசாயிகளுக்கு அறிவூட்டல்.

(16) தொழில்நுட்ப விவசாயத்தின்மீது ஈடுபாடு கொள்ளும் வகையில் தேவையான அறிவு, தொழில்நுட்ப உபகரணங்கள், காணிகள் பயன்பாடு, நிதி வழங்கல் மூலம் சந்தைப் பெறுமதி சேர்க்கப்பட்டு கைத்தொழில் உற்பத்திமீது ஈடுபாடு கொள்ளல்.

(17) அறுவடை செய்யும்போதும் ஏற்றிச் செல்லும்போதும் இறக்கும் போதும் ஏற்படும் வீண்விரயங்களைத் தடுப்பதற்காகப் புதிய தொழில்நுட்பமுறைகளைப் பயன்படுத்துவதனூடாகத் தனியார் மற்றும் அரசாங்கத் துறையை ஒருங்கிணைக்கும் வேலைத்திட்டமொன்றை முன்னெடுத்தல்.


(18) நீரினைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதன் மூலம் கூடிய அறுவடையைப் பெறும் செயன்முறையொன்றை அறிமுகப்படுத்தி நீரிலிருந்து உச்சப் பொருளாதாரப் பயனைப் பெறுதல்.

1அமைச்சுடன் தொடர்பான தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்

திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்	நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்
1. தேசிய உரச் செயலகம் 2. வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி 3. கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி 4. இலங்கை பட்டினி ஒழிப்பு இயக்க சபை (தேசிய உணவு ஊக்குவிப்புச் சபை) 5. பிராந்திய பொருளாதார மத்திய நிலையங்கள் 6. கமநல அபிவிருத்தித் திணைக்களம் 7. தேசிய பின் அறுவடைத் தொழில்நுட்பவியல் நிறுவகம்	• உர ஒழுங்குறுத்துகைச் சட்டம் (1988 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க) • இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சட்டம் (1973 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) • பீடைநாசினிகளைக் கட்டுப்படுத்தும் சட்டம் (1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க) • தாவரப் பாதுகாப்புச் சட்டம் (1999 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க) • கிராமோதய சபைச் சட்டம் (1982ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க) • கமநல அபிவிருத்திச் சட்டம் (2000ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க) • மரங்களை வெட்டிச் சாய்த்தல் (கட்டுப்பாட்டுச்) சட்டம் (1951 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க) • விதை நெல் சட்டம் (2003 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க) • மண்வளம் பேணல் சட்டம் (1996 ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க)

நிறுவனக் கட்டமைப்பு

07.07.2021 திகதிக்குரிய 2235/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் படி,, நெல் மற்றும் தானியவகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாட்டு, விதை உற்பத்தி மற்றும் உயர்தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சு மற்றும் சேதனப் பசளை உற்பத்தி மேம்பாடு மற்றும் விநியோக ஒழுங்குறுத்துகை மற்றும் நெல், தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு, விதை உற்பத்திகள் மற்றும் உயர் தொழில்நுட்ப கமத்தொழில் இராஜாங்க அமைச்சு மற்றும் உர உற்பத்தி மற்றும் வழங்கல்கள், இரசாயன உரங்கள் மற்றும் கிருமிநாசினி பாவனை ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சு என்பன ஒன்றிணைக்கப்பட்டு ***சேதனப் பசளை உற்பத்தி மேம்பாடு மற்றும் விநியோக ஒழுங்குறுத்துகை மற்றும் நெல், தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு, விதை உற்பத்திகள் மற்றும் உயர் தொழில்நுட்ப கமத்தொழில் இராஜாங்க அமைச்சாக*** *நிறுவப்பட்ட பின்னரான* ***நிறுவனக் கட்டமைப்பு.***



நி.அ – நிருவாக அதிகாரி ப.உ -பதவிநிலை உத்தியோகத்தர் அ.உ – அபிவிருத்தி உதவியாளர் மு.சே.– முகாமைத்துவ சேவை உதவியாளர் க.சே.உ.– காரியாலய சேவை உதவியாளர்

இ.நி.சே – இலங்கை நிருவாக சேவை
இ.வி.சே – இலங்கை விவசாய சேவை
இ.தி.சே – இலங்கை திட்டமிடல் சேவை
இ.க.சே – இலங்கை கணக்காளர் சேவை



2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

நிறுவனத்தின் பெயர் - நெல் மற்றும் தானியவகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாட்டு, விதை உற்பத்தி மற்றும் உயர்தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சு

செலவுத் தலைப்பு - 425

அத்தியாயம் 01 - நிறுவன விபரம் / நிறைவேற்றுச் சுருக்கம்

தேசிய கொள்கை தேசிய கொள்கையை நடைமுறைப்படுத்தல்
தேசிய கொள்கை - "சுபீட்சத்தின் நோக்கின் வழியில் "
மக்கள் மையப் பொருளாதாரம்

'சுபீட்சத்தின் நோக்கு' தேசிய கொள்கைக்கு அமைவாக நெல் மற்றும் தானியவகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாட்டு, விதை உற்பத்தி மற்றும் உயர்தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சின் நிகழ்ச்சித் திட்டங்கள்,

- விவசாயத் துறையைக் கைவிட்டு வேறு தொழில்களை நோக்கி செல்வதற்குப் பதிலாக பிற தொழில்களில் ஈடுபடுவோரையும் கவரக்கூடிய ஒரு தொழிற்துறையாக விவசாயத் துறையை மாற்றுதல். குறைந்த இடப் பரப்பில், குறைந்த உற்பத்திச் செலவில், உயர்ந்த தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி, உயர் தரத்தைக் கொண்ட, உயர் விளைச்சலை தரக்கூடிய அபிவிருத்தியடைந்த விவசாய பொருளாதாரத்தை கட்டியெழுப்புதல் எனும் கொள்கையை நடைமுறைப்படுத்தும் வகையில் எதிர்கால நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

விவசாய அபிவிருத்தியின் முக்கிய நோக்கங்கள்

- உயர் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளுக்கு ஊடாக விவசாய அபிவிருத்தி
- பாதுகாப்பான உணவுக்கான மக்களின் உரிமைக்கு உத்தரவாதமளிக்கும் ஆரோக்கியமான மற்றும் பயனுறுதிமிக்க தேசத்தைக் கட்டியெழுப்புதல்
- புதிய தொழில்நுட்பங்களைக் கொண்டு உருவாக்கப்படும் பல்வேறு பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளின் ஊடாக சர்வதேச ஏற்றுமதி நடவடிக்கைகள்

முக்கிய இலக்குகள்/ செயற்பாடுகள்

- விவசாயிகள் பொதுநலனை உறுதி செய்தல்
- நில உற்பத்தித்திறனை அதிகரித்தல்
- விவசாயத் துறையை நவீனமயமாக்குதல்
- இளைஞர் தொழில்முனைவுகளை ஊக்குவித்தல்
- உரப் பயன்பாட்டில் ஒரு புரட்சியை ஏற்படுத்தல்
- விதைகள் மற்றும் நடுகைப் பொருட்களின் உற்பத்தி
- பொதி செய்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல்
- சந்தைப்படுத்தல் மற்றும் போக்குவரத்து
- விவசாயப் புத்தாக்கங்களுக்கான ஆராய்ச்சிகள்
- நெற் செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு உதவுதல்
- பயிர்கள் / பால் மற்றும் பால் உற்பத்திப் பொருட்கள் / கடற்றொழில் உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்தல் .

1.2 கமத்தொழில் இராஜாங்க அமைச்சின் தொலைநோக்கு, செயற்பணி, நோக்கங்கள்

1.2.1 தொலைநோக்கு

உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கான ஒருங்கிணைந்த அணுகுமுறையைக் கொண்ட நிலைபேறான விவசாயத்துறை

1.2.2 செயற்பணி

வரையறுக்கப்பட்ட வளங்களை வினைத்திறனாகவும் பயனுறுதிமிக்க முறையிலும் பயன்படுத்துவதன் மூலம் சிறந்த நிறுவன மற்றும் தனிநபர் ஒருங்கிணைப்புகள் மூலம் போட்டித்தன்மைமிக்க தொழில்முனைவு விவசாயத் துறையை உருவாக்குதல்

1.2.3 நோக்கங்கள்

- *பாரம்பரிய விவசாயிகள், இளைஞர் சமூகம் மற்றும் மாணவ மாணவிகளுக்கு நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய விவசாயக் கல்வி வாய்ப்புகளை வழங்கும் நோக்கில் ஒவ்வொரு இலக்குக் குழுவிற்கும் பொருத்தமான விவசாய தொழில்நுட்ப அறிவை விரிவுபடுத்துதல்*
- *இளம் விவசாய தொழில்முனைவோர் உருவாக்கத்தை ஊக்குவித்தல்*
- *விவசாயத் துறையைக் கட்டியெழுப்புவதை இலக்காகக்கொண்டு சம்பந்தப்பட்ட அனைத்து நிறுவனங்களையும் ஒருங்கிணைக்கும் ஒரு பொறிமுறையுடன் கூடிய அணுகுமுறையை உருவாக்கி செயல்படுத்தல்.*
- *விவசாயத்தில் பயன்படுத்தப்படும் இரசாயன பீடைகொல்லிகள் மற்றும் ஏனைய இரசாயன சேர்வைகள் நிர்ணயிக்கப்பட்ட தரத்தைக் கொண்டதாக இருப்பதை ஒழுங்குபடுத்தி செயல்படுத்துதல்.*
- *விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதி உதவிகள், பயிர் காப்பீட்டுத் திட்டங்கள் மற்றும் விவசாயிகளுக்கான ஓய்வூதியத் திட்டங்களை விரிவாக்கம் செய்தல்.*
- *நேரடி உற்பத்தியாளர்கள், பதனிடும் நிறுவனங்கள், மொத்த விற்பனை நிறுவனங்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் ஆகியோருக்கு இடையிலான விநியோக இணைப்புகளை வலுப்படுத்துவதன் மூலம் விவசாயிகளின் உற்பத்திகளுக்கு அதிக விலைகளை பெற்றுக் கொடுத்தல்.*
- *தயாரிப்புகளுக்கான சந்தைப்படுத்தல் வசதிகளை ஏற்படுத்துவதற்கான புதிய மூலோபாய திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்.*
- *அறுவடை மேற்கொள்ளும் காலங்களில் திட்டமிட்ட வகையில் அரசு தலையீடு செய்வதன் மூலம் உற்பத்தியாளர்களின் வருமானம் வீழ்ச்சியடையாமல் பாதுகாத்தல்.*
- *விவசாய சமூகத்திற்கு தரமான விதைகள் மற்றும் நாற்றுகளை வழங்குவதற்கான வழிமுறைகளை நடைமுறைப்படுத்தல்.*
- *நீர் முகாமைத்துவம் மற்றும் விவசாயிகளின் பயிர்ச்செய்கைத் தேவைகளுக்கு ஏற்ப நீர் விநியோகத்தை முகாமைத்துவம் செய்தல்.*

1.2.4 புதிய விடயப் பரப்பு

தேசிய விவசாயக் கொள்கையொன்றின் அடிப்படையில், நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலம் சுபீட்சம் மிக்க உள்நாட்டு விவசாயக் கலாச்சாரம் மற்றும் விவசாய வர்த்தக சமூகமொன்றை உருவாக்கி நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்வதற்கும், உள்நாட்டு மற்றும் சர்வதேச நுகர்வோருக்கு போதுமான அளவு நச்சுத்தன்மையற்ற, தரத்தில் சிறந்த உணவு மற்றும் விவசாய தயாரிப்புகளை வழங்குவதற்கும், விவசாய வளங்களை உயர் பயனுறுதித் தன்மையுடன் கூடியாதாக பயன்படுத்துவதன் மூலம் உணவுப் பாதுகாப்பு, விவசாய சமூகத்தின் வாழ்வாதார வழிகளை மேம்படுத்துதல், தங்கி வாழும் விவசாய வழிமுறைக்குப் பதிலாக வர்த்தக ரீதியாக செயலூக்கம் மிக்க புதிய தொழில்நுட்ப விவசாய உற்பத்தித் துறையை நோக்கி நகர்தல் மற்றும் விவசாய தொழில்மயமாக்கல் செயற்பாடுகளுக்கு *(Agro Industrialization)* காலயெடுத்து வைப்பதன் மூலம் அனைத்துப் பங்குதாரர்களையும் உள்வாங்கிய பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

1.2.5 கடமைகளும் பணிகளும்

'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாக அல்லது அரசினால் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கும் வேறு தேசிய கொள்கைகளின் மீது அமைந்ததாக புதிய தொழில்நுட்ப விவசயாத் துறையை உருவாக்கும் பொருட்டு உரிய இராஜாங்க அமைச்சுக்கு கொள்கை ரீதியான வழிகாட்டலை வழங்குதல், விதித்துரைக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய விவசாயம் எனும் விடயத்துடனுடன் தொடர்பான கொள்கை வகுத்தல், தேசிய வரவுசெலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளின் கீழான நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்தல்.

1.2.6 விஷேட துறைகள்

- விவசாயிகளுக்கு நியாயமான விலை
- ஆரோக்கியமான உணவு
- உற்பத்தி மற்றும் உற்பத்திப் பயனுறுதித் தன்மையை அதிகரித்தல்
- விதை மற்றும் நடுகைப் பொருட்களில் தன்னிறைவு அடைதல்
- அறுவடைக்குப் பிந்திய முகாமைத்துவம்
- நவீன தொழில்நுட்பம்
- நீர் முகாமைத்துவம்


1.2.7 அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்கள் மற்றும் சட்டவிதிகள்

திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்	நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்
1.பிராந்திய பொருளாதார மத்திய நிலையம் *2.நெல் சந்தைப்படுத்தல் சபை (PMB)* *3.கமநல அபிவிருத்தித் திணைக்களம் (DAD)* *4.ஹெக்டர் கொப்பேகடுவ கமத்தொழில் ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம் (HARTI)* *5.இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கைகளுக்கான மன்றம் (SLCARP)* *6. தேசிய அறுவடைக்கு பிந்தைய முகாமைத்துவ நிறுவனம் (NIPHM)*	*நெல் சந்தைப்படுத்தல் சபைச் சட்டம் (1971 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க)* *கமநல அபிவிருத்திச் சட்டம் (2000ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க)* *கமநல நடவடிக்கைகள் ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவகச் சட்டம். (1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க)* *விவசாய ஆராய்ச்சிக் கொள்கைகளுக்கான இலங்கை மன்றச் சட்டம் (1987 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க)* *கிராமோதய சபைச் சட்டம் (1982ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க)* *மரங்களை வெட்டிச் வீழ்த்தல் (கட்டுப்பாட்டுச்) சட்டம் (1951 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க)* *விதை நெல் சட்டம் (2005 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க)* *மண் பாதுகாப்புச் சட்டம் (1951 ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க)*

1.3. நிறுவனக் கட்டமைப்பு

நெல் மற்றும் தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு, விதை உற்பத்தி மற்றும் உயர் தொழினுட்ப கமத்தொழில் இராஜாங்க அமைச்சு

நிறுவனக் கட்டமைப்பு



அத்தியாயம் 02

முன்னேற்றம் மற்றும் எதிர்கால தொலைநோக்கு, விஷேட அடைவுகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்

செலவுத் தலைப்பு - 425

2. முன்னேற்றம், எதிர்கால நோக்கு மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள்

நெல் மற்றும் தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு, விதை உற்பத்தி மற்றும் உயர் தொழினுட்ப கமத்தொழில் இராஜாங்க அமைச்சு

செலவுத் தலைப்பு 425 - அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் - 2021 டிசம்பர் மாதம் இறுதி வரையான நிதிசார் முன்னேற்றம் - சுருக்கம்

அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் முன்னேற்றம் (சுருக்கம்) - 2021/12/31 வரை

தொ/ இல	செலவுத் தலைப்பு	நிகழ்ச்சித் திட்டங்கள்/ செயற்திட்டத்தின் பெயர்	வரவுசெலவு ஒதுக்கீட்டுத் தொகை (மில். ரூபா) (1)	அங்கீகரிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்கான ஒதுக்கீட்டுத் தொகை (மில். ரூபா) (2)	திரள் செலவு (மில். ரூபா) (3)	(3)/ (2) (%)
1	425-2-03-004-2509	உணவுப் பாதுகாப்பு தொடர்பான விஷேட நிகழ்ச்சித் திட்டம்	4,630.00	4,119.46	2,502.65	61
	உப கூட்டுத்தொகை - i		**4,630.00**	**4,119.46**	**2,502.65**	**61**
2	425-2-03-002-2201	தேசிய அறுவடைக்கு பிந்தைய முகாமைத்துவ நிறுவனம் – மூலதன செலவுகள்	34.00	9.85	4.38	45
3	425-2-03-008-2506	பொருளாதார மத்திய நிலையங்கள்	300.00	250.00	35.34	14
4	425-2-03-010-2202	சூழல் நட்பு சேதனப் பயிர்ச்செய்கை மற்றும் சேதன உர ஊக்குவிப்பு தேசிய நிகழ்ச்சித் திட்டம்	70.00	70.00	58.55	84
	உப கூட்டுத்தொகை - ii		**404.00**	**329.85**	**98.27**	**30**
5	செலவுத் தலைப்பு - 281	கமநல அபிவிருத்தித் திணைக்களம் - மூலதன செலவுகள்	1,984.00	1,984.00	1535.73	77
	உப கூட்டுத்தொகை- iii		**1,984.00**	**1,984.00**	**1535.73**	**77**
	மொத்த கூட்டுத்தொகை - (i+ii+iii)		**7,018.00**	**6,433.31**	**4,136.65**	**64**

2.1 உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கான விஷேட நிகழ்ச்சித் திட்டம்

அறிமுகம்

2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையினால் முதன்முறையாக உணவுப் பாதுகாப்புத் தினம் பிரகடனப்படுத்தப்பட்டது. உலக உணவுப் பாதுகாப்பு தினமாக ஜூன் மாதம் 7ஆம் திகதி தீர்மானிக்கப்பட்டுள்ளது. 'உணவுப் பாதுகாப்பு - அனைவரினதும் பொறுப்பாகும்' *(Food safety – everyone's business).* ''ஆரோக்கியமான சந்தையை உருவாக்குவதன் மூலம் கொவிட் *-19* தொற்றைத் தடுப்போம் - உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வோம்'' என்பதே இவ்வருடத்தின் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கான கருப்பொருளாகும். இந்தக் கருப்பொருளின் இலக்கை வெற்றிகொள்வதற்கும், சிறந்த ஆரோக்கியமான தேசத்தை கட்டியெழுப்புவதற்கும் கமத்தொழில் அமைச்சின் ஊடாக உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கான விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இலங்கையின் நிலைபேறான விவசாயத்துறையை ஊக்குவிப்பதற்கும் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கும், உலகளாவிய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதில் எதிர்நோக்கும் சவால்களை வெற்றி கொள்ளும் நடவடிக்கைளின் மூலம் *2021* ஆம் ஆண்டில் விவசாயப் பிரிவின் செயல்திறனை அதிகரிப்பதென்பது சவால்மிக்கதாகக் காணப்பட்டது.

எனினும், நிலைபேறான வாழ்வு மற்றும் சிறந்த சுகாதாரம் என்பவற்றை பேணிப் பாதுகாப்பது இன்றியமையாததாகும். இலங்கையைக் கருத்திற்கொள்ளும் பொழுது உணவுப் பாதுகாப்பு என்பது ஏற்கனவே ஒரு பாரிய சவாலாக இனங்காணப்பட்டுள்ளது. விவசாய பண்ணை நிலத்தில் இருந்தே உணவுப் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டியுள்ளதுடன், விவசாய இரசாயனப் பொருட்கள், பீடைநாசினிகள், பல்வேறுபட்ட ஓமோன்கள் என்பவற்றின் முறையற்ற பாவனையை தடுத்து நிறுத்துதல், இரசாயன பொருட்களின் பயன்பாடுகளைக் குறைத்தல், அடையாளம் காணப்படாத சிறுநீரக நோய்களினால் மக்கள் பாதிக்கப்படுவதை தடுத்தல், தொற்றுநோய் நிலைமைகள் காரணமாக உணவு உற்பத்தி பாதிக்கப்படுவதை தடுத்தல் மற்றும் அவசர நிலைமைகளில் கூட உணவு வழங்கல் தொடர்ச்சியாக நடைபெறுவதற்கு தேவையான களஞ்சிய வசதிகளை ஏற்படுத்தல், பயிர் இழப்புகளை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், உணவுப் பாதுகாப்பு தொடர்பாக காணப்படும் சட்டதிட்டங்களை புதுப்பித்தல், புதிய சட்டவிதிகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களுக்கு மத்தியில் சிறந்த ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி செயற்படுவதன் மூலம் உணவுப் பாதுகாப்பின்மையை குறைத்தல் என்பவற்றுக்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2.1.1 பயிர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

2.1.1.1 நெல் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை விருத்தி செய்யும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

மேல் மாகாணம்

செயற்பாடுகள்	2021 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	2021 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட ஒதுக்கீடு (மில். ரூபா)	நிதி முன்னேற்றம்		பௌதீக முன்னேற்றம்	
			செலுத்தப்பட்ட தொகை, கையில் உள்ள விலைப் பட்டியல்கள் மற்றும் பொறுப்புகள் (மில். ரூபா)	%	விபரங்கள்	%
வட்டுக் கலப்பை அல்லது இறக்கைக் கலப்பை மூலம் முறையான நிலப் பண்படுத்தலை மேற்கொள்வதற்கான மானியம் வழங்கல்	2.09	-	3.93	99		100
மண் வளத்தை மேம்படுத்துவதற்கான மானியம் வழங்கல்	0.93					100
விவசாயிகளின் 50% பங்களிப்புடன் பரசூட் தட்டுகளை வழங்கல்	0.84					100
விதை நெல் உற்பத்தியை அதிகரிப்பதற்கு விதை நெல் வழங்கல்	0.10					100
ஒருங்கிணைந்த பீடைக் கட்டுப்பாட்டு (IPM) நிகழ்ச்சிகளை நடத்துதல்						
விவசாயிகளுக்கான கள நாட்களை நடத்துதல் - IPM நிகழ்ச்சிகள்						
மொத்தம்	**3.96**		**3.93**	**99**		**100**

தென் மாகாணம்

செயற்பாடுகள்	2021 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	2021 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட ஒதுக்கீடு (மில். ரூபா)	நிதி முன்னேற்றம்		பௌதீக முன்னேற்றம்	
			செலுத்தப்பட்ட தொகை, கையில் உள்ள விலைப் பட்டியல்கள் மற்றும் பொறுப்புகள் (மில். ரூபா)	%	விபரங்கள்	%
வட்டுக் கலப்பை அல்லது இறக்கைக் கலப்பை மூலம் முறையான நிலப் பண்படுத்தலை மேற்கொள்வதற்கான மானியம் வழங்கல் (Rs 4500/ஏக்கர்)	1.37	-	2.60	91	75 ஏக்கர் நிலம் பண்படுத்தப்பட்டது 47.75 ஏக்கர் நிலம் பண்படுத்தப்பட்டது	100
இயந்திரமயமாக்கலை இலகுபடுத்தும் பொருட்டு நெற் காணிகளை ஒருங்கிணைப்பதற்கான மானியம் (1000 ரூபா./ ஏக்கர்) வழங்கல்.	0.60				55 ஏக்கர் நிலம் பண்படுத்தப்பட்டது	100
மண் வளத்தை அதிகரிப்பதற்காக மானியம் (2000 ரூபா./ ஏக்கர்) வழங்கல் (கரி, சேதன உரம்)	0.61				109 ஏக்கர் நிலம் பண்படுத்தப்பட்டது .	26
விவசாயிகளின் 50% பங்களிப்புடன் பரசூட் தட்டுகளை வழங்கல் (400 தட்டுகள்/ ஏக்கர்)	0.25				7750 தட்டுகள் கொள்வனவு மற்றும் 15 பொதிகள் கொள்வனவு	
விதை நெல் உற்பத்தியை அதிகரிக்க விதை நெல் வழங்கல்	0.02				100 பொதிகள் கொள்வனவு	
மொத்தம்	**2.86**		**2.60**	**91**		

மத்திய மாகாணம்

செயற்பாடுகள்	2021 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	2021 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட ஒதுக்கீடு (மில். ரூபா)	நிதி முன்னேற்றம்		பௌதீக முன்னேற்றம்	
			செலுத்தப்பட்ட தொகை, கையில் உள்ள விலைப் பட்டியல்கள் மற்றும் பொறுப்புகள் (மில். ரூபா)	%	விபரங்கள்	%
வட்டுக் கலப்பை அல்லது இறக்கைக் கலப்பை மூலம் முறையான நிலப் பண்படுத்தலை மேற்கொள்வதற்கான மானியம் வழங்கல்	2.79	-	7.97	100	100% இலக்கு அடையப்பட்டுள்ளது.	100
மண் வளத்தை அதிகரிப்பதற்காக மானியம் (2000 ரூபா./ ஏக்கர்) வழங்கல் (கரி, சேதன உரம், டொலமைட் போன்றன)	1.24					100
விவசாயிகளின் 50% பங்களிப்புடன் பரசூட் தட்டுகளை வழங்கல் (400 தட்டுகள்/ ஏக்கர்)	2.76					100
விதை நெல் உற்பத்தியை அதிகரிக்க விதை நெல் வழங்கல் (ஒரு விவசாயிக்கு 2 kg வீதம்)	0.10					100
ஒருங்கிணைந்த பீடைக் கட்டுப்பாட்டு நிகழ்ச்சிகள் மற்றும் பயிற்சி முகாம்களை நடத்துதல்	0.35					100
அதிகாரிகள் மற்றும் விவசாயிகளுக்கு பயிற்சியளிக்கும் நிகழ்ச்சிகளை நடாத்தல்.	0.04					100
காணி ஒருங்கிணைப்பு	0.50					100
நிருவாக செலவு (2.5%)	0.19					100
மொத்தம்	**7.98**		**7.97**	**100**		

வட மத்திய மாகாணம்

செயற்பாடுகள்	2021 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	2021 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட ஒதுக்கீடு (மில். ரூபா)	நிதி முன்னேற்றம்		பௌதீக முன்னேற்றம்	
			செலுத்தப்பட்ட தொகை, கையில் உள்ள விலைப் பட்டியல்கள் மற்றும் பொறுப்புகள் (மில். ரூபா)	%	விபரங்கள்	%
நிலப் பண்படுத்தல்	1.62	-	4.52	81	360 ஏக்கர்	92
சேதனப் பொருட்கள்	0.72				360 மெற்றிக் தொன்	92
பரசூட் தட்டுகள்	1.44				72000 தட்டுகள்	35
விதை நெல்	0.06				2kg பொதிகள் - 360	93
ஒருங்கிணைந்த பீடைக் கட்டுப்பாட்டு நிகழ்ச்சிகள்	0.36				36 நிகழ்ச்சிகள்	11
பயிற்சி மற்றும் கள நாட்கள்	0.23				36 நிகழ்ச்சிகள்	100
நில ஒருங்கிணைப்பு	1.00				100 ஏக்கர்	79
நிருவாக செலவு (2.5%)	0.13					
மொத்தம்	**5.56**		**4.52**	**81**		

சப்ரகமுவ மாகாணம்

செயற்பாடுகள்	2021 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	2021 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட ஒதுக்கீடு (மில். ரூபா)	நிதி முன்னேற்றம்		பௌதீக முன்னேற்றம்	
			செலுத்தப்பட்ட தொகை, கையில் உள்ள விலைப் பட்டியல்கள் மற்றும் பொறுப்புகள் (மில். ரூபா)	%	விபரங்கள்	%
நிலப் பண்படுத்தல் மற்றும் சேதன உரம்	2.34	-	1.99	51	449 விவசாயிகளுக்கு 324.15 ஏக்கர் நிலப் பரப்பில் ஆழமான நிலப் பண்படுத்தல் மற்றும் கரிம உரங்களைப் பயன்படுத்தல் என்பவற்றுக்கு மானியம் வழங்கல்.	80
பரசூட் தட்டுகளை வழங்கல்	1.60					
மொத்தம்	**3.94**		**1.99**	**51**		80

கிழக்கு மாகாணம்

செயற்பாடுகள்	2021 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	2021 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட ஒதுக்கீடு (மில். ரூபா)	நிதி முன்னேற்றம்		பௌதீக முன்னேற்றம்	
			செலுத்தப்பட்ட தொகை, கையில் உள்ள விலைப் பட்டியல்கள் மற்றும் பொறுப்புகள் (மில். ரூபா)	%	விபரங்கள்	%
பரசூட் தட்டுகளை வழங்கல்	1.72	3.53	2.03	0.4		11
முறையான நிலப் பண்படுத்தல்	0.07				நிறைவு செய்யப்பட்டுள்ளது .	35
சேதனப் பொருட்கள்	0.86					67
விதை நெல்	0.07					33
நில ஒருங்கிணைப்பு	1.50					
பயிற்சி மற்றும் கள நாட்கள்	0.39					
IPM	0.43					
நிருவாக செலவு (2.5%)	0.08					
மொத்தம்	**5.12**	**3.35**	**2.03**	**0.4**		

வட மேல் மாகாணம்

செயற்பாடுகள்	2021 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	2021 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட ஒதுக்கீடு (மில். ரூபா)	நிதி முன்னேற்றம்		பௌதிக முன்னேற்றம்	
			செலுத்தப்பட்ட தொகை, கையில் உள்ள விலைப் பட்டியல்கள் மற்றும் பொறுப்புகள் (மில். ரூபா)	%	விபரங்கள்	%
நெற் செய்கையின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நிகழ்ச்சித் திட்டம்		-	7.86			
வட்டுக் கலப்பை அல்லது இறக்கைக் கலப்பை மூலம் முறையான நிலப் பண்படுத்தலை மேற்கொள்வதற்கான மானியம் வழங்கல் (4500 ரூபா./ ஏக்கர்)	2.70				394.5 ஏக்கர்	100
இயந்திரமயமாக்கலை இலகுபடுத்தும் பொருட்டு நெற் காணிகளை ஒருங்கிணைப்பதற்கு மானியம் (10,000 ரூபா./ ஏக்கர்) வழங்கல்.	1.00				57.5 ஏக்கர்	84
விதை நெல் உற்பத்தியை அதிகரிக்க விதை நெல் வழங்கல் (ஒரு விவசாயிக்கு 2 kg பொதி வீதம்)	0.10				437 பொதிகள் s	73
மண் வளத்தை அதிகரிப்பதற்காக மானியம் (2000 ரூபா./ ஏக்கர்) வழங்கல் (கரி, சேதன உரம், டொலமைட், போன்ற)	1.20				258.5 ஏக்கர்	43
600 இலை வண்ண அட்டவணைகளை வழங்கல்						
ஒருங்கிணைந்த பீடைக் கட்டுப்பாட்டு நிகழ்ச்சிகள் மற்றும் பயிற்சி முகாம்களை நடத்துதல்	0.60				60 IPM யாய நிகழ்ச்சிகள்/ கேள்விப்பத்திரம்	100
அதிகாரிகள் மற்றும் விவசாயிகளுக்கு பயிற்சியளிக்கும் நிகழ்ச்சிகளை நடாத்தல்.	0.38				26 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன	44
ஒவ்வொரு கமநல சேவைப் பிரிவிலும் விவசாயிகளுக்கான கள நாட்களை நடத்துதல்						
நிருவாக செலவு	0.21				முன்னேற்ற கண்காணிப்பு, கள விஜயம்	97
மொத்தம்	**8.59**		**7.86**	**91**		

ஊவா மாகாணம்

செயற்பாடுகள்	2021 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	2021 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட ஒதுக்கீடு (மில். ரூபா)	நிதி முன்னேற்றம்		பௌதீக முன்னேற்றம்	
			செலுத்தப்பட்ட தொகை, கையில் உள்ள விலைப் பட்டியல்கள் மற்றும் பொறுப்புகள் (மில். ரூபா)	%	விபரங்கள்	%
நிலப் பண்படுத்தல்	5.69	1.66	5.49		விவசாயிகள் செய்த வேலைகளுக்கு மட்டுமே கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது.	73
சேதனப் பொருட்கள்		0.74			விவசாயிகள் செய்த வேலைகளுக்கு மட்டுமே கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது.	92
பரசூட் தட்டுகள்		1.48				100
விதை நெல்		0.06				73
IPM		0.37				99
பயிற்சி மற்றும் கள நாட்கள்		0.23			கொவிட் 19 பரவல் காரணமாக விவசாயிகளை ஒன்றுகூட்டுவது சிரமமாக இருந்தது.	59
நில ஒருங்கிணைப்பு		1.00			விவசாயிகள் செய்த வேலைகளுக்கு மட்டுமே கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது.	
நிருவாக செலவு		0.13				
மொத்தம்	**5.69**	**5.699**	**5.49**	**96**		

வட மாகாணம்

செயற்பாடுகள்	2021 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	2021 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட ஒதுக்கீடு (மில். ரூபா)	நிதி முன்னேற்றம்		பௌதீக முன்னேற்றம்	
			செலுத்தப்பட்ட தொகை, கையில் உள்ள விலைப் பட்டியல்கள் மற்றும் பொறுப்புகள் (மில். ரூபா)	%	விபரங்கள்	%
வட்டுக் கலப்பை அல்லது இறக்கைக் கலப்பை மூலம் முறையான நிலப் பண்படுத்தலை மேற்கொள்வதற்கான மானியம் வழங்கல் (4,500 ரூபா / ஏக்கர்)	2.70	-	**7.19**		352 ஏக்கர் நிலப் பரப்பில் வரிசை விதைப்பு மற்றும் 248 ஏக்கரில் நாற்று நடுகை என்பன மேற்கொள்ளப்பட்டன.	100
விதை நெல் உற்பத்தியை அதிகரிக்க விதை நெல் வழங்கல்	1.58				1448 பூசல் விதை நெல் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டது. வட்டுக் கலப்பை அல்லது இறக்கைக் கலப்பை மூலம் 600 ஏக்கர் நெற் காணிகள் பண்படுத்தப்பட்டன.	
நடுகைத் தட்டுகள் மற்றும் பொலித்தீன் வழங்கல்	1.37				248 ஏக்கர் நெற் காணிகளில் நாற்று நடுகை தட்டுகள் மூலம் அல்லது பொலித்தீன் மூலம் மேற்கொள்ளப்பட்டது	
மண் வளத்தை மேம்படுத்துவதற்கான மானியம் வழங்கல்.	1.02				பகுதியளவில் எரிந்த நெல் உமி மற்றும் சேதன உரம் என்பன 600 ஏக்கருக்கு	

செயற்பாடுகள்	2021 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	2021 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட ஒதுக்கீடு (மில். ரூபா)	நிதி முன்னேற்றம்		பௌதிக முன்னேற்றம்	
			செலுத்தப்பட்ட தொகை, கையில் உள்ள விலைப் பட்டியல்கள் மற்றும் பொறுப்புகள் (மில். ரூபா)	%	விபரங்கள்	%
(பகுதியளவில் எரிந்த உமி) (2,500 ரூபா./ ஏக்கர்)					இடப்பட்டன.	
விதை நடுகை இயந்திரக் கூலி வழங்கல் (2,500 ரூபா./ ஏக்கர்)	0.84				விதை நடுகை இயந்திரம் மூலம் 352 ஏக்கர் நிலப் பரப்பில் வரிசைகளில் விதை நடுகை மேற்கொள்ளப்பட்டது.	
பயிற்சி மற்றும் கள நாட்களை நடத்துதல்	0.94				42 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன	
2. செயல் விளக்க நிகழ்ச்சிகள்						
வட்டுக் கலப்பை அல்லது இறக்கைக் கலப்பை மூலம் முறையான நிலப் பண்படுத்தலை மேற்கொள்வதற்கான மானியம் வழங்கல் (4,500 ரூபா / ஏக்கர்)	4.14				வட்டுக் கலப்பை அல்லது இறக்கைக் கலப்பை மூலம் 61 ஏக்கர் நெற் காணிகள் பண்படுத்தப்பட்டன.	
விதை நெல் உற்பத்தியை அதிகரிக்க விதை நெல் வழங்கல்	1.65				விவசாயிகளுக்கு 183 பூசல் விதை நெல் விநியோகிக்கப்பட்டது.	
மண் வளத்தை அதிகரிப்பதற்காக மானியம் (2,500 ரூபா./ ஏக்கர்) வழங்கல் (கரி, சேதன உரம், டொலமைட் போன்றன)	1.84					
விதை நடுகை இயந்திரக் கூலி வழங்கல் (2,500 ரூபா./ ஏக்கர்)	2.30				பாதி எரிந்த நெல் உமி மற்றும் சேதன உரம் என்பன 61 ஏக்கருக்கு இடப்பட்டன.	
பயிற்சி மற்றும் கள நாட்களை நடத்துதல்	2.50				4 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன	
நிருவாக செலவுகள்	0.52					
மொத்தம்	**21.44**		**7.19**	**37**		

மகாவலி B

செயற்பாடுகள்	2021 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	2021 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட ஒதுக்கீடு (மில். ரூபா)	நிதி முன்னேற்றம்		பௌதிக முன்னேற்றம்	
			செலுத்தப்பட்ட தொகை, கையில் உள்ள விலைப் பட்டியல்கள் மற்றும் பொறுப்புகள் (மில். ரூபா)	%	விபரங்கள்	%
நிலப் பண்படுத்தல்	1.48	0.27	0.20	19	நடைபெற்று வருகின்றன.	60
சேதனப் பொருட்கள்		0.12				34
பரசூட் தட்டுகள் வழங்கல்		0.51				
நில ஒருங்கிணைப்பு		0.10				
மொத்தம்	**1.48**	**1.00**	**0.20**	**19**		

மகாவலி C

செயற்பாடுகள்	2021 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	2021 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட ஒதுக்கீடு (மில். ரூபா)	நிதி முன்னேற்றம்		பௌதீக முன்னேற்றம்	
			செலுத்தப்பட்ட தொகை, கையில் உள்ள விலைப் பட்டியல்கள் மற்றும் பொறுப்புகள் (மில். ரூபா)	%	விபரங்கள்	%
நிலப் பண்படுத்தல்	1.36	0.32				
சேதனப் பொருட்கள்		0.14				
பரசூட் தட்டுகள் வழங்கல்		0.28				
விதை நெல் வழங்கல்		0.08	-	-	-	-
IPM நிகழ்ச்சிகள்		0.48				
பயிற்சி மற்றும் கள நாட்கள்		0.31				
நில ஒருங்கிணைப்பு		0.50				
மொத்தம்	**1.36**	**2.10**				

மகாவலி D

செயற்பாடுகள்	2021 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	2021 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட ஒதுக்கீடு (மில். ரூபா)	நிதி முன்னேற்றம்		பௌதீக முன்னேற்றம்	
			செலுத்தப்பட்ட தொகை, கையில் உள்ள விலைப் பட்டியல்கள் மற்றும் பொறுப்புகள் (மில். ரூபா)	%	விபரங்கள்	%
நிலப் பண்படுத்தல்	0.74	0.14	-	-	4 ஹெக்டயர்	
பரசூட் தட்டுகள் வழங்கல்		0.19			நடைபெற்று வருகின்றன.	
மொத்தம்	0.74	**0.33**	**-**	**-**		

மகாவலி E

செயற்பாடுகள்	2021 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	2021 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட ஒதுக்கீடு (மில். ரூபா)	நிதி முன்னேற்றம்		பௌதீக முன்னேற்றம்	
			செலுத்தப்பட்ட தொகை, கையில் உள்ள விலைப் பட்டியல்கள் மற்றும் பொறுப்புகள் (மில். ரூபா)	%	விபரங்கள்	%
நிலப் பண்படுத்தல்	0.86	0.14	0.31	81	30 ஏக்கர்	100
சேதனப் பொருட்கள்		0.06			30 ஏக்கர்	100
பரசூட் தட்டுகள் வழங்கல்		0.12			2000 தட்டுகள்/ 5 ஏக்கர்	80
IPM நிகழ்ச்சிகள்		0.03			3 யாய	100
பயிற்சி மற்றும் கள நாட்கள்		0.02			4 நிகழ்ச்சிகள்	95
நில ஒருங்கிணைப்பு		0.02			2 ஏக்கர்	1
மொத்தம்	**0.86**	**0.38**	**0.31**	**81**		

மாகாண இடை வலயம் – விவசாயத் திணைக்களம்

செயற்பாடுகள்	2021 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப் பட்ட தொகை (மில். ரூபா)	2021 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட ஒதுக்கீடு (மில். ரூபா)	நிதி முன்னேற்றம்		பௌதிக முன்னேற்றம்	
			செலுத்தப்பட்ட தொகை, கையில் உள்ள விலைப் பட்டியல்கள் மற்றும் பொறுப்புகள் (மில். ரூபா)	%	விபரங்கள்	%
வட்டுக் கலப்பை அல்லது இறக்கைக் கலப்பை மூலம் முறையான நிலப் பண்படுத்தலை மேற்கொள்வதற்கான மானியம் வழங்கல் (ஏக்கருக்கு 4500 ரூபா வீதம்.)	105.00	4.64	-	-	770 ஏக்கர் நிறைவு செய்யப்பட்டுள்ளன.	
இயந்திரமயமாக்கலை இலகுபடுத்தும் பொருட்டு காணிகளை ஒருங்கிணைப்பதற்கு மானியம் (10,000 ரூபா./ ஏக்கர்) வழங்கல்.		6.00			576 ஏக்கர் நிறைவு செய்யப்பட்டுள்ளன	
விதை நெல் உற்பத்தியை அதிகரிக்க விதை நெல் வழங்கல் (ஒரு விவசாயிக்கு 2 kg பொதி வீதம்)		0.17				
விவசாயிகளின் 50% பங்களிப்புடன் பரசூட் தட்டுகளை வழங்கல் (400 தட்டுகள்/ ஏக்கர்)		4.12			770 விதைப் பொதிகள் விநியோகிக்கப்பட்டன.	
மண் வளத்தை அதிகரிப்பதற்காக மானியம் (2000 ரூபா./ ஏக்கர்) வழங்கல் (கரி, சேதன உரம், டொலமைட் போன்றன)		2.06			79,000 தட்டுகள் கொள்வனவு செய்யப்பட்டன	
ஒருங்கிணைந்த பீடைக் கட்டுப்பாட்டு நிகழ்ச்சிகள் மற்றும் பயிற்சி முகாம்களை நடத்துதல்		2.51			770 ஏக்கர் நிறைவு செய்யப்பட்டுள்ளன, 225 IPM யாயா	
அதிகாரிகள் மற்றும் விவசாயிகளுக்கு பயிற்சியளிக்கும் நிகழ்ச்சிகளை நடாத்தல்.		1.51			நிகழ்ச்சிகள் மாகாண இடை வலயப் பகுதிகளில் நிறைவு செய்யப்பட்டதுடன் ஏனைய நிகழ்ச்சிகள் மாகாண விவசாயத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்டன. 05 IPM நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டன	
ஒவ்வொரு கமநல சேவைப் பிரிவிலும் விவசாயிகளுக்கான கள நாட்களை நடத்துதல்		0.88				
நிருவாக செலவு		0.49				
மொத்தம்		**22.38**	**12.57**	**56**		
மொத்த கூட்டுத்தொகை	**105.00**	**94.21**	**57.68**	**62**		

2.1.1.2 மிளகாய்ச ச் செய்கையின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை விருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம்

தென் மாகாணம்

செயற்பாடுகள்	2021 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	2021 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட ஒதுக்கீடு (மில். ரூபா)	நிதி முன்னேற்றம்		பௌதிக முன்னேற்றம்	
			செலுத்தப்பட்ட தொகை, கையில் உள்ள விலைப் பட்டியல்கள் மற்றும் பொறுப்புகள் (மில். ரூபா)	%	விபரங்கள்	%
மிளகாய் விதை வழங்கல் - 50% விவசாயிகள் பங்களிப்பு அடிப்படையில் அல்லது விவசாயிகளின் சொந்த விதைக்கு 50% மானியம் வழங்குதல்.	0.22	-	0.15		தேவையான அளவு இரசாயன உரங்கள் கிடைக்காமை.	65
மொத்தம்	**0.22**	**-**	**0.15**	**66**		65

மத்திய மாகாணம்

செயற்பாடுகள்	2021 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	2021 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட ஒதுக்கீ (மில். ரூபா)	நிதி முன்னேற்றம்		பௌதிக முன்னேற்றம்	
			செலுத்தப்பட்ட தொகை, கையில் உள்ள விலைப் பட்டியல்கள் மற்றும் பொறுப்புகள் (மில். ரூபா)	%	விபரங்கள்	%
கலப்பின மிளகாய் விதைகளை விவசாயிகளின் 50% பங்களிப்பின் கீழ் வழங்கல் (ஒரு கிலோ கிராம் விதைக்கு 35,000.00 ரூபா வீதம் மானியம் வழங்குதல் என்ற அடிப்படையில் இந்தத் திட்டம் மாற்றியமைக்கப்பட்டது.)	1.40	-	8.62	100	100% இலக்கு அடையப்பட்டுள்ளது.	100
தெளிப்பான் நீர்ப்பாசனத் தொகுதிகளை விவசாயிகளின் 50% பங்களிப்பின் கீழ் வழங்கல்	7.00					100
நிருவாக செலவு (2.5%)	0.21					
மொத்தம்	**8.61**		**8.62**	**100**		

வட மத்திய மாகாணம்

செயற்பாடுகள்	2021 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	2021 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட ஒதுக்கீடு (மில். ரூபா)	நிதி முன்னேற்றம்		பௌதீக முன்னேற்றம்	
			செலுத்தப்பட்ட தொகை, கையில் உள்ள விலைப் பட்டியல்கள் மற்றும் பொறுப்புகள் (மில். ரூபா)	%	விபரங்கள்	%
விதை நடுகை இயந்திரங்களை விவசாயிகளின் 50% பங்களிப்பின் கீழ் வழங்கல்	7.61					
தெளிப்பான் நீர்ப்பாசனத் தொகுதிகளை விவசாயிகளின் 50% பங்களிப்பின் கீழ் வழங்கல்	108.75	-	4.33	3	2 ஹெக்டயருக்கான தெளிப்பான்களுக்கான பெறுகை நடைமுறை நடைபெற்று வருகின்றது.	21
நிருவாக செலவு (2.5%)	2.91					
மொத்தம்	**119.27**		**4.33**	**3**		

கிழக்கு மாகாணம்

செயற்பாடுகள்	2021 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	2021 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட ஒதுக்கீடு (மில். ரூபா)	நிதி முன்னேற்றம்		பௌதீக முன்னேற்றம்	
			செலுத்தப்பட்ட தொகை, கையில் உள்ள விலைப் பட்டியல்கள் மற்றும் பொறுப்புகள் (மில். ரூபா)	%	விபரங்கள்	%
MICH HY 1 மிளகாய் விதைகள்	4.99				அரச பண்ணைகளில் விதை கிடைக்காததால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.	
தெளிப்பான் நீர்ப்பாசனத் தொகுதிகள்	72.61	-	10.15	12		21
தர்ப்போலின்						
உலர்த்திகள்						
நிருவாக செலவு	2.40					
மொத்தம்	**80.00**		**10.15**	**12**		

வட மேல் மாகாணம்

செயற்பாடுகள்	2021 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	2021 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட ஒதுக்கீடு (மில். ரூபா)	நிதி முன்னேற்றம்		பௌதிக முன்னேற்றம்	
			செலுத்தப்பட்ட தொகை, கையில் உள்ள விலைப் பட்டியல்கள் மற்றும் பொறுப்புகள் (மில். ரூபா)	%	விபரங்கள்	%
விவசாயிகளின் 50% பங்களிப்பின் கீழ் தெளிப்பான் நீர்ப்பாசனத் தொகுதிகளை வழங்கல்	57.50	-	28.29	0.46		100
விவசாயிகளின் 50% பங்களிப்பின் கீழ் கலப்பின மிளகாய் விதைகளை வழங்குதல்.	1.75				31.17 கிலோ கிராம் கலப்பின விதைகள் வழங்கப்பட்டுள்ளன.	62
நிருவாக செலவு	1.54					33
மொத்தம்	**60.79**		**28.29**	**0.46**		

ஊவா மாகாணம்

செயற்பாடுகள்	2021 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	2021 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட ஒதுக்கீடு (மில். ரூபா)	நிதி முன்னேற்றம்		பௌதிக முன்னேற்றம்	
			செலுத்தப்பட்ட தொகை, கையில் உள்ள விலைப் பட்டியல்கள் மற்றும் பொறுப்புகள் (மில். ரூபா)	%	விபரங்கள்	%
விவசாயிகளின் 50% பங்களிப்பின் கீழ் விதைகளை வழங்குதல்.	4.27		31.27	6.40	நிதி நெருக்கடி காரணமாக 50% விவசாயி பங்களிப்பை செலுத்த வேண்டிய விவசாயிகளுக்கு மட்டுமே விதைகள் வழங்கப்பட்டன.	79
தெளிப்பான் நீர்ப்பாசனத் தொகுதிகளை விவசாயிகளின் 50% பங்களிப்பின் கீழ் வழங்கல்	42.92				இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை விலைமனுதாரரால் உரிய தினத்திற்கு வழங்க முடியாமல் போனது.	74
தர்ப்போலின் (இலவசமாக)						
உலர்த்திகள் மற்றும் உலர்த்தும் அடுப்புகள் (இலவசமாக)						
நிருவாக செலவுகள்	1.22					
மொத்தம்	**48.41**	**15.08**	**31.27**	**6.40**		

வட மாகாணம்

செயற்பாடுகள்	2021 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	2021 ஆம் ஆண்டுக்கான திருத்தப் பட்ட ஒதுக்கீடு (மில். ரூபா)	நிதி முன்னேற்றம்		பௌதிக முன்னேற்றம்	
			செலுத்தப்பட்ட தொகை, கையில் உள்ள விலைப் பட்டியல்கள் மற்றும் பொறுப்புகள் (மில். ரூபா)	%	விபரங்கள்	%
தெளிப்பான் நீர்ப்பாசனத் தொகுதிகளை 50% மானிய அடிப்படையில் வழங்கல்	19.93		22.14		528 தெளிப்பான் நீர்ப்பாசன தொகுதிகளுக்கான கொள்வனவுக் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. 34 தொகுதிகள் விவசாயிகளின் களங்களில் நிறுவப்பட்டுள்ளன.	84
கலப்பின மிளகாய் விதைகளை 50% மானிய அடிப்படையில் வழங்கல்	2.17				689 விவசாயிகளுக்கு 45 கிலோ கிராம் விதைகள் விநியோகிக்கப்பட்டன. 2021 சிறு போகத்தில் 155 ஏக்கர்கள் பயிரிடப்பட்டன. பெரும் போகத்தில் 17 கிலோ கிராம் விதைகள் விவசாயிகள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்டன.	
நிருவாக செலவுகள்	0.55					
மொத்தம்	**22.65**		**22.14**	**97**		

மகாவலி H

செயற்பாடுகள்	2021 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	2021 ஆம் ஆண்டுக்கான திருத்தப் பட்ட ஒதுக்கீடு (மில். ரூபா)	நிதி முன்னேற்றம்		பௌதிக முன்னேற்றம்	
			செலுத்தப்பட்ட தொகை, கையில் உள்ள விலைப் பட்டியல்கள் மற்றும் பொறுப்புகள் (மில். ரூபா)	%	விபரங்கள்	%
விவசாயிகளின் 50% பங்களிப்பின் கீழ் விதைகளை வழங்குதல்.	4.06	0.18	0.20	82	3.5 ஹெக்./ 8 விவசாயிகள்	100
நிருவாக செலவுகள்		0.07			1	
மொத்தம்	4.06	**0.25**	**0.20**	**82**		

ஹுருளுவெவ

செயற்பாடுகள்	2021 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	2021 ஆம் ஆண்டுக்கான திருத்தப் பட்ட ஒதுக்கீடு (மில். ரூபா)	நிதி முன்னேற்றம்		பௌதிக முன்னேற்றம்	
			செலுத்தப்பட்ட தொகை, கையில் உள்ள விலைப் பட்டியல்கள் மற்றும் பொறுப்புகள் (மில். ரூபா)	%	விபரங்கள்	%
விவசாயிகளின் 50% பங்களிப்பின் கீழ் விதைகளை வழங்குதல்.	0.28	-	0.28	81	16 ஹெக்.	100
நிருவாக செலவுகள்	0.07					
மொத்தம்	**0.35**		**0.28**	**81**		

வளவ

செயற்பாடுகள்	2021 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	2021 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட ஒதுக்கீடு (மில். ரூபா)	நிதி முன்னேற்றம்		பௌதிக முன்னேற்றம்	
			செலுத்தப்பட்ட தொகை, கையில் உள்ள விலைப் பட்டியல்கள் மற்றும் பொறுப்புகள் (மில். ரூபா)	%	விபரங்கள்	%
விவசாயிகளின் 50% பங்களிப்பின் கீழ் விதைகளை வழங்குதல்.	5.64	1.35	0.42	31	விலைமனுக் கோரப்பட்டுள்ளது.	100
50% மானிய அடிப்படையில் தெளிப்பான் நீர்ப்பாசனத் தொகுதிகளை வழங்கல்			0.80		விலைமனுக் கோரப்பட்டுள்ளது.	
நிருவாக செலவுகள்			0.13			
தர்ப்போலின் வழங்கல் (விவசாயத் திணைக்களம் வழங்கிய)						
உலர்த்திகள் வழங்கல் (விவசாயத் திணைக்களம் வழங்கிய)						
மொத்தம்	**5.64**	**1.35**	**0.42**	**31**		

மகாவலி B

செயற்பாடுகள்	2021 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	2021 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட ஒதுக்கீடு (மில். ரூபா)	நிதி முன்னேற்றம்		பௌதிக முன்னேற்றம்	
			செலுத்தப்பட்ட தொகை, கையில் உள்ள விலைப் பட்டியல்கள் மற்றும் பொறுப்புகள் (மில். ரூபா)	%	விபரங்கள்	%
விவசாயிகளின் 50% பங்களிப்பின் கீழ் விதைகளை வழங்குதல்.	0.87	0.27	-	-	நடைபெற்று வருகின்றது.	
நிருவாக செலவுகள்		0.03				
மொத்தம்	**0.87**	**0.30**	**-**	**-**		

மகாவலி C

செயற்பாடுகள்	2021 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	2021 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட ஒதுக்கீடு (மில். ரூபா)	நிதி முன்னேற்றம்		பௌதிக முன்னேற்றம்	
			செலுத்தப்பட்ட தொகை, கையில் உள்ள விலைப் பட்டியல்கள் மற்றும் பொறுப்புகள் (மில். ரூபா)	%	விபரங்கள்	%
விவசாயிகளின் 50% பங்களிப்பின் கீழ் விதைகளை வழங்குதல்.	2.73	0.09	-	-		100
நிருவாக செலவுகள்		0.03				
மொத்தம்	**2.73**	**0.12**	-	-		

மாகாண இடை வலயம் – விவசாயத் திணைக்களம்

செயற்பாடுகள்	2021 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	2021 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட ஒதுக்கீடு (மில். ரூபா)	நிதி முன்னேற்றம்		பௌதிக முன்னேற்றம்	
			செலுத்தப்பட்ட தொகை, கையில் உள்ள விலைப் பட்டியல்கள் மற்றும் பொறுப்புகள் (மில். ரூபா)	%	விபரங்கள்	%
50% மானிய அடிப்படையில் தெளிப்பான் நீர்ப்பாசனத் தொகுதிகளை வழங்கல்	1,170	26.71	200.14	78	மாகாண இடை வலயப் பிரதேசங்களுக்கான தெளிப்பான் நீர்ப்பாசனத் தொகுதிகள் வி/திணை இனால் கொள்வனவு செய்யப்பட்டன. 2 தெளிப்பான் நீர்ப்பாசனத் தொகுதிகள் (1 ஏக்கருக்கு), கொள்வனவு செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டன.	30
50% மானிய அடிப்படையில் கலப்பின மிளகாய் விதைகளை வழங்கல்		2.71			120.5 கிலோ கிராம் கலப்பின மிளகாய் விதைகள் விநியோகிக்கப்பட்டன. IP மாகாண இடை வலயப் பிரதேசங்களுக்கு 41 கிலோ கிராம் (மொனராகலை மா.இ.வ – 15 ஹம்பாந்தோட்டை மா.இ.வ - 10 அனுராதபுர மா.இ.வ - 7.5 kg, அம்பாறை மா.இ.வ - 8.5 kg) மாகாணப் பகுதிகளுக்கு 79.5 kg. வடமேல் மாகாணம் -24.5 kg	65
50% மானிய அடிப்படையில் கலப்பின மிளகாய் விதைகளை வழங்கல்		80.00				
தர்ப்போலின் வழங்கல் - இலவசமாக		120.00			2000 தர்ப்போலின்கள் விநியோகம் செய்யப்பட்டன.	100
பாதுகாக்கப்பட்ட பொலித்தீன் இல்லங்களை நிர்மாணித்தல் (2000 சதுர அடி)		17.55			பொருட்களின் விலை அதிகரித்தமை காரணமாக விலைமனுதாரரால் நிர்மாணிக்கப்படவில்லை.	35
நிருவாக செலவு		7.41				60
மொத்தம்		**254.38**	**200.14**	**78**		
மொத்த கூட்டுத்தொகை	**1,170**	**596.7**	**305.99**	**0.51**		

2.1.1.3 உருளைக்கிழங்கு உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை விருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம்

மத்திய மாகாணம்

செயற்பாடுகள்	2021 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	2021 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட ஒதுக்கீடு (மில். ரூபா)	நிதி முன்னேற்றம்		பௌதிக முன்னேற்றம்	
			செலுத்தப்பட்ட தொகை, கையில் உள்ள விலைப் பட்டியல்கள் மற்றும் பொறுப்புகள் (மில். ரூபா)	%	விபரங்கள்	%
நுவரெலியா விவசாயிகளுக்கு 50% மானிய அடிப்படையில் தரமான GO வகை விதைப் பொதிகளை வழங்கல்.	2.50				60% இலக்கு அடையப்பட்டுள்ளது.	35
விதைகளைக் கையாளும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு (விதை உற்பத்தி, கொள்வனவு மற்றும் விநியோகம்) கூட்டுறவு சங்கங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் அவற்றுக்கான அத்தியாவசிய கருவிகள் மற்றும் பொருட்களை வழங்குவதன் மூலம் இதனை எளிதாக்குதல்.	2.00					60
புதிய பகுதிகளுக்கு சான்றுப்படுத்திய விதைகள், சேதன உரம், பயிர் பாதுகாப்பு வலைகளை இலவசமாக வழங்கல். (G3 &C1)	26.00					40
ஏற்கனவே உருளைக்கிழங்கு பயிரிடும் பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு 50% மானிய அடிப்படையில் உள்ளீடுகளை வழங்குதல் (அதாவது சொட்டுநீர் மற்றும் தெளிப்பு நீர்ப்பாசனத் தொகுதிகள், சேதன உரம், உருளைக்கிழங்கு அகழும் கருவிகள், மின் வேலிகள் மற்றும் ஏனைய பயிர்களைப் பாதுகாக்கும் பொருட்கள்)	45.00	-	36.60	39		
பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மூலம் விவசாயிகளை ஊக்குவித்தல் மற்றும் ஆர்வமூட்டல்.	0.06					10
G1 விதைகளை உற்பத்தி செய்வதற்கான மின்சாரம், நீர்ப்பாசனம், பிளாஸ்டிக் சாடிகள் மற்றும் பெட்டிகள், அகழும் கருவிகள் போன்ற வசதிகளைக் கொண்ட 400 சதுர அடி பசுமை இல்லங்களை நிர்மாணித்தல்.	14.50					30
நிருவாக செலவு (2.5%)	2.25					
மொத்தம்	**92.31**		**36.60**	**39**		

சப்ரகமுவ மாகாணம்

செயற்பாடுகள்	2021 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	2021 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட ஒதுக்கீடு (மில். ரூபா)	நிதி முன்னேற்றம்		பௌதீக முன்னேற்றம்	
			செலுத்தப்பட்ட தொகை, கையில் உள்ள விலைப் பட்டியல்கள் மற்றும் பொறுப்புகள் (மில். ரூபா)	%	விபரங்கள்	%
10000 கிலோ கிராம் உருளைக்கிழங்கு விதைகள்	2.20	-	3.65	100	1000 கிலோ கிராம் சஷி வர்க்க உருளைக்கிழங்கு விதைகளும் 8000 கிலோ கிராம் கிரானோலா வர்க்க விதைகளும் உற்பத்தி செய்யப்பட்டன. 235 சுருள் வேலி வலைகள் மற்றும் 8 மெற்றிக் தொன் சேதன உரம் என்பன கொள்வனவு செய்தல்.	100
12000 கிலோ கிராம் சேதன உரம்	0.26					
239 சுருள் வேலி வலைகள்	1.03					
பயிற்சி நிகழ்ச்சிகள், கள நாட்கள், துண்டுப்பிரசுரங்கள்	0.05					
நிருவாக செலவு (3%)	0.11					
மொத்தம்	**3.65**		**3.65**	**100**		

வட மேல் மாகாணம்

செயற்பாடுகள்	2021 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	2021 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட ஒதுக்கீடு (மில். ரூபா)	நிதி முன்னேற்றம்		பௌதீக முன்னேற்றம்	
			செலுத்தப்பட்ட தொகை, கையில் உள்ள விலைப் பட்டியல்கள் மற்றும் பொறுப்புகள் (மில். ரூபா)	%	விபரங்கள்	%
விதைகள் மற்றும் பாதுகாக்கப்பட்ட வலைகளை இலவசமாக வழங்குதல், 10,000 ரூபா. வழங்குதல். உரம் வழங்குதல்.	4.80	-	**5.38**	**0.98**	4 ஹெக்.	100
பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்	0.50					100
நிருவாக செலவு	0.15					100
மொத்தம்	**5.45**		**5.38**	**0.98**		

ஊவா மாகாணம்

செயற்பாடுகள்	2021 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	2021 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட ஒதுக்கீடு (மில். ரூபா)	நிதி முன்னேற்றம்		பௌதீக முன்னேற்றம்	
			செலுத்தப்பட்ட தொகை, கையில் உள்ள விலைப் பட்டியல்கள் மற்றும் பொறுப்புகள் (மில். ரூபா)	%	விபரங்கள்	%
விதைகளைக் கையாளும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு (விதை உற்பத்தி, கொள்வனவு மற்றும் விநியோகம்) கூட்டுறவு சங்கங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் அவற்றுக்கான அத்தியாவசிய கருவிகள் மற்றும் பொருட்களை வழங்குவதன்	1.000	-		46.43	கூட்டுறவு சங்கத்தின் கோரிக்கைளுக்கு ஏற்ப தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டன.	100

செயற்பாடுகள்	2021 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	2021 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட ஒதுக்கீடு (மில். ரூபா)	நிதி முன்னேற்றம்		பௌதிக முன்னேற்றம்	
			செலுத்தப்பட்ட தொகை, கையில் உள்ள விலைப் பட்டியல்கள் மற்றும் பொறுப்புகள் (மில். ரூபா)	%	விபரங்கள்	%
மூலம் இதனை எளிதாக்குதல்.						
புதிய பகுதிகளுக்கு (பதுளை மற்றும் நுவரெலிய) சான்றுப்படுத்திய விதைகள், சேதன உரம், பயிர் பாதுகாப்பு வலைகளை இலவசமாக வழங்கல். (G3 மற்றும் C1)	22.000				விவசாயத் திணைக்களத்தால் உற்பத்தி செய்யப்பட்ட தரமான விதைகளை உரிய காலத்தில் தேவையான அளவு பெறத் தவறுதல்.	100
விவசாயிகளுக்கு 50% மானிய அடிப்படையில் உள்ளீடுகளை வழங்குதல் (அதாவது சொட்டுநீர் மற்றும் தெளிப்பான் நீர்ப்பாசனத் தொகுதிகள், சேதன உரம், உருளைக்கிழங்கு அகழும் கருவிகள், மின் வேலிகள் மற்றும் ஏனைய பயிர்களைப் பாதுகாக்கும் பொருட்கள்)	75.00				இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் பிற உள்ளீடுகளை விலைமனுதாரர்கள் உரிய காலத்தில் வழங்கத் தவறிவிட்டனர்.	35
சூரிய சக்தி மூலம் இயங்கும் மின் வேலிகளை முக்கிய உருளைக்கிழங்குப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு வழங்குதல்.	17.25					
நீர் இறைக்கும் இயந்திரங்களை முக்கிய உருளைக்கிழங்குப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு வழங்குதல்.	2.70				நிர்ணயிக்கப்பட்ட திகதியில் விலைமனுதாரர்களால் நீர் இறைக்கும் இயந்திரங்கள் விநியோகம் செய்யப்படவில்லை.	
பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மூலம் விவசாயிகளை ஊக்குவித்தல் மற்றும் ஆர்வமூட்டல்.	0.25				14 பயிற்சி நிகழ்ச்சிகள். கொவிட் 19 காரணமாக விவசாயிகளை ஒன்று திரட்டுவது கடினமாக இருந்தது.	
யாழ்ப்பாணம், புத்தளம், கண்டி, கேகாலை மாத்தளை மற்றும் மொனராகலை ஆகிய பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு சான்றுப்படுத்திய விதைகள், சேதன உரம், பயிர் பாதுகாப்பு வலைகளை இலவசமாக வழங்கல். (G3 மற்றும் C1)	3.70				6000 கிலோ விதைகள், நிர்ணயிக்கப்பட்ட திகதியில் விலைமனுதாரர்கள் பயிர் பாதுகாப்பு வலைகளை வழங்கவில்லை.	
நிருவாக செலவுகள்	0.97					
மொத்தம்	**122.87**		**46.43**	**0.38**		

மாகாண இடை வலயம் - விவசாயத் திணைக்களம்

5.8	(281-2-2-10-2507) - பயிர் பல்வகைப்படுத்தல் - ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி - சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை மேம்படுத்துதல் மற்றும் கைவிடப்பட்ட தரிசு நிலங்களில் மீண்டும் நெற் செய்கை மேற்கொள்ளல்.		10.00	10.15	102	முன்னோடிச் செயற்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட குழாய் மூல நீர்ப்பாசனம் மற்றும் சூரிய சக்தி அழுத்தத் தொகுதி / மல்வத்து ஓயா மற்றும் யோதா எலயின் சிறிய குளங்களின் நீர்பிடிப்புப் பகுதிகளுக்கான விஷேட நீர்ப்பாசன கணக்கெடுப்பு - 2 செயற்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. மேலும் 2 செயற்திட்டங்கள் நடைபெற்று வருகின்றன	25
5.9	(281-2-2-12-2506) - சிறிய நீர்ப்பாசனத் தொகுதிகளை புனர்நிர்மாணம் செய்தல் மற்றும் கைவிடப்பட்ட தரிசு வயல்களில் மீண்டும் நெற் செய்கை மேற்கொள்ளும் நிகழ்ச்சித் திட்டம்.		1,000.00	703.00	70	நிலப் பண்படுத்தல், நெற் காணிகளுக்கு விதைகளை வழங்குதல், சிறிய நீர்ப்பாசனம், கால்வாய்கள், அணைக்கட்டு, விவசாய பாதைகள் மற்றும் டிராக்டர் பாதை - சிறு போகத்தில் 4,403 ஏக்கர் கைவிடப்பட்ட நெற் காணிகளில் நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டது; பெரும் போகத்தில் 15,195.25 ஏக்கர் கைவிடப்பட்ட நெற் காணிகளில் நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டது; 3,117 செயற்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. கைவிடப்பட்ட நெற் காணிகளில் 934 செயற்திட்டங்கள் செயடுத்தப்பட்டு வருகின்றன. விவசாயப் பாதையை சீரமைப்பதில் 06 செயற்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் 01 செயற்திட்டம் நடைபெற்று வருகிறது. * 23 சிறிய நீர்ப்பாசனங்களை	79

தொ/ இல	செயற்பாடுகள்	2021 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	2021 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட ஒதுக்கீடு (மில். ரூபா)	நிதி முன்னேற்றம்		பௌதீக முன்னேற்றம்	
				செலுத்தப்பட்ட தொகை, கையில் உள்ள விலைப் பட்டியல்கள் மற்றும் பொறுப்புகள் (மில். ரூபா)	%	விபரங்கள்	%
						மறுசீரமைப்பதன் கீழ் செயற்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் மேலும் 4 செயற்திட்டங்கள் நடைபெற்று வருகிறன. **செயற்திட்ட உதவிச் செலவு (2% நிருவாக செலவில் இருந்து) -** 15 Core i5 வகை கணினிகள், 11 Core i5 வகை மடிக் கணினிகள் மற்றும் இரண்டு Core i7 மடிக் கணினிகள் கொள்வனவு செய்யப்பட்டன. **கையிலுள்ள விலைப்பட்டியல்களைத் தீர்த்தல் மற்றும் 2020 ஆண்டின் பொறுப்புகள் -** 04 செயற்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் 2020 ஆண்டிற்கான பொறுப்புகளை தீர்க்கும் 09 செயற்திட்டங்கள் நடைபெற்று வருகிறன. **விவசாயக் காணிகளைப் பதிவு செய்தல் (நெற் காணிகள் அல்லாதவை) –** பயிற்சி நிகழ்ச்சிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் இறுதி சுற்றறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. **விவசாய-வானிலை விவசாய-வானியல் நிலையங்களை நடாத்தி வருதல் மற்றும் தகவல் சேகரிப்புக்கான கொடுப்பனவுகள் –** திருகோணமலை மாவட்டத்தில் ஒரு செயற்திட்டம் நடைபெற்று வருகிறது, **சிறிய நீர்ப்பாசனம் / நெற் காணிகள் தொடர்பான தகவல் தள முகாமைத்துவம் -** இதற்கான ஒப்பந்தம் மொரட்டுவ பல்கலைக்கழகத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. **கமநல சேவை நிலையங்களின் வலைப்பின்னல் (VPN of A.S.C.) -** VPN கொள்வனவு செய்யப்பட்டுள்ளது; Wingles கொள்வனவு செய்யப்பட்டன,	

தொ/ இல	செயற்பாடுகள்	2021 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	2021 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட ஒதுக்கீடு (மில். ரூபா)	நிதி முன்னேற்றம்		பௌதீக முன்னேற்றம்	
				செலுத்தப்பட்ட தொகை, கையில் உள்ள விலைப் பட்டியல்கள் மற்றும் பொறுப்புகள் (மில். ரூபா)	%	விபரங்கள்	%
						அவசரத் தேவைகள் - 48 வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் மேலும் 8 வேலைகள் நடைபெற்று வருகின்றன (வெள்ளப்பெருக்குப் பாதிப்பு)	
5.10	(281-2-2-13-2506) - கிராமிய குள அடுக்கைத் தொகுதிகளை அபிவிருத்தி செய்தல்.		600.00	299.79	50	73 செயற்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. மேலும் 17 செயற்திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.	76
	மொத்தம்	**1984.00**	**1,984.00**	**1,335.73**	**67**		**70**

நெல் மற்றும் தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு, விதை உற்பத்தி மற்றும் உயர் தொழிநுட்ப கமத்தொழில் இராஜாங்க அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள் மற்றும் அந்நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றச் சுருக்கம்

நெல் மற்றும் தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு, விதை உற்பத்தி மற்றும் உயர் தொழினுட்ப கமத்தொழில் இராஜாங்க அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம்

1. பிராந்திய பொருளாதார மத்திய நிலையங்கள்
2. கமநல அபிவிருத்தித் திணைக்களம்
3. தேசிய பின் அறுவடைத் தொழில்நுட்பவியல் நிறுவகம்

***2235/45* ஆம் இலக்க *2021* ஜூலை *7* ஆம் தேதியிட்ட அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின்படி, கமத்தொழில் இராஜாங்க அமைச்சின் *425* ஆம் செலவுத் தலைப்பின் கீழ் காணப்படும் பின்வரும் நிறுவனங்களால் செயல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் கமத்தொழில் அமைச்சின் செலவுத் தலைப்பு *118* இன் கீழ் மாற்றப்பட்டன.**

- நெல் சந்தைப்படுத்தல் சபை
- ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்
- இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபை

1. பிராந்திய பொருளாதார மத்திய நிலையங்கள்

காய்கறிகள் மற்றும் பழங்களை மட்டுமல்லாது தானிய வகைகள் மற்றும் மேலதிக உணவுப் பயிர் உற்பத்திகளையும் சேகரிப்பதற்கு பிரதான பொருளாதார மையங்கள் மற்றும் பரந்த வலையமைப்புகள் என்பவற்றைக் கொண்ட சேகரிப்பு நிலையங்களை உருவாக்குவது தற்போதைய சூழ்நிலையில் இன்றியமையாததாக மாறியுள்ளது.

I. இந்த சேகரிப்பு மையத்தை 2022 ஆம் ஆண்டில் வெல்லவாய பிரதேசத்தில் நிறுவுவதற்காக 100.0 மில். ரூபா. நிதியை செலவிடல்.

II. சூரிய சக்தி மின்சுற்றுகளைப் பொருத்துவதற்காக (அம்பிலிபிட்டிய, இரத்மலானை) 50.0 மில். ரூபா. நிதியை செலவிடல்.

III. ஏற்கனவே காணப்படும் பொருளாதார மையங்களின் நிர்மாண வேலைகள், செயற்படுத்தல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 100.0 மில். ரூபா. நிதியை செலவிடல்.

அடைவதற்கு எதிர்பார்க்கும் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள்

இலக்கு 12 - நிலைபேறான நுகர்வு மற்றும் உற்பத்திப் போக்குகளை உறுதி செய்தல்.

1. உலகளாவிய ரீதியாகக் காணப்படும் நுகர்வு மற்றும் உற்பத்தி - உலகப் பொருளாதாரத்தின் ஒரு உந்துசக்தியாகக் காணப்படுகின்றது - இயற்கை சூழல் மற்றும் வளங்களைப் பயன்படுத்தும் விதமானது புவியின் மீது தொடர்ந்தும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் விதத்தில் காணப்படுகிறது.

2. 2030 ஆண்டளவில் சில்லறை மற்றும் நுகர்வோர் மட்டத்தில் தனிநபர் உலகளாவிய உணவு விரயமாக்கலை அரைவாசியாகக் குறைத்தல் மற்றும் அறுவடைக்குப் பிந்தைய இழப்புகள் உள்ளிட்ட உற்பத்தி மற்றும் விநியோகச் சங்கிலிகளுக்கு ஊடாக ஏற்படும் உணவு இழப்புகளைக் குறைத்தல்.

முன்மொழியப்பட்டுள்ள குறிகாட்டிகள் -

- அறுவடை செய்த பின்னர் பெறுமதிச் சங்கிலியில் அல்லது இழந்த உணவின் அளவை கண்டறிய உலகளாவிய உணவு இழப்புக் குறிகாட்டி (அல்லது வேறொரு குறிகாட்டியை இனங்காண வேண்டும்)

முதன்மை இலக்கு / குறிக்கோள் பொருந்தக்கூடியவை:

- இலக்கு 12 - நிலைபேறான நுகர்வு மற்றும் உற்பத்திப் போக்குகளை உறுதி செய்தல்.

பின்னணி:

தற்போது இலங்கை முழுவதும் 10 மாவட்டங்களில் 15 விஷேட பொருளாதார மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இப்பொருளாதார மையங்களுக்கு ஊடாக விவசாயிகளின் விவசாய உற்பத்திகளுக்குப் பொருத்தமான சந்தை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், அவை மேலும் விரிவாக்கம் செய்யப்பட்டு, வலையமைப்புகள் உருவாக்கப்படுவதன் ஊடாக விவசாயிகளுக்குத் தங்கள் விளைபொருட்களை இலகுவாக சந்தைப்படுத்தக் கூடிய நிலை உருவாகும் அதேவேளை, அறுவடைக்கு பிந்திய இழப்புகளைக் குறைப்பதற்கும் போக்குவரத்துக்கு ஏற்படும் செலவுகளைக் குறைத்துக்கொள்ளவும் முடியுமாக இருக்கும். அதேபோன்று, பொருளாதார மையங்களை மிகவும் வினைத்திறனாகவும், பயனுறுதிமிக்கதாகவும் பராமரித்தல் மற்றும் விவசாயிகளுக்கு நிலையான விலையைப் பெற்றுக்கொடுத்தல் ஆகிய இலக்குகளை அடைந்துகொள்ள, அனைத்து விவசாயிகளையும் இந்தப் பொருளாதார மையங்களுடன் இணைப்பது மிகவும் முக்கியமானதாகும்.

விபரம்:

பெருளாதார மையங்களை நிறுவியது தொடர்பான விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

தொ/ இல	மாவட்டம்	பொருளாதார மத்திய நிலையங்கள்
1	கொழும்பு	i. நாரஹென்பிட்டி ii. மீகொட iii. பிலியந்தல iv. இரத்மலானை
2	கம்பஹா	v. வெலிசர vi. வெயங்கொடை
3	மாத்தளை	vii. தம்புள்ளை
4	அனுராதபுரம்	viii. தம்புத்தேகம
5	கண்டி	ix. குருந்துவத்தை x. கந்த ஹன்திய
6	நுவரெலியா	xi. நுவரெலியா
7	பதுளை	xii. கெப்பிட்டிப்பொல
8	இரத்தினபுரி	xiii. அம்பிலிப்பிட்டிய
9	அம்பாறை	xiv. அம்பாறை
10	கிளிநொச்சி	xv. கிளிநொச்சி

பொருளாதார மத்திய நிலையம்	எண்	செயற்பாடுகள்	ஒதுக்கீடு (மில். ரூபா)	செலுத்திய தொகை	குறிப்புகள்
வவுனியா	1	மின்சார இணைப்பை வழங்குதல்.	86,000.00	86,000.00	-
	2	பொருளாதார மையத்தின் திறப்பு விழாவுக்கான செலவுகள்	306,450.00	_	திறப்பு விழா பிற்போடப்பட்டது.
	3	மும்மை மின்சார இணைப்பை வழங்குதல்	126,000.00	126,000.00	
	4	CCTV கமெராக்களை கொள்வனவு செய்தல்	219,330.00	144,650.00	-
	5	பாதுகாப்புச் சேவைக்கான கொடுப்பனவுகள்	569302.20	569,302.20	-
	6	பொருளாதார மையத்தினை சுத்தம் செய்தல்	130,700.00	_	திறப்பு விழா பிற்போடப்பட்டது.
	மொத்தம்		**1,437,782.20**	**925,952.20**	-

பொருளாதார மத்திய நிலையம்	எண்	செயற்பாடுகள்	ஒதுக்கீடு (மில். ரூபா)	செலுத்திய தொகை	குறிப்புகள்
மட்டக்களப்பு	1	2020 ஆகஸ்ட் முதல் 2021 ஜூன் வரையிலான கட்டணம்	1,319,953.96	1,277,284.68	-
	2	2020 ஜூலை முதல் 2021 ஒக்டோபர் வரையிலான கட்டணம்	549,068.46	549,068.46	
	3	2021 நவம்பருக்கான கட்டணம்	134,467.80	134,467.80	
	4	2021 டிசம்பருக்கான கட்டணம்	138,603.72	134,614.20	
	5	வியாபார வளாகத்தை வாடகைக்கு விடுவது தொடர்பான வழங்குவதற்கான விண்ணப்பங்களைக் கோரும் பத்திரிகை விளம்பரத்திற்கான கட்டணம் ஒக்டோபர் 2021	130,491.00	130,491.00	
	மொத்தம்		2,272,584.94	2,225,926.14	
யாழ்ப்பாணம்	1	பாதுகாப்புக் கூடாரம், நுழைவுப் பாதை, வாகனத் தரிப்பிடம் மற்றும் RCC வடிகால் என்பவற்றை நிர்மாணம் செய்தல்	23,958,810.08 37,604,100.70	35,800,317.36	மீதி 7.69 மில்லியன் ரூபா திருப்பி அனுப்பப்பட்டது
		தடுப்பு சுவர் மற்றும் இரும்பு நுழைவாயில்		5,963,530.97	
		தண்ணீர் தொட்டி, குழாய்க் கிணறு மற்றும் வெளிப்புற விளக்குக் கம்பம்		8,447,936.44	
		சங்கிலி இணைப்பு வேலி		1,187,359.92	
		UDA ஆலோசனை கட்டணம்		1,605,298.06	
		நிருவாக செலவுகள் (2.5%)		865144.63	

பொருளாதார மத்திய நிலையம்	எண்	செயற்பாடுகள்	ஒதுக்கீடு (மில். ரூபா)	செலுத்திய தொகை	குறிப்புகள்
	2	பொருளாதார மையத்தின் கடைகளை வாடகைக்கு விடுவது தொடர்பான பத்திரிகை விளம்பம்	96,822.00	96,822.00	
	3	பாதுகாப்புச் செலவுகள்	808,869.95	808,869.95	செலுத்த வேண்டியுள்ள டிசம்பர் மாதத்திற்கான கட்டணம் 45,381.72 ரூபா.
	மொத்தம் *		62,468,602.73 -	54,775,279.33	* இதன்போது யாழப்பாண பொ/ மையத்தின் கூட்டுத்தொகைக்கு மற்றும் திறைசேரியின் அறிக்கையின் கூட்டுத்தொகைக்கும் இடையில் 760.13 ரூபா வேறுபாடு காணப்படுவதுடன் குறித்த வேறுபாட்டுடன் தொடர்பான விடயங்களை ஆராய்ந்து, மீண்டும் அந்த முன்னேற்ற அறிக்கையை முறையாக சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாண மாவட்ட விவசாயப் பணிப்பாளருக்கு தெரிவிக்கப்பட்டது.
குறுந்துவத்த	1	வாகனத் தரிப்பிடத்திற்கு அஸ்பல்ட் பதித்தல்	2,289,623.62	-	வேலை நிறைவு செய்யப்பட்டுள்ளது.
	2	கழிப்பறைத் தொகுதிகளை புனரமைத்தல்	873,000.00		வேலை நிறைவு செய்யப்பட்டுள்ளது.
	மொத்தம்		3,162,623.62	2,867,053.38	-
கந்தேஹன்திய	1	விஷேட பொருளாதார மையத்தை அபிவிருத்தி செய்தல் - கந்தேஹந்திய	739,873.56	90,504.77	-
	2	கந்தேஹந்திய பி.பொ.மையத்தை (மின்சாரம் மற்றும் நீர் வழங்கல் பணி) மேம்படுத்தும் பணிகள்	2,368,456.77		மின் இணைப்புப் பலகையை (switch board) பொறுத்தும் வேலை நடைபெற்று வருகின்றதுடன் நீர் வழங்கும் பணிகள் மீதமாகவுள்ளன.
	மொத்தம்		3,276,810.33	90,504.77	கையிலுள்ள விலைப் பட்டியல்கள் 3,017,825.56

பொருளாதார மத்திய நிலையம்	எண்	செயற்பாடுகள்	ஒதுக்கீடு (மில். ரூபா)	செலுத்திய தொகை	குறிப்புகள்
எம்பிலிப்பிட்டிய	1	எம்பிலிப்பிட்டிய பிரத்தியேக பொருளாதார மையத்திற்கு வண்ணம் பூசுதல்	3,499,801.95	-	கையிலுள்ள விலைப் பட்டியல்கள் 3,334,716.67
	மொத்தம்		**3,499,801.95**	-	
வெயங்கொடை	1	பிரதான கூரையை அஸ்பெஸ்டோ தகடுகள் கொண்டு திருத்தியமைத்தல்	4,575,532.50	-	பிரதேச செயலகத்தின் மூலம் ஒதுக்கீட்டுத் தொகை மீளப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டதற்கு இணங்க மீளக் கையளிக்குமாறு மாவட்ட செயலாளரினால் செயலாளருக்கு கடிதம் மூலம் வேண்டிக்கொள்ளப்பட்டுள்ளது.
	2	பொதுக் கழிப்பறைத் தொகுதிகளை புனரமைத்தல்	5,170,519.86	-	
	மொத்தம்		**9,746,052.36**	-	
மீகொடை	1	முன் எல்லை சுவரை புனரமைத்தல் மற்றும் கூரைக்கு வண்ணம் பூசுதல்.	2,211,925.00	2,211,925.00	100%
	மொத்தம்		**2,211,925.00**	**2,211,925.00**	-
நெடுஞ்சாலைகள் அமைச்சு (தம்புள்ளை பொருளாதார மைய மகனெகும தொடர்பானது)			54,790,467.31	54,790,467.31	-
பொருளாதார மையங்களுக்கான டிஜிட்டல் பிரயோக அமைப்புகள் (கட்டம் I)			909,290.00	909,290.00	-
நிர்வாக செலவுகள்			88,461.00	88,461.00	-
மொத்தம்			**143,864,401.44**	**118,884,859.13**	-

பிரச்சினைகள் மற்றும் சவால்கள்

தற்போது நிலவும் கொவிட் -19 தொற்றுநோய் சூழ்நிலை காரணமாக, நாட்டில் விதிக்கப்பட்டுள்ள பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக, விவசாய உற்பத்திப் பொருட்களை உரிய விதத்தில் பொருளாதார மையங்களுக்கு எடுத்துச் செல்வதில் உள்ள சிரமங்கள் காரணமாகவும் பொருளாதார மையங்களை நோக்கி நுகர்வோருக்கு பயணிப்பதில் உள்ள அசௌகரியங்கள் காரணமாகவும் விவசாய உற்பத்திகளை முறையாக விற்பனை செய்து கொள்ள முடியாதுள்ளது.

பொருளாதார மையங்களின் புவியியல் அமைவிடத்தை உற்று நோக்கினால், அதிகளவு பயிர்ச் செய்கை நிலங்களைக் கொண்ட / விவசாய உற்பத்திகள் அதிகளவில் காணப்படும் பகுதிகளிலிருந்து குறித்த பொருளாதார மையங்களுக்கான தூரம் மிகவும் அதிகமாகக் காணப்படுகிறது. எனினும் தற்போது, இந்தப் பிரச்சினை இனங் காணப்பட்டு அதற்கான தீர்வாக பிரதேச ரீதியாக விவசாய உற்பத்திப் பொருட்களை சேகரிக்கும் நிலையங்களை நிறுவுவதற்குத் தேவையான திட்டமிடலை இந்த அமைச்சினால் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

2022 ***ஆம் ஆண்டுக்கான எதிர்காலத் திட்டங்கள்***

தொ/ இல	இலக்காக கொள்ளப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்	இலக்கு		கமத்தொழில் இராஜாங்க அமைச்சினால் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்
		பௌதீக	நிதி	
	விவசாய உற்பத்திகளை சேகரிக்கும் நிலையங்களை நிறுவுதல் 2020-2024			*Zero Hunger* உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்துதல், போசணைத் தரத்தை விருத்தி செய்தல் மற்றும் நிலைபேறான விவசாயத் துறையை ஊக்குவித்தல்.
1	வெல்லவாய	• காணி அபிவிருத்தி • பொருளாதார நிலையத்தை நிர்மாணித்தல் • கழிப்பறைத் தொகுதிகளை நிர்மாணித்தல் • பாதுகாப்புச் சாவடியை நிர்மாணித்தல் • உணவகத்தை நிர்மாணித்தல் • நுழைவு அலுவலகத்தை நிர்மாணித்தல் • காய்கறிகளை சுத்தம் செய்யும் தொட்டியை நிர்மாணித்தல் • நிலத்தடி நீர் இறைக்கும் தொகுதியை நிர்மாணித்தல் • நீர்த் தொட்டியை நிர்மாணித்தல் • கழிவு நீர் சுத்திகரிப்புத் தொகுதியை நிர்மாணித்தல் • உட்புற பாதை வலைப்பின்னலை மற்றும் வாகனத் தரிப்பிடத்தை நிர்மாணித்தல் • மதில் சுவரை நிர்மாணித்தல்	*540 மில். ரூபா*	
2	பொருளாதார மையங்களுக்கு சூரிய சக்தி மூலம் இயங்கும் தொகுதிகளை நிறுவுதல்	• நிறுவிய சூரிய சக்தி மூலம் இயங்கும் தொகுதிகள்	*240 மில். ரூபா.*	
3	ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள பெருளாதார மத்திய நிலையங்களின் நிர்மாணப் பணிகள், செயற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் பராமரிப்புப் பணிகள்	• ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள பெருளாதார மத்திய நிலையங்களில் அவ்வச்சந்தர்ப்பங்களில் நிலவும் அபிவிருத்தித் தேவைகளுக்கு ஏற்ப இது வேறுபடும்.	*220 மில். ரூபா.*	
மொத்தம்			***1000 மில். ரூபா.***	

02. கமநல அபிவிருத்தி திணைக்களம்

தொலை நோக்கு

இலங்கையின் விவசாய சமூகத்தினதும் மற்றும் அனைத்து விவசாய நிலங்களினதும் நிலைபேறான அபிவிருத்தி.

செயற்பணி

இலங்கையின் விவசாய சமுதாயத்தின் நிலைபேறான அபிவிருத்தியிலும் அனைத்து விவசாய நிலங்களின் செழுமையான அனுகூலங்கள் மற்றும் உச்ச உற்பத்தித்திறன் என்பவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்ற வகையில் நிறுவன, ஒத்துழைப்பு, சட்ட மற்றும் முகாமைத்துவ சேவைகள் போன்றவற்றை ஒழுங்குபடுத்தி, காலத்திற்கு ஏற்றவாறு பேணி வருதல்.

அறிமுகம்

இலங்கையின் விவசாயிகளுக்குத் தேவையான வசதிகளை வழங்கும் நோக்கில் 1957 ஒக்டோபர் 01 ஆந் திகதி அப்போது இருந்த உணவுத் திணைக்களத்தைக் கலைத்து, கமநல சேவைகள் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது. 1958 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வயற் காணிச் சட்டத்தின் மூலம் பலப்படுத்தப்பட்ட இத்திணைக்களம் தற்போது 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களுக்கு இணங்க கமநல அபிவிருத்தித் திணைக்களம் என்ற பெயரில் இயங்கி வருகின்றது.

குறிக்கோள் மற்றும் முக்கிய கடமைகள்

- *அரசாங்கத்தின் விவசாயக் கொள்கைகளுக்கு இணங்கும் வகையில் விவசாயக் காணிகளைப் பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்.*
- *விவசாயக் காணி உரிமையாளர்கள், விவசாயக் காணி உரிமையுள்ள விவசாயிகள் மற்றும் ஆட்சியுரிமைகள் கொண்டவர்கள்/ குத்தகை விவசாயிகள் ஆகியோரின் விவசாய உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்.*
- *விவசாய அமைப்புக்களைப் பதிவு செய்தல் மற்றும் பேணி வருவது தொடர்பான கட்டளைகளை உருவாக்குதல் மற்றும் அந்த ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துதல்.*
- *கமநல அபிவிருத்திச் சபைகளை உருவாக்குதல் மற்றும் அவற்றின் அதிகாரங்களைப் பிரயோகிப்பதற்கான வழிகாட்டுதல்களை வழங்குதல் மற்றும் மேற்பார்வை செய்தல்.*
- *நாடு முழுவதிலும் உள்ள அனைத்து கமநல அபிவிருத்திச் சபைகளினதும் அதிகாரப் பிரதேசங்களுடன் தொடர்புடையதாக விவசாயக் காணி தொடர்பான தகவல்கள் அடங்கிய விவசாயக் காணிப் பெயர்ப் பட்டியல்களை தயாரித்து திருத்தங்களைப் பேணி வருதல்.*
- *விவசாயக் காணிகளுடன் தொடர்புடைய குத்தகை முறை விவசாயிகளின் பிரச்சினைகள் மற்றும் ஏனைய சிக்கல்களைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.*
- *சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் மற்றும் நீர் மூலங்களின் பயனுறுதித்தன்மை, பாதுகாப்பு, முகாமை என்பவற்றுடன் தொடர்புடைய ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல்.*
- *கமநல அபிவிருத்திச் சட்டம் மற்றும் அரசாங்க விவசாயக் கொள்கைகளை மீறும் தரப்பினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல்.*

குறிப்பு: 2021 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவுற்ற ஆண்டுக்கான மொத்த நிதிச் செயலாற்றுகை 2.5 கீழ் காட்டப்பட்டுள்ளது.

எதிர்பார்க்கப்பட்ட முடிவுகளை அடைய முடியாமல் போயிருப்பின் அதற்கான காரணங்கள் மற்றும் தடைகள்

நாட்டில் நிலவிய கொவிட் தொற்றுநோய்ப் பரவல் காரணமாக, திணைக்களத்தின் தொழில்நுட்ப அதிகாரிகள் மற்றும் பிராந்தியப் பொறியாளர்கள் கொவிட் நோய்த் தொற்றுக்குள்ளாகியதன் காரணமாக செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டது.

சவால்கள்

வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான அதிகாரிகள் மூலம் ஆண்டுதோறும் ஏராளமான செயற்திட்டங்கள் மதிப்பீடு செய்யப்படுகின்றமை மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் நிலை.

03. தேசிய அறுவடைக்குப் பிந்தைய முகாமைத்துவ நிறுவனம்

1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க அரச விவசாய அமைப்புச் சட்டத்தின் விதிகளின் கீழ் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 1137/10 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலிற்கு அமைய 2000 ஆம் ஆண்டு ஜூன் 19 ஆம் திகதி அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்ப நிறுவனம் நிறுவப்பட்டது. 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் 27 ஆம் திகதிக்குரிய இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 2093/26 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் இந்த நிறுவனத்தின் பெயர் தேசிய அறுவடைக்கு பிந்தைய முகாமைத்துவ நிறுவனமாக மாற்றப்பட்டுள்ளது.

விவசாயப் பயிர்களின் அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைப்பதுடன் தொடர்பான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள், பயிற்சி, விரிவாக்கம், தொழில்நுட்ப ஆலோசனை சேவைகள் மற்றும் ஆய்வுகூட சேவைகளை மேற்கொள்வதே இந்த நிறுவனத்தின் பிரதான பணிகளாகும்.

நிறுவனத்தின் தொலைநோக்கு, செயற்பணி, நோக்கங்கள்

- ***நிறுவனத்தின் தொலைநோக்கு*** *- தேசிய உணவுப் பாதுகாப்பினை உத்தரவாதபப்டுத்தும் நிலைபேறான அறுவடைக்கு பிந்திய அபிவிருத்திக்கான சிறப்பு மத்திய நிலையமாக ச் செயற்படல்*

- ***செயற்பணி*** *- வினைத்திறன்மிக்க மற்றும் உற்பத்தித்திறன் கொண்ட அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பத் தலையீடுகளின் மூலம் தேசிய உணவுப் பாதுகாப்பில் நிலைபேறான அபிவிருத்தியை ஏற்படுத்தும் பொருட்டு போட்டித் தன்மைமிக்க விலைக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளுக்கு உயர் தரத்திலான பாதுகாப்பான உணவு உற்பத்திகளை வழங்குவதற்கு வழங்கல் மற்றும் பெறுமதிச் சங்கிலிகளை பலப்படுத்தல்.*

- ***நோக்கங்கள்***

03 பிரதான நோக்கங்களின் ஊடாக நிறுவனத்தின் அனைத்துச் செயற்பாடுகளும் வழிநடத்தப்படுகின்றன.

I. 2025 ஆண்டளவில் விவசாயப் பயிர்களின் அறுவடைக்குப் பிந்திய இழப்புகளை விரைவில் அழுகிப் பழுதடையக்கூடிய பயிர்களில் 5% வரையும் இலகுவில் பழுதடையாத பயிர்களில் 25% வரையும் குறைத்தல்.

II. விவசாயத்துடன் தொடர்புடைய தொழிற்துறைகளை அபிவிருத்தி செய்தல்

III. நிறுவனத்தில் சிறந்த நிருவாக செயற்பாடுகளை ஊக்குவித்தல்

பிரதான பணிகள்

அமைப்புச் சட்டத்திற்கு அமைய கடமைகள்

- *இலங்கையில் அறுவடைக்கு பிந்தைய தொழில்நுட்பத்தை மேம்படுதத் தேவையான ஆராய்ச்சிகளை இனங்கண்டு, முன்னுரிமைகளைத் தயாரித்து அவற்றை செயற்படுத்தல். இதன் கீழ், நெல், அரிசி, பிற தானிய வகைகள், காய்கறிகள் மற்றும் பழங்கள், களப் பயிர்கள், வாசனைத் திரவியப் பொருட்கள் மற்றும் அலங்காரப் பூக்கள் என்பவற்றின் அறுவடை, பயன்பாடு, போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் மற்றும் பாதுகாத்து வைத்தல், முதன்மை மற்றும் இரண்டாம் நிலை பதப்படுத்தல் முறைகள், பக்கவிளை*

பொருள்களின் பாவனை மற்றும் தரச் சன்றுப்படுத்தல் ஆகியன தொடர்பான தொழில்நுட்பங்களை அடையாளம் காணல் மற்றும் பரவலாக்கல்.

- விவசாயப் பயிர்களின் முதன்மை மற்றும் இரண்டாம் நிலைப் பதப்படுத்தல் செலவுகளை குறைக்கும் பொருட்டு அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப முறைகளை இயந்திரமயமாக்கல் மற்றும் முறையான அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப முறைகளின் ஊடாக விவசாய பயிர்ககளின் போசணைத் தரத்தை அதிகரித்தல் மற்றும் அதனூடாக மக்களின் போசணை தரத்தை உயர்த்துதல்.
- விவசாயிகளின் வருமானம் மற்றும் தொழில் வாய்ப்புகளை அதிகரித்தல் மற்றும் வாழ்வாதார வழிகளை விருத்தி செய்வதற்காக கிராமிய மட்டத்தில் நிலைபேறான விவசாயத்துடன் தொடர்பான தொழிற்துறைகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் விரிவாக்கம் செய்தல்.
- உற்பத்தி சந்தைப்படுத்தலின் தரம், அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பம் தொடர்பான புதிய தொழில்நுட்ப முறைகளின் பயன்பாடு மற்றும் பொருட்களை சந்தைப்படுத்தும் வசதிகளை மேம்படுத்தல் உள்ளிட்ட அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பத் துறையில் மேம்படுத்தப்பட்ட நுட்ப முறைகள் பற்றிய பயனுறுதிமிக்க தொழில்நுட்பப் பரிமாறல்களை மேற்கொள்ளல் மற்றும் அவற்றை விவசாயிகள், விவசாய அமைப்புகள் மற்றும் ஏனைய பங்குதாரர்களுக்கும் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட இலக்குக் குழுக்களுக்கு மத்தியிலும் பிரபல்யப்படுத்தல்.

நிறுவனக் கட்டமைப்பு – இதனுடன் இணைப்பாக வழங்கப்பட்டுள்ளது. – இணைப்பு 01

அமைச்சின் கீழ் காணப்படும் திணைக்களங்கள்/ திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்/ மாவட்டச் செயலகத்தின் கீழ் காணப்படும் பிரதேச செயலகங்கள்

தேசிய அறுவடைக்குப் பிந்தைய முகாமைத்துவ நிறுவனத்தின் கீழ் 08 மாவட்ட நிலையங்கள், அனுராதபுரம், குருநாகலை, கண்டி, நுவரெலியா, அம்பாறை, ஹம்பாந்தோட்டை, கிளிநொச்சி மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களில் நிறுவப்பட்டுள்ளன.

அமைச்சு/ திணைக்களம்/ மாகாண சபையின் கீழ் காணப்படும் நிறுவனங்கள்/ நிதிகள் – தேசிய அறுவடைக்குப் பிந்தைய முகாமைத்துவ நிறுவனத்திற்கு 2021 ஆம் ஆண்டில் மூன்று செலவுத் தலைப்புகளின் கீழ் நிதி கிடைக்கப்பெற்றது. அவை கீழ்வருமாறு.

- செலவுத் தலைப்பு - 11802-03-20-2509 இன் கீழ் கமத்தொழில் அமைச்சின் ஊடாக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்கான 76.3505 மில். ரூபா. நிதி ஒதுக்கீட்டுக்கான அங்கீகாரம் கிடைக்கப்பெற்றது.
- செலவுத் தலைப்பு 425-02-03-002-2201 இன் கீழ் திறைசேரியிலிருந்து நேரடி ஒதுக்கீடாக மூலதன செலவுக்கான 9.85 மில். ரூபா. நிதி ஒதுக்கீட்டுக்கான அங்கீகாரம் கிடைக்கப்பெற்றது.
- செலவுத் தலைப்பு 425-02-05-03-1503 இன் கீழ் திறைசேரியிலிருந்து நேரடி ஒதுக்கீடாக மீண்டுவரும் செலவுகளுக்கான நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றது. அது 123.5 மில். ரூபா ஆகும்.

வெளிநாட்டு நிதியுதவி கிடைக்கப்பெறும் செயற்திட்டங்களின் விபரம் (இருப்பின்) – இல்லை

அ). செயற்திட்டத்தின் பெயர்

ஆ). பங்களிப்பு செலுத்திய முகவர் நிறுவனம்

இ). செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு - மில். ரூ.

ஈ). செயற்திட்ட காலம்

முன்னேற்றம் மற்றும் எதிர்கால தொலைநோக்கு, விஷேட அடைவுகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்

மேற்கூறிய நோக்கங்களை அடைவதில் நிறுவனம் ஆற்றும் பிரதான பணிகள் பல விடயப் பரப்புகளின் ஊடாக பிரிந்து செல்கின்றன. அவை அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பத்துடன் தொடர்பாக மேற்கொள்ளும்,

- ஆராய்ச்சிச் செயற்திட்டங்கள்,
- தொழில்நுட்ப விரிவாக்க நடவடிக்கைகள் (பயிற்சி நெறிகள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் களச் செயற்பாடுகள்)
- அபிவிருத்தி செயற்திட்டங்கள் (புதிய மற்றும் பொருத்தமான தொழில்நுட்பங்களை களத்தில் பயன்படுத்துவது தொடர்பானவை)
- ஆலோசனை சேவைகள்
- பொறியியல் சேவைகள் மற்றும் ஆய்வுகூட சேவைகள்

மேற்கூறிய பிரதான துறைகளின் ஊடாக மேற்கொள்ளப்படும் அனைத்து நிகழ்ச்சித் திட்டங்களும் மக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு உதவுகின்றன. அதேபோன்று, முறையான தொழில்நுட்ப முறைகளை அறுவடைக்குப் பிந்திய செயற்பாடுகளில் பிரயோகிப்பதன் காரணமாக உணவு வகைகளின் போசணைத் தரம் பாதுகாக்கப்படுவதுடன் விவசாயிகள் மற்றும் வழங்கல் சங்கிலியின் பங்குதாரர்களின் வருமானத்தை அதிகரிப்பதற்கும் புதிய தொழில் வாய்ப்புகள் உருவாக்கப்படுவதற்கு உதவி செய்கின்றது.

கடந்த காலங்கள் முழுவதிலும் மாத்திரமல்லாது தற்போதும் பண்ணையிலிருந்து நுகர்வோர் வரை விவசாயப் பயிர்களின் வழங்கல் மற்றும் பெறுமதி சங்கிலிகளில் ஏற்படும் அறுவடைக்குப் பிந்திய இழப்புகளை குறைத்து தேசிய உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்தும் பணியில் தேசிய அறுவடைக்குப் பிந்திய முகாமைத்துவ நிறுவனம் பாரிய பங்களிப்பை செலுத்தி வருகின்றது.

2020 ஆண்டின் செயல் திட்டத்திற்கு அமைய நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் முன்னேற்றங்கள் அவ்வத்துறைகளின் கீழ் பின்வருமாறு விரிவாக விபரிக்கப்பட்டுள்ளன.

ஆராய்ச்சி செயற்திட்டங்கள்

ஆராய்ச்சி செயற்திட்டங்கள் 03 பிரதான துறைகளின் ஊடாக செயல்படுத்தப்படுகின்றன.

1. விவசாய பயிர்களின் அறுவடைக்குப் பிந்திய இழப்புகளை குறைத்தல் மற்றும் அறுவடைக்குப் பிந்திய உயிர்ப்பு காலத்தை அதிகரித்தல்.
2. அறுவடை பொருட்களுக்கு பெறுமதி சேர்த்தல் மற்றும் உணவுத் தொழில்நுட்பம்
3. பாதுகாப்பான உணவு மற்றும் போசனை

இந்தத் துறைகள் தொடர்பாக காணப்படும் பிரச்சினைகளுக்கு அவற்றுடன் தொடர்புடைய ஆராய்ச்சி செயற்திட்டங்களின் ஊடாக தீர்வுகள் காணப்படுகின்றன.

2021 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆராய்ச்சிச் செயற்திட்டங்களின் விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

நிகழ்ச்சித் திட்டம் / செயற்திட்டம்	ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	செலவு செய்த தொகை (மில். ரூபா)	பௌதீக இலக்கு	பௌதீக முன்னேற்றம்
2020 ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் ஆராய்ச்சி செயற்திட்டங்கள்				
துரிதப்பதப்படுத்தல் செயற்பாட்டின் மூலம் புதிய அரிசியின் ஒட்டும் தன்மையைக் குறைப்பதன் ஊடாக நுகர்வோர் விருப்பை அதிகரித்தல்.	*0.1235*	*0.123*	புதிய அரிசியில் காணப்படும் ஒட்டும் தன்மையைக் குறைப்பதற்கான வழிமுறையொன்றை உருவாக்குதல்.	உலர் வெப்ப முறை மற்றும் ஈர வெப்ப முறை என்பவற்றைப் பயன்படுத்தி ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. ஆராய்ச்சியின் இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது..
முள்ளீத்தாப் பழத்தைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் பெறுமதி சேர்த்த தயாரிப்புகளின் போசனை மற்றும் செயற்பாட்டுப் பண்புகளை பரிசோதித்தல்	*0.01*	*0.009*	முள்ளீ தாப் பழத்தைப் பயன்படுத்தி 3 வகையான உணவுப் பொருட்களை உற்பத்தி செய்தல் மற்றும் அதன் போசணைத் தரத்தை அதிகாரித்தல்.	முள்ளீத்தாப் பழத்தைப் பயன்படுத்தி 3 வகையான உணவுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. ஆராய்ச்சிப் பெறுபேறுகளை களத்திற்கு அறிமுகம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
ஓசோன் சிகிச்சை முறையை உபயோகித்து தெரிவு செய்யப்பட்ட மலைநாட்டு மரக்கறி வகைகளை சுத்தம் செய்யும் உபகரணத்தை விருத்தி செய்தல் மற்றும் அவற்றின் செயல்திறன் மதிப்பீட்டை மேற்கொள்ளல்.	*0.155*	*0.154*	காய்கறிகளின் அறுவடைக்கு பிந்தைய நோயாக்கிகளைக் கட்டுப்படுத்த ஓசோன் சிகிச்சையை உள்ளடக்கிய செயல்பாட்டுக் கருவியை உருவாக்குதல்.	சுத்தம் செய்யும் உபகரணம் விருத்தி செய்யப்பட்டுள்ளது.
உலர்த்தும் தொழில்நுட்ப செயற்பாட்டின் அளவுருக்களை செம்மைப்படுத்துவதன் மூலம் உலர்த்திய பழ வகைகளின் தரப் பண்புகளை மேம்படுத்துதல்.	*1.406*	*1.405*	உலர்த்தும் தொழில்நுட்ப செயற்பாட்டின் அளவுருக்களை செம்மைப்படுத்துதல், உலர்த்திய பழ வகைகளின் தரப் பண்புகளை பகுப்பாய்வு செய்தல்.	அளவுருக்கள் செம்மைப்படுத்தப்பட்டுள்ளன.
மொத்தம்	***1.6945***	***1.691***		

குறிப்பு: டிசம்பர் 31, 2021 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒட்டுமொத்த நிதிச் செயல்திறன் 2.2 இல் காட்டப்பட்டுள்ளது

ஆராய்ச்சி செயற்திட்டங்களின் ஊடாக அடையாளம் காணப்படும் முறையான மற்றும் பொருத்தமான அறுவடைக்கு பிந்தைய தொழில்நுட்பங்கள், அபிவிருத்தி செயற்திட்டங்கள், பயிற்சி நிகழ்சிகள் மற்றும் ஏனைய விரிவாக்க நடவடிக்கைகள் மற்றும் ஆலோசனை சேவைகள் ஊடாக பயிர்ச் செய்கைக் களத்திற்கு அறிமுகப்படுத்தப்படுகின்றன. மேலும் அது தொடர்பான ஆராய்ச்சிக் கட்டுரைகள் உள்நாட்டு மற்றும் சர்வதேச ஆராய்ச்சி சஞ்சிகைகளில் வெளியிடப்படுகின்றன. புதிய தொழில்நுட்பங்களுக்கான காப்புரிமைகளைப் பெறுவதற்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

அபிவிருத்தி செயற்திட்டங்கள்

2021 ஆம் ஆண்டில் 09 புதிய அபிவிருத்தி செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவற்றின் முன்னேற்றங்கள் பின்வருமாறு.

நிகழ்ச்சித் திட்டம் / செயற்திட்டம்	ஒதுக்கப் பட்ட தொகை (மில். ரூபா)	செலவு செய்த தொகை (மில். ரூபா)	பௌதீக இலக்கு	பௌதீக முன்னேற்றம்
இலங்கையில் மரக்கறி மற்றும் பழ வழங்கல் சங்கிலிகளில் ஏற்படும் அறுவடைக்குப் பிந்திய இழப்புகளை குறைக்கும் பொருட்டு பாதுகாப்பான பொதியிடல் மற்றும் போக்குவரத்து முறைகளை அறிமுகம் செய்தல்	49.587	49.274	பாதுகாப்பான பொதியிடல் தொடர்பாக பங்குதாரர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், போக்குவரத்துக்குத் தேவையான 350000 பொதிகளைக் கொள்வனவு செய்தல் மற்றும் தெரிவு செய்யப்பட்ட பங்குதாரர்களுக்கு விநியோகம் செய்தல்.	பங்குதாரர்களுக்கான 20 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடாத்தபட்டன. 31240 பொதிகள் கொள்வனவு செய்யப்பட்டு பங்குதாரர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டன/ செய்யப்படுகின்றன.
பழங்கள் மற்றும் மரக்கறி வகைகளை விநியோகம் செய்வதற்கு பிராந்திய விநியோக வலையமைப்பை விருத்தி செய்தல்	5.45	5.3039	ஒரு முன்னோடி ஆய்வாக நுவரெலியா, கண்டி மற்றும் குருநாகல் ஆகிய இடங்களை மையமாகக் கொண்ட விநியோகச் சங்கிலியை நிறுவுதல்	இதற்காக சம்பந்தப்பட்ட விநியோகச் சங்கிலிப் பங்குதாரர்கள் அடையாளம் காணப்பட்டு, அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. ஏனைய தொடர்புடைய பணிகள் நடைபெற்று வருகின்றன
வீடுகளில் அரிசி பதனிடும் தொழிற்துறையை அபிவிருத்தி செய்தல்	4.274	4.2053	100 அரிசி பதனிடும் அலகுகளை நிறுவுதல்	77 அரிசி பதப்படுத்தும் அலகுகள் கீழுள்ளவாறு நிறுவப்பட்டுள்ளன. கண்டி – 04 அலகுகள் கேகாலை – 03 அலகுகள் மாத்தளை – 03 அலகுகள் குருநாகல் - 25 அலகுகள் யாழ்ப்பாணம் – 03 அலகுகள் கிளிநொச்சி – 05 அலகுகள் வவுனியா – 01 அலகு முல்லைத்தீவு – 01 அலகு அம்பாறை – 32 அலகுகள்

நிகழ்ச்சித் திட்டம் / செயற்திட்டம்	ஒதுக்கப் பட்ட தொகை (மில். ரூபா)	செலவு செய்த தொகை (மில். ரூபா)	பௌதிக இலக்கு	பௌதிக முன்னேற்றம்
தானிய உமி/ தோல் நீக்கும் அலகுகளை நிறுவுதல்	2.625	2.032	சந்தையில் தோல்/ உமி நீக்கப்பட்ட தானிய வகைகளின் தாராளமாகக் கிடைக்கும் தன்மையை அதிகரிக்கும் பொருட்டு 15 உமி/ தோல் நீக்கும் அலகுகளை நிறுவுதல்	15 தானிய உமி நீக்கும் அலகுகளை நிறுவுதல் பின்வருமாறு அமையும். ஹம்பாந்தோட்டை- 01 குருநாகல் - 02 கிளிநொச்சி - 01 முல்லைத்தீவு - 02 வவுனியா - 02 அம்பாறை - 03 அனுராதபுரம் – 04
விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதற்கு அரிசி, சோளம் மற்றும் தானிய வகைகளுக்கான பண்ணை களஞ்சிய வசதிகளை அபிவிருத்தி செய்தல்	1.78	1.747	75 பண்ணை களஞ்சியங்களை அபிவிருத்தி செய்தல்	67 பண்ணை களஞ்சியங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. கண்டி-05 குருநாகல் - 13 கிளிநொச்சி - 01 வவுனியா-02 முல்லைத்தீவு-12 அம்பாறை-31 அனுராதபுரம்-02 ஹம்பாந்தோட்டை-02
இலங்கையில் பழப் பெறுமதி சங்கிலியின் பங்குதாரர்களை பலப்படுத்தும் நோக்கில் இரண்டாம்நிலை பதனிடும் நிலையங்களை நிறுவுதல்.	3.995	3.45	அறுவடைக்குப் பின் பழங்களில் ஏற்படும் சேதத்தைக் குறைப்பதற்கு பெறுமதி சேர்க்கப்பட்ட தயாரிப்புகளை உற்பத்தி செய்தல் மற்றும் புதிய தொழில்முனைவோரை உருவாக்குதல். இதற்காக 03 பழச் சாறு உற்பத்தி செய்யும் அலகுகள் மற்றும் 02 உலர்த்தும் அலகுகள் என்பவற்றை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.	பழ வகைகளைப் பதப்படுத்தும் அலகுகள் அமைக்கப்படும் இடங்கள் பின்வருமாறு, அனுராதபுரம் – 01 அலகு மொனராகலை – 01 அலகு குருநாகல் – 01 அலகு கேகாலை – 01 அலகு மாத்தறை – 01 அலகு
கிராமய மட்டங்களில் வாசனைப் பொருட்களை பதனிடும் நுண் தொழில் முனைவுகளை அறிமுகம் செய்தல்.	1.13	1.053	வாசனைப் பொருட்களின் உற்பத்தித் துறையுடன் தொடர்பான 15 இளம் தொழில்முனைவோரை உருவாக்குதல்	15 அலகுகள் நிறுவப்பட்ட இடங்கள் பின்வருமாறு: கண்டி - 02 கேகாலை - 01 ஹம்பந்தோட்டை -011 குருநாகல் - 02 கிளிநொச்சி - 01 முல்லைத்தீவு - 01 அம்பாறை - 03 அனுராதபுரம் - 01
உள்நாட்டு பலா, சோளம், பூசணிக்காய் மற்றும் ஏனைய உணவுப் பயிர்களை பயன்படுத்தி பெறுமதி சேர்க்கப்பட்ட பிரித்தெடுப்பு உற்பத்திகளை விருத்தி செய்வதற்கான நடுத்தர அளவிலான பிரித்தெடுப்பு அலகுகளை நிறுவுதல்.	4.015	3.92	உள்நாட்டுக் கிழங்கைப் பயன்படுத்தி போசணைமிக்கதும் விரைவாக உணவாகக் கொள்ளக்கூடியதுமான பிரித்தெடுப்பு (சாறு) தயாரிப்புகளை அறிமுகப்படுத்துதல்.	தேசிய அறுவடைக்குப் பிந்தைய முகாமைத்துவ நிறுவனத்தில் ஒரு அலகு நிறுவப்பட்டு அதன் மூலம் தொழில்முனைவோருக்கு பயிற்சி அளிக்கப்படுகின்றது.

நிகழ்ச்சித் திட்டம் / செயற்திட்டம்	ஒதுக்கப் பட்ட தொகை (மில். ரூபா)	செலவு செய்த தொகை (மில். ரூபா)	பௌதீக இலக்கு	பௌதீக முன்னேற்றம்
புதிய உற்பத்தி அபிவிருத்தி வழிமுறைகளை பலப்படுத்துதல் மற்றும் உற்பத்திகளின் தரப்பண்புகளை அதிகரித்தல் என்பவற்றுக்காக ஆய்வுகூட வசதிகள் அபிவிருத்தி செய்தல்.	1.8	1.776	அறுவடைக்குப் பிந்தைய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பங்குதாரர்களுக்கு ஆய்வுகூடச் சேவைகளை வழங்குதல்.	நுண்ணுயிர்களின் தரத்தை நிர்ணயிப்பதற்கு தேவையான இரண்டு உபகரணங்கள் ஆய்வுகூடத்திற்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.
மொத்தம்	**74.662**	**72.7612**		

தேசிய அறுவடைக்குப் பிந்தைய முகாமைத்துவ நிறுவனத்தின் மூலம் வழங்கப்படும் சேவைகள்

தொழில்நுட்பங்கள் தொடர்பான பிரச்சார நடவடிக்கைகள்

முறையான மற்றும் பொருத்தமான அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பங்களை களத்தில் பயன்படுத்துவதற்கு அறிமுகம் செய்தல் மற்றும் அதற்காக வழங்கல் மற்றும் பெறுமதி சங்கிலி பங்குதாரர்களுக்கு பயிற்சியளித்தல் என்பன தொழில்நுட்ப பிரச்சார நடவடிக்கைகளின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன. இதற்காக வதிவிட மற்றும் களப் பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டதுடன் தங்குமிட நிகழ்ச்சிகளில் பங்கேற்ற உறுப்பினர்களிடமிருந்து கட்டணம் அறவிடப்பட்டதுடன் களப் பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்குபற்றியோரிடமிருந்து கட்டணம் எதுவும் அறவிடப்படவில்லை.

நிகழ்ச்சித் திட்டம் / செயற்திட்டம்	பௌதீக இலக்கு	பௌதீக முன்னேற்றம்
அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பங்களை பிரபல்யப்படுத்துவதற்கான பயிற்சி நிகழ்ச்சிகள்	முறையான அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பங்களின் பயன்பாடு பற்றிய 100 பயிற்சி நிகழ்ச்சிகள் (வதிவிட மற்றும் களப் பயிற்சி நிகழ்ச்சிகள் எனும் அடைப்படையில்) நடத்துவதன் ஊடாக 2000 பயனாளர்களுக்கு பயிற்சியளித்தல், அறுவடைக்குப் பிந்திய முகாமைத்துவத் துறைக்கு புதிய தொழில் முனைவோர்களை உருவாக்குதல்.	சுமார் 200 பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டு விவசாயிகள், பெண் விவசாயிகள் மற்றும் விவசாய அமைப்புகளின் உறுப்பினர்கள் மற்றும் செயற்றிட்டங்களின் பயனாளர்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான விவசாய உற்பத்திகளை சேகரிப்போர் மற்றும் உற்பத்திகளை போக்குவரத்து செய்வோர் மற்றும் விற்பனையாளர்கள், தொழில் முனைவோர், விவசாய உற்பத்திகளை தயாரிப்பவர்கள், அரசு, கூட்டுறவு, தனியார் மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளின் விரிவாக்க அதிகாரிகள் ஆகியோருக்கு முறையான அறுவடைக்குப் பிந்தைய நடைமுறைகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. 102 புதிய தொழில் முனைவோர் உருவாக்கப் பட்டுள்ளனர். அவர்களின் விபரம் பின்வருமாறு; வாசனைப் பொருட்கள் -18 அரிசியைக் கொண்டு உணவு உற்பத்தி மேற்கொள்வோர் - 43 பழங்களை உலர்த்தல் -05 பழங்களைக் கொண்டு மேற்கொள்ளும் உற்பத்திகள் - 32 தானியங்கள் / அவரைப் பயிர்களைக் கொண்டு மேற்கொள்ளும் உற்பத்திகள் -04

ஆலோசனை சேவை, பொறியியல் சேவை மற்றும் ஆய்வுகூட சேவை

வாசனை பொருட்களை பதனிடும் இயந்திரங்களை பயன்படுத்தல் மற்றும் பராமரித்தல், அரிசி மற்றும் அரிசி மா பதனிடும் இயந்திரங்களை பயன்படுத்தல் மற்றும் பராமரித்தல் மற்றும் மரக்கறி வகைகள் மற்றும் பழ வகைகளை உலர்த்தும் தொழில்நுட்பம் தொடர்பான ஆலோசனை சேவைகளை வழங்குவது என்பன பொறியியல் சேவை ஊடாக மேற்கொள்ளப்படுவதுடன் ஆய்வுகூட சேவைப் பிரிவின் பிரதான பணியாக நிறுவனத்தில் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் ஆலோசனை சேவைகளுக்குத் தேவையான இரசாயன, பௌதிக மற்றும் நுண்ணுயிரியல் ஆய்வுகூட வசதிகளை வழங்கல் காணப்படுகின்றது. அறுவடைக்குப் பிந்திய செயற்பாடுகளுடன் நேரடியாக மற்றும் மறைமுகமாக தொடர்புபடும் அரச மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் ஏனைய அனைத்து பங்காளர்களுடனும் இணைந்து அறுவடைக்குப் பிந்தைய செயற்பாடுகளுடன் தொடர்பான தொழில்நுட்ப பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு தேவையான தொழில்நுட்ப அறிவை வழங்கும் பணி ஆலோசனை சேவைப் பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது.

அந்த வகையில் அரிசி ஆலைகளை நவீன மயப்படுத்தல், தரத்தில் சிறந்த அரிசி உற்பத்தி, தரத்தில் சிறந்த அரிசி மா உற்பத்தி, அரிசி மாவைக் கொண்டு உணவு பொருட்களை உற்பத்தி செய்தல், இலுப்பை மற்றும் எள் என்பவற்றிலிருந்து எண்ணை பிரித்தெடுத்தல், உயர் தரத்திலான வாசனைப் பொருட்களை உற்பத்தி செய்தல், காய்கறி மற்றும் பழ வகைகளை உலர்த்துதல், பழங்களைக் கொண்டு தயாரிக்கப்படும் உற்பத்திகள் போன்றவற்றுக்கு தொழில் முனைவோருக்கு ஆலோசனை சேவைகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், குளிரூட்டும் அறைகளை ஆரம்பிப்பதற்கு தேவையான அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் அவற்றுக்குத் தேவையான தொழில்நுட்ப அறிவை வழங்குதல், கைத்தொழில் சேவைக்கான செயற்திட்ட அறிக்கைகளைத் தயாரித்தல் போன்ற 22 வகையான ஆலோசனை சேவைகள் 2021 ஆம் ஆண்டில் தேசிய அறுவடைக்குப் பிந்திய முகாமைத்துவ நிறுவனத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ளன.

நிறுவன அபிவிருத்தி செயற்திட்டங்கள் - இலங்கையின் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கு அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப செயற்பாடுகளை ஊக்குவிக்கும் பொருட்டு அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவனத்தை அபிவிருத்தி செய்தல் – செலவுத் தலைப்பு (425-02-05-03-15)

நிகழ்ச்சித் திட்டம் / செயற்திட்டம்	ஒதுக்கப் பட்ட தொகை (மில். ரூபா)	செலவு செய்த தொகை (மில். ரூபா)	பௌதீக இலக்கு	பௌதீக முன்னேற்றம்
ஆய்வுகூட மற்றும் இயந்திர வேலைத்தளத்தின் வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் அறுவடைக்கு பிந்தைய நிறுவனத்தின் ஊழியர்களுக்கு பொருத்தமான பணிச்சூழலை உருவாக்குதல்.	1.85	0.937	சர்வதேச தரநிர்ணயங்களுக்கு அமைந்த ஆய்வுகூட பகுப்பாய்வு வசதிகளை ஏற்படுத்தல் மற்றும் அலுவலக வசதிகளை மேம்படுத்துதல்.	தேவையான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. ஆய்வுகூட தரச் சான்றுப்படுத்தலுடன் தொடர்பான பணிகள் நடைபெற்று வருகின்றன. மாதிரி பகுப்பாய்வு வசதிகள் விரிவாக்கப்பட்டுள்ளன. நிறுவனத்தின் ஊழியர்களுக்கான அலுவலக வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.
வதிவிட மற்றும் ஆய்வுகூடக் கட்டிடங்களை புனரமைத்தல்.	4.5	1.865	பயிற்சி நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் வாடிக்கையாளர்களுக்கு தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.	குறித்த கட்டடங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.
நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்பத்	0.25	0.24	நிறுவனத்தின் இணையத் தளத்தை இற்றைப்படுத்தல்	உரிய இற்றைப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நிகழ்ச்சித் திட்டம் / செயற்திட்டம்	ஒதுக்கப் பட்ட தொகை (மில். ரூபா)	செலவு செய்த தொகை (மில். ரூபா)	பௌதீக இலக்கு	பௌதீக முன்னேற்றம்
கட்டமைப்பை விருத்தி செய்தல்.			மற்றும் தேவையான மென்பொருட்களை கொள்வனவு செய்தல்,	
மொத்தம்	6.6	4.358		

2021 டிசம்பர் 31 திகதியுடன் நிறைவுபெறும் வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

நிதிச் செயலாற்றுகை அறிக்கை

ஏசீஏ-எப்

2020 டிசம்பர் 31 திகதியுடன் நிறைவுபெறும் கால எல்லைக்கான நிதிச் செயலாற்றுகை அறிக்கை

ரூபா.

வரவு செலவு (நடப்பு வருடத்திற்கான)		குறிப்பு	உண்மையான	
			நடப்பு வருட (ரூபா)	முன்னைய வருட (ரூபா)
-	வருமானப் பெறுகைகள்		-	-
-	வருமான வரி உள்நாட்டுப் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரிகள்	1	-	-
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	2	-	-
-	வரியல்லாத வருமானங்கள்	3	8,853,202.51	9,198,532.31
-	ஏனையவை	4	-	-
-	மொத்தவருமானப் பெறுகைகள் (அ)		8,853,202.51	9,198,532.31
-	வருமானமல்லாத பெறுகைகள்		69,284,743.31	75,473,656.82
-	திறைசேரிக் கட்டுநிதிகள்		126,177,900.00	115,547,000.00
-	வைப்புகள்			-
-	முற்பணக் கணக்குகள்			-
-	ஏனைய பெறுகைகள்			-
-	மொத்த வருமானமல்லாத பெறுகைகள் (ஆ)		195,462,643.31	191,020,656.82
-	மொத்த வருமானப் பெறுகைகள் மற்றும் வருமானமல்லாத பெறுகைகள் (இ) = (அ) + (ஆ)		204,315,845.82	200,219,189.13
	கழி : செலவினங்கள்			
-	மீண்டு வரும் செலவுகள்		-	-
-	ஊதியங்கள், சம்பளங்கள் மற்றும் ஏனைய ஊழியர் நன்மைகள்	5	91,506,199.11	94,820,653.63
-	ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள்	6		-
-	மானியங்கள், நன்கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7		-
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8		-
-	ஏனைய மீண்டு வரும் செலவுகள்	9	92,388,598.18	88,637,863.69

-	மொத்த மீண்டு வரும் செலவுகள் (ஈ)		183,894,797.29	183,458,517.32
-	மூலாதன செலவுகள்			-
-	மூலதனச் சொத்துகள்		6,100,822.20	21,561,119.55
-	புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தல்	10		-
-	மூலதன சொத்துக்களை கையகப்படுத்துதல்	11		-
-	மூலதன மாற்றல்கள்	12		-
-	நிதி சொத்துக்களை கையகப்படுத்துதல்	13		-
-	திறன் விருத்தி	14	-	-
-	ஏனைய மூலதன செலவுகள்	15	-	-
-	மொத்த மூலாதன செலவுகள் (உ)		6,100,822.20	21,561,119.55
	பிரதான பேரேட்டு செலவுகள் (ஊ)			-
	வைப்புக் கொடுப்பனவுகள்			-
	முற்பணக் கொடுப்பனவுகள்			-
	மொத்த செலவுகள் எ = (ஈ+உ+ஊ)		189,995,619.49	205,019,636.87
-	2021 டிசம்பர் 31 ஆம் திகதியின் போதான கட்டுநிதி மீதி ஏ = (இ-எ)		14,320,226.33	(4,800,447.74)

நிதி நிலைமை தொடர்பான அறிக்கை

ஏசீஏ-பீ

2021 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான
நிதி நிலைமை தொடர்பான அறிக்கை

ரூபா.

	குறிப்பு	உண்மையான	
		நடப்பு வருட (ரூபா)	முன்னைய வருட (ரூபா)
நிதி அல்லாத சொத்துகள்			
சொத்துகள், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள	ஏசீஏ-6	196,981,245.56	191,950,823.36
நிதிச் சொத்துகள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5(அ)	21,921,641.14	30,498,164.45
காசு மற்றும் காசுக்கு ஈடானவை	ஏசீஏ-3	56,179,982.98	50,842,892.58
மொத்த சொத்துகள்		275,082,869.68	273,291,880.39
நிகர சொத்துகள்/ பங்குகள்			
நிகர சொத்துகள்		222,083,680.68	201,886,259.61
சொத்துகள், பொறித் தொகுதி மற்றும் உபகரண இருப்பு			-
வாடகை மற்றும் வேலை			-
இருப்பு	ஏசீஏ-5(ஆ)	37,976,744.50	37,976,744.50
நடைமுறைப் பொறுப்புகள்		15,022,505.15	33,428,876.28
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4		
கட்டுநிதி மீதி	ஏசீஏ-3		
மொத்தப் பொறுப்புகள்		275,082,869.68	273,291,880.39

காசுப் பாய்ச்சல் தொடர்பான அறிக்கை

ஏசீஏ- சீ

2021 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவுபெறும் காலப்பகுதிக்கான
காசுப் பாய்ச்சல் தொடர்பான அறிக்கை

ரூ.

	உண்மையான	
	நடப்பு வருட (ரூபா)	நடப்பு வருட (ரூபா)
தொழிற்பாட்டு நடவடிக்கைகளிருந்து பிறப்பிக்கப்படும் காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், அபராதங்கள், தண்டப்பணம், அனுமதிப் பத்திரங்கள்	-	-
இலாபம்		
வருமானம் அல்லாத பெறுகைகள்	-	-
ஏனைய தலைப்புகளில் இருந்து ஈட்டிய வருமானங்கள், கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	-	-
தொழிற்பாடுகளில் இருந்து பிறப்பித்த மொத்த காசு (அ)		
கழி – செலவிடப்பட்ட காசு	-	-
ஆள்சார் வேதனாதிகள் மற்றும் தொழிற்பாட்டுக் கொடுப்பனவுகள்	-	-
மானியங்கள் மற்றும் மாற்றல் கொடுப்பனவுகள்	-	-
பிற செலவினத் தலைப்புகளுக்கான செலவினம், திறைசேரிக்கு மீளளித்த கட்டுநிதி	-	-
தொழிற்படுகளுக்கு வழங்கிய மொத்தக் காசு (ஆ)		
தொழிற்பட்டு நடவடிக்கைகளில் இருந்து பெற்ற காசுப் பாய்ச்சல் (இ) = (அ) – (ஆ)	*10,591,200.71*	*4,813,552.10*
முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து பெற்ற காசுப் பாய்ச்சல்		
வட்டி		
பங்கிலாபம்		
சொத்து விற்பனை, பௌதீக ஆதன விற்பனை, கடன் அறவீடுகள்		
முற்பண அறவீடுகள்		
முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து ஈட்டிய மொத்தக் காசு (ஈ)		
கழிக்கப்பட்டது : செலவிடப்பட்ட காசு		
பௌதீக சொத்துகளின் கொள்வனவு அல்லது நிர்மாணம் மற்றும் ஏனைய முதலீடுகளைக் கையகப்படுத்தல்		
முற்பணக் கொடுப்பனவுகள்		
முதலீட்டு நடவடிக்கைகளுக்கு செலவழித்த மொத்தக் காசுப் பாய்ச்சல் (உ)		
முதலீட்டு நடவடிக்கைகளுடன் தொடர்பான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ) = (ஈ) - (உ)	*(5,030,422.20)*	*(10,240,091.02)*
தொழிற்பட்டு நடவடிக்கைகள் மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ) + (ஊ)	*5,560,778.51*	*(5,426,538.92)*

நிதிச் செயற்பாடுகளில் இருந்தான காசுப் பாய்ச்சல்		
உள்நாட்டுக் கடன் பெறுகைகள்		
வெளிநாட்டுக் கடன் பெறுகைகள்		
பெறப்பட்ட நன்கொடைகள்		
பெறப்பட்ட வைப்புகள்		
நிதிச் செயற்பாடுகளில் இருந்து பெறப்பட்ட மொத்தக் காசுப் பாய்ச்சல் (ஏ)	(223,668.11)	9,462,540.57
கழிக்கப்பட்டது – காசு செலவிடல்		
உள்நாட்டுக் கடன்பெறுகைகள் மீளளித்தல்		
வெளிநாட்டுக் கடன்பெறுகைகள் மீளளித்தல்		
மீளளித்த வைப்புகள்		
நிதிச் செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட மொத்தக் காசு (ஐ)		

நிதிச் செயற்பாடுகளினால் பிறப்பிக்கப்பட்ட நிதிப் பாய்ச்சல் (ஒ) = (ஏ)-(ஐ)	(223,668.11)	9,462,540.57
தேறிய காசு மாற்றம் (ஓ) = (ஏ) –(ஒ)	5,337,090.40	4,036,001.65
ஜனவரி 1 ஆம் திகதி அன்று ஆரம்ப காசு மீதி	30,842,892.58	26,806,890.93
டிசம்பர் 31 ஆம் திகதி அன்று இறுதிக் காசு மீதி	36,179,982.98	30,842,892.58

நிதி அறிக்கை குறிப்புகள்
வருமான சேகரிப்பு செயலாற்றுகை

ரூபா.

வருமானக் குறியீடு	வருமானக் குறியீட்டின் விபரம்	வருமான மதிப்பீடு		சேகரிக்கப்பட்ட வருமானம்	
		நிதி மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	பெறுமதி (ரூபா)	இறுதி வருமான மதிப்பீடு சதவீதத்தில் (%)

ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்துவது தொடர்பான செயலாற்றுகை

ஒதுக்கீட்டு நிதி வகை	ஒதுக்கப்பட்ட நிதி		உண்மையான செலவு	பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடு நிறைவு செய்யப்பட்ட இறுதி ஒதுக்கீட்டுத் தொகையின் % வீதத்தில்
	ஒதுக்கப்பட்ட தொகை	இறுதி ஒதுக்கீடு		
மீண்டுவரும் செலவுகள்	146,300,000.00	123,500,000.00	120,398,089.16	97.49
மூலதன செலவுகள் (425-02-03-002-2201)	34,000,000.00	9,850,000.00	4,358,975.00	44.25
மூலதன செலவுகள் (425-02-03-20-2509)	89,970,000.00	76,356,500.00	74,452,200.00	97.5

நி.பி 208 இற்கு அமைவாக ஏனைய அமைச்சுகள் / திணைக்களங்களின் பிரதிநிதி என்ற அடிப்படையில் இந்தத் திணைக்களத்துக்கு/ மாவட்ட செயலகத்திற்கு / மாகாண சபைக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள்

தொ/ இல	ஒதுக்கீடு கிடைத்த அமைச்சு / திணைக்களம்	ஒதுக்கீட்டின் நோக்கம்	ஒதுக்கீடு		மெய்ச் செலவுகள்	பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடு கிடைத்த இறுதி ஒதுக்கீட்டின் சதவீதத்தில் (%)
			ஆரம்ப ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		

நிதி அல்லாத சொத்துக்கள் பற்றி அறிக்கையிடுவது தொடர்பான செயலாற்றுகை

சொத்துக் குறியீடு	குறியீட்டின் விபரம்	31.12.2021 ஆம் திகதிக்கான பொருள் இருப்பு ஆய்வு அறிக்கைக்கு அமைய மீதி	31.12.2021 ஆம் திகதிக்கான நிதி நிலைமை அறிக்கைக்கு அமைய மீதி	எதிர்காலத்தில் கணக்கிடப்பட வுள்ள	அறிக்கையிடல் சதவீத்தில் (%)
9151	கட்டிட கட்டமைப்புகள்	201,300,000.00	83,115,143.20		
9152	இயந்திரங்கள்	4,626,086.10	7,840,020.29		
9153	காணிகள்	-	-		
9154	தொட்டுணர முடியாத சொத்துகள்	-	-		
9155	உயிரியல் ரீதியான சொத்துக்கள்	-	-		
9160	தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலைகள்	-	-		
9180	குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்கள்	-	-		

அத்தியாயம் 06 – செயலாற்றுகை குறிகாட்டிகள்

நிறுவனத்தின் செயலாற்றுகை குறிகாட்டிகள் (செயல் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டது)

விஷேட குறிகாட்டிகள்	எதிர்பார்த்த பெறுபேறு உண்மையான பெறுபேற்றின் சதவீதத்தில் (%)		
	100% - 90%	75% - 89%	50% - 74%
அறுவடைக்கு பிந்தைய துறையில் தற்போது நிலவும் பிரச்சினைகளுக்கு தொழில்நுட்பத் தீர்வுகளைக் கண்டறிய ஆராய்ச்சிகளை நடாத்துதல்.		√	
உள்நாட்டு / வெளிநாட்டுப் சஞ்சிகைளில் 10 ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிடுதல்.	√		
மா, வாழைப்பழம், பப்பாளி மற்றும் கொய்யா பயிர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட விநியோகச் சங்கிலிகள் சிலவற்றில் முறையான அறுவடைக்குப் பிந்தைய நுட்பங்களைப் பயன்படுத்துதல் / பிரயோகித்தல்.	√		
காய்கறிகள் மற்றும் பழங்களின் அறுவடைக்கு பிந்தைய இழப்புகளைக் குறைக்க பாதுகாப்பான பொதி செய்தல் மற்றும் போக்குவரத்து முறைகளை அறிமுகம் செய்தல்.	√		
அறுவடைக்கு பிந்தைய தொழில்நுட்ப முறைகளைப் பரப்புவதற்கு 100 பயிற்சி நெறிகளை நடாத்துவதன் மூலம் 2000 பயனாளிகளுக்கு பயிற்சியளித்தல், அறுவடைக்கு பிந்தைய துறைக்கு புதிய தொழில்முனைவோரை உருவாக்குதல்.		√	
முறையான அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பங்களை களத்தில் பிரயோகிப்பதற்கு ஆலோசனை சேவைகள், பொறியியல் சேவைகள் மற்றும் ஆய்வுகூட சேவைகளை வழங்குதல்.	√		
நிறுவனத்தின் மனித வளத்தை அபிவிருத்தி செய்தல்.			√

அத்தியாயம் 05 - நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) பூர்த்தி செய்வது தொடர்பான செயலாற்றுகை

- இனங் காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

இலக்குகள்/ குறிக்கோள்கள்	இலக்குகள்	அடைவு குறிகாட்டி	வெற்றி இலக்கை நோக்கிய அடைவின் இதுவரையான முன்னேற்றம்		
			0% - 49%	50% - 74%	75%- 100%
நோக்க இலக்கம் 02 – அனைவருக்கு உணவு கிடைக்கும் தன்மையை எளிதாக்குதல் மற்றும் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்தல்	காய்கறி மற்றும் பழப் பயிர்களில் அறுவடைக்கு பிந்தைய இழப்புகளை 25% வரை குறைத்தல் மற்றும் இலகுவில் அழுகாத ஏனைய பயிர்களின் அறுவடைக்கு பிந்தைய இழப்புகளை 5% வரை குறைத்தல்.	தேர்ந்தெடுக்கப்பட்ட 15 பழ வகைகள் மற்றும் 10 காய்கறி வகைகள் மற்றும் நெல் மற்றும் ஏனைய தேர்ந்தெடுக்கப்பட்ட இலகுவில் பழுதடையாத 9 பயிர் வகைகளின் அறுவடைக்கு பிந்தைய இழப்புகளைக் குறைக்க உருவாக்கப்பட்ட புதிய தொழில்நுட்பங்களின் எண்ணிக்கை, களத்திற்கு அறிமுக செய்த தொழில்நுட்பங்களின் எண்ணிக்கை, அறுவடைக்கு பிந்தைய இழப்புகள் குறைவடைந்துள்ள அளவு.	√		
நோக்க இலக்கம் 12 - நிலைபேறான நுகர்வு மற்றும் உற்பத்தி போக்கை உறுதி செய்தல்.	காய்கறி மற்றும் பழப் பயிர்களின் வழங்கல் மற்றும் பெறுமதி சேர் சங்கிலிகளின் செயல்முறைகளின் முகாமைத்துவ செயற்பாடுகளை மேம்படுத்துதல்.		√		

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளைப் பூர்த்தி செய்வதில் உள்ள அடைவுகள் மற்றும் சவால்களை சுருக்கமாக விவரிக்கவும்.

2021 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட, தெரிவு செய்யப்பட்ட விவசாயப் பயிர்களின் வழங்கல் மற்றும் பெறுமதிச் சங்கிலிகளின் முகாமைத்துவ செயல்முறைகளை விருத்தி செய்வதுடன் தொடர்பான ஆராய்ச்சிகள், அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் தொழில்நுட்ப பிரச்சார நடவடிக்கைகள் மூலம் விவசாயத்துடன் தொடர்பான 102 புதிய தொழில்முனைவோரை உருவாக்குவதற்கும், காய்கறி மற்றும் பழ வகைகளின் போக்குவரத்துக்கு பாதுகாப்பான பொதியிடலை அறிமுகம் செய்தல், தானியக் களஞ்சிய வசதிகளை மேம்படுத்துதல், பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை மேற்கொள்ள பங்குதாரர்களுக்கு வழிகாட்டுதல் போன்ற நடவடிக்கைகளால் விவசாய பயிர்களுக்கு ஏற்படும் அறுவடைக்குப் பிந்தைய இழப்புகள் கணிசமான அளவு குறைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு குறைந்த அறுவடைக்குப் பிந்தைய இழப்புகள் பற்றிய கணிப்பீடு 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ளது. இவற்றின் மூலம், தேசிய அறுவடைக்கு பிந்தைய முகாமைத்துவ நிறுவனத்திற்கு உணவு பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கும், நிலைபேறான நுகர்வு மற்றும் உற்பத்தி முறைகளை உறுதி செய்வதற்கும் பங்களிப்பு செலுத்தக் கூடியதாக இருந்தது.

மனித வள விபரம்

பதவியணி முகாமைத்துவம்

பதவிகள்	அங்கீகரிக்கப் பட்ட ஊழியர்கள் எண்ணிக்கை	தற்போதுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை	வெற்றிடங்கள்/ மேலதிகமானவை **
பணிப்பாளர்	1		1
மேலதிக பணிப்பாளர் (ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப விளம்பரம்)	1	1	
மேலதிக பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் நிதி)	1	1	
தலைமை இயந்திர பொறியாளர்	1	1	
தலைமை ஆராய்ச்சி அதிகாரி	2	2	
தலைமை விரிவாக்க அதிகாரி	1		1
சிரேஷ்ட இயந்திரவியல் பொறியாளர்	2	2	
சிரேஷ்ட ஆராய்ச்சி அதிகாரி	3	1	2
சிரேஷ்ட விரிவாக்க அதிகாரி	1		1
இயந்திர பொறியியல்	6	3	3
ஆராய்ச்சி அதிகாரி	14	11	3
விரிவாக்க அலுவலர்	5	5	
பொருளாதார நிபுணர்	1	1	
உள்ளக கணக்காய்வாளர்	1	1	
கணக்காளர்	1	1	
தொழில்நுட்ப அதிகாரி (ஆய்வுகூடம்)	1	1	
நிர்வாக அதிகாரி	2	2	
நூலகர்	1	1	
விரிவாக்க உதவியாளர்	10	10	
வடிவமைப்பாளர்கள்	1	1	
தொழில்நுட்ப உதவியாளர்	3	2	1
தொழில்நுட்ப உதவியாளர் (சிவில்)	1	1	
முகாமைத்துவ உதவியாளர் (காசாளர்)	1	1	
முகாமைத்துவ உதவியாளர்	27	26	1
ஆய்வுகூட உதவியாளர்	4	2	2
இயந்திர இயக்குபவர்	2	1	1
ஓட்டுனர்	13	12	1
மின்வினைஞர்	1		1
பற்ற வைப்பவர்	1	1	
தொழில்நுட்பவியலாளர்	2	2	
ஆலை இயக்குபவர்	3	3	
கொதிகலன் இயக்குபவர்	2		2
சமையல்காரர்	1	1	
அலுவலக உதவியாளர்	18	20	
கொதிகலன் உதவியாளர்	1	1	
துப்புரவு பணியாளர்கள்	3	3	
உணவக ஊழியர்கள்	2	2	
பாதுகாப்புக் கண்காணிப்பாளர்	6	6	
பராமரிப்பு உதவியாளர்	8	8	
	155	137	20

** நிறுவனத்தின் செயல்திறனின் மீது பற்றாக்குறையான அல்லது மேலதிகமான மனித வளங்கள் தாக்கம் செலுத்தியுள்ள விதம்

ஆய்வு மற்றும் ஆராய்ச்சிப் பிரிவுகளின் பதவியணியில் காணப்படும் பற்றாக்குறை காரணமாக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும் போது சில சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

மனித வள அபிவிருத்தி

2021 ஆம் ஆண்டில் பங்கேற்ற பெரும்பாலான நிகழ்ச்சிகள் நிகழ்நிலை தொழில்நுட்பம் மூலம் நடாத்தப்பட்டன. அதன் காரணமாக நிறுவனத்துக்கு மேலதிக செலவுகள் மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்படவில்லை.

நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்	பயிற்சி வழங்கப் பட்ட ஊழியர் எண்ணிக்கை	நிகழ்ச்சித் திட்டத்தின் கால எல்லை	மொத்த முதலீடு (ரூபா.)		நிகழ்ச்சித் திட்டத்தின் தன்மை (உள்நாட்டு / வெளிநாட்டு	அடைவு/ பெறுபேறு/ பெற்றுக் கொண்ட அறிவு
			உள்நாட்டு	வெளி நாட்டு	வெளிநாட்டு	
ஆய்வுகூட தர முகாமைத்துவ முறைமைகளின் உள்ளக கணக்காய்வு	02	02 நாட்கள்	-	-		ஆய்வுகூட உள்ளக கணக்காய்வு நடைமுறைகள் தொடர்பான அறிவைப் பெற்றுக் கொள்ளல்.
ஆய்வுகூட தரக் கட்டுப்பாட்டுடன் தொடர்புடைய தரநிலைகளை அடையாளம் காணல்	03	03 மணித்தியாலம்				ஆய்வுகூட தரக் கட்டுப்பாட்டு நடைமுறைகள் தொடர்பான அறிவைப் பெற்றுக் கொள்ளல்.
நுண்ணுயிரியல் ஆய்வுகூடங்களின் தரக் கட்டுப்பாடு	03	02 மணித்தியாலம்				ஆய்வுகூட தரக் கட்டுப்பாட்டு நடைமுறைகள் தொடர்பான அறிவைப் பெற்றுக் கொள்ளல்.
ஆய்வுகூட அளவீடுகளின் நிச்சயமற்ற தன்மையை மதிப்பீடு செய்தல்	03	2 நாட்கள்				ஆய்வுகூட தரக் கட்டுப்பாட்டு நடைமுறைகள் தொடர்பான அறிவைப் பெற்றுக் கொள்ளல்.
நுண்ணுயிரியல் ஆய்வுகூட அளவீடுகளின் நிச்சயமற்ற தன்மையை மதிப்பீடு செய்தல்	03	2 நாட்கள்				ஆய்வுகூட தரக் கட்டுப்பாட்டு நடைமுறைகள் தொடர்பான அறிவைப் பெற்றுக் கொள்ளல்.
மாதிரிப் பரிசோதனை ஆய்வுகூடங்களுக்கான அளவுத்திருத்த சான்றுப்படுத்தல்	03	3 மணித்தியாலம்				ஆய்வுகூட தரக் கட்டுப்பாட்டு நடைமுறைகள் தொடர்பான அறிவைப் பெற்றுக் கொள்ளல்.
நுண்ணுயிரியல் ஆய்வுகூடம் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி	03	2 மணித்தியாலம்				ஆய்வுகூட தரக் கட்டுப்பாட்டு நடைமுறைகள் தொடர்பான அறிவைப் பெற்றுக் கொள்ளல்.
மாதிரிப் பரிசோதனை ஆய்வுகூடங்களில் கட்டுப்பாட்டு மாதிரிகளை அடையாளம் காணல்	03	1 நாள்				ஆய்வுகூட தரக் கட்டுப்பாட்டு நடைமுறைகள் தொடர்பான அறிவைப் பெற்றுக் கொள்ளல்.

நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்	பயிற்சி வழங்கப் பட்ட ஊழியர் எண்ணிக் கை	நிகழ்ச்சித் திட்டத்தி ன் கால எல்லை	மொத்த முதலீடு (ரூபா.)		நிகழ்ச்சித் திட்டத்தின் தன்மை (உள்நாட்டு / வெளிநாட்டு	அடைவு/ பெறுபேறு/ பெற்றுக் கொண்ட அறிவு
			உள்நாட்டு	வெளி நாட்டு	வெளிநாட்டு	
ஆய்வுகூடக் கழிவு முகாமைத்துவம்	2	1 நாள்				ஆய்வுகூடக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான அறிவைப் பெற்றுக் கொள்ளல்.
குறை பாவனை உணவுப் பயிர்களுக்கு பெறுமதி சேர்த்தல்	03	03 மணித்தி யாலம்				குறை பாவனை உணவுப் பயிர்களுக்கு பெறுமதி சேர்த்தல் தொடர்பான அறிவைப் பெற்றுக் கொள்ளல்.
உணவுப் பொதியிடல்	16	02 நாட்கள்				உணவுப் பொதியிடல் தொடர்பான அறிவைப் பெற்றுக் கொள்ளல்.
காய்கறிகள் மற்றும் பழங்களுக்கு பெறுமதி சேர்த்தல் மற்றும் அறுவடைக்குப் பிந்தைய முகாமைத்துவத்தில் நவீன கண்டுபிடிப்புகள்	12	1 .5 மணித்தி யாலம்				காய்கறிகள் மற்றும் பழங்களுக்கு பெறுமதி சேர்த்தல் தொடர்பான அறிவைப் பெற்றுக் கொள்ளல்.
பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு எண்ணக்கருக்களுக்கமைய மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையாகவும் நியாயமானதுமான நிலைமைகளையும் புலப்படுத்தும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் மோசடி மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுகளிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் கால அடிப்படையிலான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகைளில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பில் உரிய முறையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்பட வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) ஆம் உப பிரிவின் பிரகாரம், அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின்

ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமாக பேணிச் செல்ல தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என்பது,

(ஆ) முன்னைய ஆண்டிற்கு உரியதாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் முன்வைக்கப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன என்பது.

1.6 நிதிகூற்றுக்கள் தொடர்பிலான கருத்துரைகள்

1.6.1 நிதி நிலைமைக் கூற்று

1.6.1.1 நிதியல்லாத சொத்துக்கள்

அமைச்சின் கீழ் 15 விசேட பொருளாதார நிலையங்கள் உள்ள போதிலும் வெயாங்கொடை பொருளாதார மத்திய நிலையத்தின் காணி மற்றும் கட்டிடங்கள் மாத்திரம் மதிப்பீடு செய்யப்பட்டு நிதியல்லாத சொத்துக்களுக்கு உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் எஞ்சிய பொருளாதார நிலையங்களுக்குரிய காணி மற்றும் கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதியல்லாத சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

1.6.1.2 கட்டுநிதிக் கணக்கின் மீதி

(அ) நிதிக்கூற்றுக்களின் ஏசீஏ-3 மாதிரியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அனுப்பப்பட்ட போதிலும் திறைசேரி புத்தகங்களில் காண்பிக்கப்படாத காசுமீதி ரூபா 5,795,693 ஆகும். அம்மீதி நிதி நிலைமைக் கூற்றில் நிதிச் சொத்துக்களின் கீழ் வழியிலுள்ள பணமாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சினால் அவ்வாறு காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சப்ரகமுவ மாகாண சபை மற்றும் மகாவலி அதிகாரசபைக்கு வழங்கப்பட்ட கட்டுநிதிகள் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் தீர்க்கப்படாத பணம் முறையே ரூபா 9,642,131 மற்றும் ரூபா 18,195,192 ஆகும். இப்பணம் தீர்க்கப்படாத கட்டுநிதியாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் கட்டுநிதி மீதியானது 2022 மார்ச் 31 மற்றும் மார்ச் 03 ஆந் திகதிகளிலேயே தீர்க்கப்பட்டிருந்தது.

(இ) 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அமைச்சு தீர்ப்பனவு செய்ய வேண்டிய ரூபா 687,041 ஆன தொகை அத்திகதியில் உள்ளபடியாக தீர்க்கப்படாத காரணத்தால் தீர்க்கப்படாத கட்டுநிதியாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அத்தொகையானது 2022 சனவரி 07 ஆந் திகதியே தீர்க்கப்பட்டிருந்தது.

1.6.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

அமைச்சினால் நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் நட்டங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

1.6.3 கணக்குகள் சமர்ப்பிக்கப்படாமை

நிதிக்கூற்றுக்களின் தொகுதியின் தமிழ்மொழிபெயர்ப்பு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கையொப்பமிடப்பட்டிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

2.1 செலவின முகாமைத்துவம்

(அ) அத்தியாவசியமாக செலவிட வேண்டிய செலவின விடயங்களை இனங்கண்டு நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளாத காரணத்தினால் 03 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 02 மூலதன செலவின விடயங்களின் ரூபா 495,260,000 ஆன நிதியேற்பாடு முழுமையாக எஞ்சியிருந்தது.

(ஆ) மதிப்பீடுகளை தயாரிக்கும் போது சரியான எதிர்வுகூறல்கள் மேற்கொள்ளாத காரணத்தினால் 10 மூலதன செலவின விடயங்கள் மற்றும் 19 மீண்டெழும் செலவின விடயங்களின் தேறிய நிதியேற்பாட்டின் 12 சதவீதம் முதல் 96 சதவீதம் வரையான வீச்சில் நிதியேற்பாடு எஞ்சியிருந்தது. மேற்படி மூலதனம் மற்றும் மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேறிய நிதியேற்பாடு ரூபா 5,582,900,000 ஆக காணப்பட்டது. அவற்றுள் ரூபா 2,749,284,009 அல்லது 49 சதவீதம் எஞ்சியிருந்தது.

2.2 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் ஏற்படுத்தப்படல்

மீளாய்வாண்டின் அமைச்சின் மூலதன சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தலின் கீழ் வாகனங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 2,850,000 ஆன தேறிய நிதியேற்பாடுகளில் ஆண்டினுள் ரூபா 2,846,235 பயன்படுத்தப்பட்ட பின்னர் சேமிப்பு ரூபா 3,865 ஆகும். எனினும் சேமிப்பை விஞ்சி ரூபா 891,061 ஆன கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்பட்டுள்ளது.

	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு	இணக்கமின்மைகள்
(அ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 104(1)(அ)	நட்டமொன்று அல்லது இழப்பொன்று ஏற்பட்டவுடன் அதன் அளவு, அதற்குரிய காரணங்கள் திட்டவட்டமாக அறிந்து கொள்ளுதல் மற்றும் அதற்கு பொறுப்புக் கூற வேண்டியவர்களை நிச்சயிப்பதற்கான விசாரணையொன்றினை ஆரம்பிக்க வேண்டிய போதிலும் 2021 மார்ச் 01 ஆந் திகதி விபத்துக்குள்ளாகியிருந்த அமைச்சினால் பயன்படுத்தப்பட்ட KW-8202 இலக்கமுடைய ஜீப் வண்டி தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.
(ஆ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 1646	வாகனங்களில் பயணம் செய்தல் தொடர்பில் மாதாந்த பொழிப்புக்களின் மூலப்பிரதிகள் மற்றும் ஓட்டக்குறிப்புக்கள் அதற்கடுத்த மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் 2021 ஆம் ஆண்டிற்குரிய அமைச்சினால் பயன்படுத்தப்பட்ட 22 வாகனங்களுக்குரிய ஓட்டக்குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2.4 முற்பணங்களை வழங்குதல் மற்றும் தீர்ப்பனவு செய்தல்

நிதிப்பிரமாணம் 371(5) பிரகாரம் பணி நிறைவடைந்து 10 நாட்களினுள் பெற்றுக் கொள்ளப்பட்ட செயல்நிமித்த உபகட்டுநிதியை தீர்ப்பனவு செய்ய வேண்டிய போதிலும் அமைச்சின் ஏழு உத்தியோகத்தர்களினால் 16 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 256,858 தொகையான உபகட்டுநிதியை தீர்ப்பனவு செய்வதற்கு 03 முதல் 101 நாட்கள் வரையான காலம் எடுக்கப்பட்டிருந்தது.

2.5 வங்கி கணக்குகளை செயற்படுத்துதல்

2021 திசெம்பர் 31 ஆந் திகதியின் பின்னர் இத்தலைப்பு இரத்துச் செய்யப்பட்டுள்ள போதிலும் அமைச்சிற்காக திறக்கப்பட்ட வங்கிக் கணக்கு 2022 மே 30 ஆந் திகதி வரையிலும் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றல்

3.1.1 பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றாமை

2021 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தினுள் உள்ளடங்கப்பட்டிருந்த ரூபா 257 மில்லியான கிரயத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட 12 பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

3.2 முகாமைத்துவ நலிவுகள்

3.2.1 ஜீவ துறு உதான தேசிய நிகழ்ச்சித்திட்டம்

கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் 5 வயதிற்கு குறைவான குழந்தைகளின் போசாக்கு மட்டத்தினை அதிகரிக்கும் நோக்கத்தில் கமநல அபிவிருத்தி திணைக்களம் மற்றும் விவசாய இராஜாங்க அமைச்சினால் இணைந்து "ஜீவ துறு உதான" தேசிய நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்துவதற்காக 2021 மே மாதம் 04 ஆந் திகதிய அமப/21/0689/323/026 இலக்கமுடைய அமைச்சரவைத் தீர்மானம் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இதன் கீழ் குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களின் உதவியுடன் அனைத்து விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் பிரிவுகளும் தெரிவு செய்யப்பட்டு 100 நலன்பெறும் குடும்பங்கள் எனும் வகையில் முருங்கை கன்றுகள் பத்து இலட்சத்தினை பத்து இலட்சம் வீட்டுத் தோட்டங்களில் நடுவதற்காக 2021 ஆம் ஆண்டில் இராஜாங்க அமைச்சின் உணவு பாதுகாப்பு செலவின விடயத்தின் (425-2-3-004-2509) ரூபா 55.62 மில்லியன் ஆன நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தின் கீழ் ரூபா

41.96 மில்லியனான கிரயத்தையுடைய 999,211 முருங்கை கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அமைச்சரவைக்கு அனுப்பப்பட்ட 2021/ஏப்ரல் 06 ஆந் திகதிய Pa/36/2021 ஆம் இலக்க அமைச்சரவை குறிப்பின் முன்மொழிவு இலக்கம் 3:2 இன் கீழ் மேற்படி நிகழ்ச்சித் திட்டத்திற்கு தேவையான முருங்கை கன்றுகள் மாவட்டத்தில் அமைந்துள்ள விவசாய திணைக்களத்தின் நாற்று மேடைகள் 33 இலிருந்து பெற்றுக்கொள்வதற்கு முன்னுரிமை வழங்குவதற்கும் அவ்வாறு இல்லாத போது மாத்திரம் பதிவு செய்யப்பட்ட நாற்று மேடைகளை கொள்வனவு செய்வதற்கும் உத்தேசிக்கப்பட்டிருந்தது. எனினும் மேற்படி நிகழ்ச்சித்திட்டத்திற்காக விவசாயத் திணைக்களத்தின் நாற்றுமேடைகளிலிருந்து முருங்கை கன்றுகளை கொள்வனவு செய்வதற்காக விவசாய திணைக்களம் அல்லது மாவட்ட நாற்றுமேடைகளுடன் கலந்துரையாடியமைக்கு எதுவித பதிவேடுகளோ கோவைகளோ உள்ளடங்கியிருக்காததுடன் அமைச்சரவை தீர்மானத்தில் பரிந்துரைகளுக்கு முரணாக தனியார் நாற்றுமேடையாளர்களிடம் மாத்திரம் முருங்கை கன்றுகளை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் குறித்த நாற்றுமேடையாளர்களை தெரிவு செய்த அடிப்படை தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் முன்மொழிவு இலக்கம் 3.3 மற்றும் 3.4 இன் பிரகாரம் மாவட்டத்தினுள் கன்றுகளின் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்யும் போது மாவட்டத்தின் அனைத்து பதிவு செய்யப்பட்ட நாற்றுமேடைகளின் உரிமையாளர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கும் வகையில் மாவட்ட கமநல அபிவிருத்தி பிரதி/உதவி ஆணையாளரின் தலைமையுடனான குழுவொன்றின் ஊடாக அந்தந்த நாற்று மேடைகளிலிருந்து கொள்வனவு செய்யப்படும் கன்றுகளின் எண்ணிக்கையை தீர்மானிக்க வேண்டிய போதிலும் அவ்வாறு மாவட்ட குழுக்களை நியமிக்காதும் மாவட்ட நாற்றுமேடையாளர்களிடமிருந்து கொள்வனவு செய்யாது தெரிவுசெய்யப்பட்ட 15 நாற்றுமேடையாளர்களிடமிருந்து மாத்திரம் கன்றுகளை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(இ) கன்றுகளை விநியோகித்துள்ள 15 நாற்றுமேடையாளர்களிடையே 4 நாற்றுமேடையாளர்கள் விநியோகித்திருந்த 700,000 இற்கு மேற்பட்ட கன்றுகளின் அளவினை கருத்தில் கொள்ளும் போது இச்செயற்திட்டத்திற்கு கன்றுகளை வழங்குவதற்கு முன்ஆயத்தத்துடன் செயற்பட்டுள்ளமை மற்றும்

அந்த நாற்றுமேடையாளர்களிடமிருந்து கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்ட முறையில் செயற்பட்டிருந்தமை காணக்கூடியதாக இருந்தது.

(ஈ) மாவட்ட விவசாய திணைக்களத்தின் தகவல்களுக்கமைய களத்தில் நடும்வரையிலும் கன்றொன்றினை உருவாக்குவதற்கு எடுக்கும் காலம் 06 வாரங்கள் மற்றும் கன்றொன்றின் கிரயம் ரூபா 24 ஆகும். குறித்த விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் தொகுதிகள் வரை போக்குவரத்துச் செய்தல் உள்ளடங்கலாக மொத்தக் கிரயம் ரூபா 30 இனை விடவும் குறைவாகும். அதற்கமைய 06 வாரங்களுக்கு முன்னர் செயற்திட்டம் திட்டமிடப்பட்டு விவசாய அமைச்சின் நாற்றுமேடைகளின் மூலம் கன்றுகளை விநியோகிக்கும் பணிகளை மேற்கொள்ளாத காரணத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட கன்றுகளின் இருப்பினால் அரசிற்கு அண்ணளவாக ரூபா 11,990,532 ஆன ((42-30)x999,211) நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(உ) நிகழ்ச்சித் திட்டத்தின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அறிவூட்டுதல் மற்றும் பயிற்றுவித்தல் கிரயம் ரூபா 4 மில்லியனுக்கு மட்டுப்படுத்தப்பட வேண்டிய போதிலும் உள்ளபடியான செலவினம் ரூபா 5,840,469 ஆன காரணத்தால் மதிப்பீட்டுக் கிரயத்தினை விஞ்சி தெளிவுபடுத்தல் மற்றும் பயிற்சிகளுக்காக ரூபா 1,840,469 கூடுதலாக செலவிடப்பட்டிருந்தது.

(ஊ) நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தவதற்கு அறிவுரைகளை வழங்கி விவசாய இராஜாங்க அமைச்சின் செயலாளரினால் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டுள்ள 03/2021 இலக்கமுடைய சுற்றறிக்கையின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் குறித்த விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் பிரிவுகளுக்கு கொள்வனவு செய்யப்படும் கன்றுகளை கொண்டு செல்ல வேண்டும். அதற்கமைய கன்றுகளை பகிர்ந்தளித்தல் குறித்த பிரிவினுள் இடம்பெற்றுள்ள போதிலும் கமநல சேவையின் மத்திய நிலையங்களின் அண்மையில் கன்றுகளை பகிர்ந்தளித்தல் தொடர்பில் விளம்பர பதாகையொன்று காட்சிப்படுத்துவதற்காக ரூபா 1,500 படியாக ரூபா 350,999 ஆன செலவினம் விளைவற்ற விளம்பர செலவினமாக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(எ) மாவட்டங்களுக்கு வழங்க வேண்டிய கன்றுகளின் அளவானது கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 2021 ஏப்ரல் 07 ஆந் திகதிய "7/5/11-05-ஜீவத்துறு உதான" இலக்கமுடைய கடிதத்தின் மூலம் மாவட்ட பிரதி/உதவி ஆணையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் அதில்

குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளிற்கு புறம்பாக 04 சந்தர்ப்பங்களில் அதிகளவான கன்றுகள் மற்றும் 03 சந்தர்ப்பங்களில் குறைவான கன்றுகளும் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது.

கூடுதலாக கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள்

மாவட்டம்	பகிர்ந்தளிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள கன்றுகளின் எண்ணிக்கை	பகிர்ந்தளிக்கப் பட்ட கன்றுகளின் எண்ணிக்கை	கூடுதலாக பகிர்ந்தளிகப்பட்ட அளவு	கூடுதலாக பகிர்ந்தளிக்கப்பட்ட (%) சதவீதம்
கிளிநொச்சி	1,400	8,000	6,600	471
திருகோணமலை	10,000	22,000	12,000	120
மன்னார்	9,200	13,000	3,800	41
முல்லைத்தீவு	4,600	9,000	4,400	95

குறைவாக கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள்

மாவட்டம்	பகிர்ந்தளிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள கன்றுகளின் எண்ணிக்கை	பகிர்ந்தளிக்கப் பட்ட கன்றுகளின் எண்ணிக்கை	குறைவாகக பகிர்ந்தளிகப்பட்ட அளவு	குறைவாக பகிர்ந்தளிக்கப்பட்ட (%) சதவீதம்
கழுத்துறை	56,500	32,135	24,365	43
பொலன்னறுவை	22,500	14,528	7,972	35
இரத்தினபுரி	46,700	36,178	10,522	22

(ஏ) நாட்டின் அனைத்து விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் பிரிவுகளிலும் தெரிவு செய்யப்பட்ட 100 பயனாளர் குடும்பங்களுக்கு பத்து இலட்சம் வீட்டுத் தோட்டங்களுக்கான முருங்கை கன்றுகளை நடுவதற்கு விவசாய இராஜாங்க அமைச்சின் செயலாளரின் 2021 ஏப்ரல் 05 ஆந்

திகதிய 03/2021 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் அறிவுரை வழங்கப்பட்டுள்ள போதிலும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக ரூபா 2,353,050 பெறுமதியான 56,025 கன்றுகள் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஐ) கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் உள்ள 06 கமநல சேவைகள் நிலையங்களுக்கு ரூபா 237,300 பெறுமதியான 5,650 முருங்கை கன்றுகளை பகிர்ந்தளித்துள்ள போது செயற்திட்டத்திற்குரிய முருங்கை கன்றுகள் ரூபா 2,688,000 பெறுமதியான 64,000 கன்றுகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக மகாவலி அதிகார சபைக்கு வழங்கப்பட்டு மகாவலி அதிகாரசபையின் ஊடாக கமநல சேவை நிலையங்களினால் கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்ட பிரதேசங்களுக்கே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது.

(ஒ) கன்றுகளை பகிர்ந்தளிக்கும் சந்தர்ப்பத்தில் வழங்குவதற்காக முருங்கை கன்றின் விபரங்கள் உள்ளடங்கிய ரூபா 2,100,000 பெறுமதியான அச்சிடப்பட்ட கையேடுகள் பத்து இலட்சத்தில் ரூபா 48,300 பெறுமதியான 26,300 கையேடுகள் 2022 பெப்ரவரி 18 ஆந் திகதி வரையிலும் பகிர்ந்தளிக்கப்படாது கொழும்பு மற்றும் மொனராகலை கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

3.2.2 அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு மீதிகளை பொறுப்பேற்றல்

தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் இராஜாங்க அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்ட 2021 திசெம்பர் 28 ஆந் திகதிய BD/RE/118/426/04/2021 இலக்கமுடைய கடிதத்திற்கமைய அதுவரையிலும் நிலவிய 425 செலவினத் தலைப்பு இரத்துச் செய்யப்பட்டு 426 செலவினத் தலைப்புடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதுடன் அதற்கமைய அத்திகதியில் உள்ளபடியான அனைத்து கடன் மீதிகளும் தலைப்பு இலக்கம் 426 இற்கு மாற்றப்பட வேண்டியதாக காணப்பட்டது. எனினும், இரண்டு தலைப்புக்களுக்கிடையே சரியான கடன் மீதி பரிமாற்றங்களை மேற்கொள்ளாது 425 மற்றும் 426 செலவினத் தலைப்புக்களுக்காக தனித்தனியான இரண்டு முற்பணக் கணக்குகள் தயாரிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்தின் புத்தகங்களுக்கமைய ரூபா 105,720 ஆன கடன் மீதி 426 செலவினத் தலைப்பிற்கு மாற்றப்படாது இரத்துச் செய்யப்பட்ட 425 செலவினத் தலைப்பின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ள முற்பணக் கணக்கில் தொடர்ந்தும் முன்கொண்டு செல்லப்பட்டவாறு காணப்பட்டது.

(ஆ) மேற்படி முன்கொண்டு வரப்பட்ட கடன் மீதியினுள் சரியான செலவு வைத்தலாக ரூபா 4,470 ஆன மீதி உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் தவறான செலவு வைத்தலுக்கு காரணங்களை ஆராய்ந்து தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ஆர்.எம்.ரத்னாயக்க
பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதி,
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பதிலாக.

04) அத்தியாயம் - செயலாற்றுகை குறிகாட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகை குறிகாட்டிகள் (செயல் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டது)

அறுவடைக்குப் பிந்திய இழப்புகளைக் குறைத்தல் - செயலாற்றுகை குறிகாட்டிகள் (செயல் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டது)

விஷேட குறிகாட்டிகள்	எதிர்பார்த்த பெறுபேறு உண்மையான பெறுபேற்றின் சதவீதமாக (%)		
	100% - 90%	*75% - 89%*	*50% - 74%*
அறுவடைக்கு பிந்தைய துறையில் தற்போது நிலவும் பிரச்சினைகளுக்கு தொழில்நுட்பத் தீர்வுகளைக் கண்டறிய ஆராய்ச்சிகளை நடாத்துதல்.		√	
உள்நாட்டு / வெளிநாட்டுப் சஞ்சிகைளில் 10 ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிடுதல்.	√		
மா, வாழைப்பழம், பப்பாளி மற்றும் கொய்யா பயிர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட விநியோகச் சங்கிலிகள் சிலவற்றில் முறையான அறுவடைக்குப் பிந்தைய நுட்பங்களைப் பயன்படுத்துதல் / பிரயோகித்தல்.	√		
காய்கறிகள் மற்றும் பழங்களின் அறுவடைக்கு பிந்தைய இழப்புகளைக் குறைக்க பாதுகாப்பான பொதி செய்தல் மற்றும் போக்குவரத்து முறைகளை அறிமுகம் செய்தல்.	√		
அறுவடைக்கு பிந்தைய தொழில்நுட்ப முறைகளைப் பரப்புவதற்கு 100 பயிற்சி நெறிகளை நடாத்துவதன் மூலம் 2000 பயனாளிகளுக்கு பயிற்சியளித்தல், அறுவடைக்கு பிந்தைய துறைக்கு புதிய தொழில்முனைவோரை உருவாக்குதல்.		√	
முறையான அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பங்களை களத்தில் பிரயோகிப்பதற்கு ஆலோசனை சேவைகள், பொறியியல் சேவைகள் மற்றும் ஆய்வுகூட சேவைகளை வழங்குதல்.		√	
நிறுவனத்தின் மனித வள அபிவிருத்தி			√

அத்தியாயம் 05 - நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) பூர்த்தி செய்வது தொடர்பான செயலாற்றுகை

இனங் காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

இலக்குகள்/ குறிக்கோள்கள்	இலக்குகள்	அடைவு குறிகாட்டி	வெற்றி இலக்கை நோக்கிய அடைவின் இதுவரையான முன்னேற்றம்		
			0%-49%	50% - 74%	75%- 100%
நோக்க இலக்கம் 02 – அனைவருக்கு உணவு கிடைக்கும் தன்மையை உருவாக்குதல் மற்றும் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்தல்	காய்கறி மற்றும் பழப் பயிர்களில் அறுவடைக்கு பிந்தைய இழப்புகளை 25% வரை குறைத்தல் மற்றும் இலகுவில் அழுகாத ஏனைய பயிர்களின் அறுவடைக்கு பிந்தைய இழப்புகளை 5% வரை குறைத்தல்.	தேர்ந்தெடுக்கப்பட்ட 15 பழ வகைகள் மற்றும் 10 காய்கறி வகைகள் மற்றும் நெல் மற்றும் ஏனைய தேர்ந்தெடுக்கப்பட்ட இலகுவில் பழுதடையாத 9 பயிர் வகைகளின் அறுவடைக்கு பிந்தைய இழப்புகளைக் குறைக்க உருவாக்கப்பட்ட புதிய தொழில்நுட்பங்களின் எண்ணிக்கை, களத்திற்கு அறிமுக செய்த தொழில்நுட்பங்களின் எண்ணிக்கை, அறுவடைக்கு பிந்தைய இழப்புகள் குறைவடைந்துள்ள அளவு.	√		
நோக்க இலக்கம் 12 - நிலைபேறான நுகர்வு மற்றும் உற்பத்தி போக்கை உறுதி செய்தல்.	காய்கறி மற்றும் பழப் பயிர்களின் வழங்கல் மற்றும் பெறுமதி சேர் சங்கிலிகளின் செயல்முறைகளின் முகாமைத்துவ செயற்பாடுகளை மேம்படுத்துதல்.		√		

அத்தியாயம் 05 - நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளைப் (SDG) பூர்த்தி செய்தல் தொடர்பான செயலாற்றுகை

5.1 இனங் காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

இலக்குகள்/ குறிக்கோள்கள்	இலக்குகள்	அடைவு குறிகாட்டி	வெற்றி இலக்கை நோக்கிய அடைவின் இதுவரையான முன்னேற்றம்		
			0% - 49%	50% -74%	75% -100 %
இலக்கு 12/12.3	அறுவடைக்குப் பிந்திய இழப்புகளைக் குறைத்தல்		49%		
இலக்கு 2	உணவுப் பயிர்களின் உற்பத்திப் பயனுறுதித் தன்மையை அதிகரித்தல்.				90%

பதவியணி முகாமைத்துவம்

6.1 பதவியணி முகாமைத்துவம்

	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கள் எண்ணிக்கை	தற்போதுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை	வெற்றிடங்கள்
சிரேஷ்ட	23	10	13
மூன்றாம் நிலை	02	02	00
இரண்டாம் நிலை	434	412	22
ஆரம்ப நிலை	16	15	01

6.2 ** நிறுவனத்தின் செயல்திறனின் மீது பற்றாக்குறையான அல்லது மேலதிகமான மனித வளங்கள் தாக்கம் செலுத்தியுள்ள விதம்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் கிடைத்த அங்கீகாரத்துடன், இரண்டாம் நிலை மற்றும் முதன்மைப் பிரிவு அதிகாரிகளில் ஒரு பிரிவினரை ஏற்கனவே ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதன் காரணமாக, மனிதவள பற்றாக்குறையின் காரணமாக ஏற்படும் செயல்திறனில் ஏற்படும் தாக்கத்தை ஓரளவிற்கு கட்டுப்படுத்த முடிந்துள்ளதுடன், 2022 ஆம் ஆண்டில் எஞ்சிய பதவிகளுக்கும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் ஆட்சேர்ப்பு மேற்கொண்டு மனிதவள பற்றாக்குறையால் ஏற்பட்டுள்ள செயல்திறன் தடைகளை நீக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

6.3 மனித வள அபிவிருத்தி

(உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகள் உட்பட ஏனைய நிகழ்ச்சிகள் – கால எல்லை : 2021.01.01. முதல் 2021.12.31 வரை)

நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்	பயிற்சி வழங்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை	நிகழ்ச்சித் திட்டத்தின் கால எல்லை	மொத்த முதலீடு (ரூபா.'000)		நிகழ்ச்சித் திட்டத்தின் தன்மை (உள்நாட்டு / வெளிநாட்டு	அடைவு/ பெறுபேறு/ பெற்றுக் கொண்ட அறிவு
			உள்நாட்டு	வெளிநாட்டு		
உள்நாட்டு பயிற்சி		2021	Covid 19 தொற்று நோய்ப் பரவல் காரணமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகள் நடைபெறவில்லை.			
வெளிநாட்டு பயிற்சி						

*** நிறுவனத்தின் செயல்திறன் மீது பயிற்சி நிகழ்ச்சிகள் பங்களிப்பு செலுத்தும் விதம்**

ஊழியர்களிடையே காணப்படும் அறிவு / திறன்கள் மற்றும் மனப்பான்மைகளை விருத்தி செய்வதற்கும் அவற்றை மேம்படுத்துவதற்கும், பயிற்சி நிகழ்ச்சிகள் பங்களிப்பு செலுத்துகின்றன. அத்துடன், சேவைகளைப் பெறுக்கொள்ளும் போது, ஊழியர்கள் வினைத்திறனாகவும் நிறைந்த அறிவைக் கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர். பயிற்சிகள் மூலம் நிறுவனம் திருப்திகரமான ஊழியர்களைக் கொண்டுள்ளதாக மாறுவதுடன் பயிற்சிகளால் போஷிக்கப்பட்ட ஊழியர்களைக் கொண்டுள்ளதனால் நிறுவனம், உயர்ந்த உற்பத்தித்திறனைக் கொண்டிருப்பதுடன் உயர் பெறுபேறுகளையும் வழங்கக்கூடியதாகவும் இருக்கும்.

07) அத்தியாயம் - இணக்கப்பாட்டு அறிக்கை

இல	கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்	இணக்கப்பாட்டு நிலை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கப்பாடு இல்லை எனில் அது பற்றிய சிறிய குறிப்பு	இணக்கப்படா நிலைமையைத் தவிர்க்க எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்கள்/ வழிமுறைகள்
1	**கீழே குறிப்பிட்ட நிதி அறிக்கை/ கணக்குகள் குறித்த தினத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்.**	-		
1.1	வருடாந்த நிதி அறிக்கை	இணங்குகிறது		
1.2	அரச அதிகாரிகளின் முற்பணக் கணக்கு	இணங்குகிறது		
1.3	வியாபார மற்றும் உற்பத்தி விற்பனை முற்பணக் கணக்கு (வணிக முற்பணக் கணக்கு)	இணங்குகிறது		
1.4	களஞ்சிய முற்பணக் கணக்கு	இணங்குகிறது		
1.5	விசேட முற்பணக் கணக்கு	இணங்குகிறது		
1.6	ஏனையவை	இணங்குகிறது		

2. பதிவுப் புத்தகங்கள் மற்றும் ஆவணங்களை பேணல் (நி. பி. 445)

இல	கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்	இணக்கப்பாட்டு நிலை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கப்பாடு இல்லை எனில் அது பற்றிய சிறிய குறிப்பு	இணக்கப்படா நிலைமையைத் தவிர்க்க எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்கள்/ வழிமுறைகள்
2	**பதிவுப் புத்தகங்கள் மற்றும் ஆவணங்களை பேணல்** **(நி. பி. 445)**	இணங்குகிறது		
2.1	பொது நிர்வாக சுற்று நிருபம் 267/2018 இன் படி, நிலையான சொத்துப் பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணிச் செல்லல்	*Cigas* பிரயோகத்தின் கீழ் நிலையான சொத்துகள் தொடர்பான பதிவேடு இற்றைப்படுத்தப்படுகிறது.		

2.2	ஆள் சார் வேதன ஆவணங்கள் / தனிப்பட்ட ஊதிய அட்டைகளை இற்றைப்படுத்திப் பேணிச் செல்லல்	இணங்குகிறது		
2.3	கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணிச் செல்லல்	இணங்குகிறது		
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் இற்றைப்படுத்திப் பேணிச் செல்லல்.	இணங்குகிறது		
2.5	அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் (CIGAS) தயார் பொது திறைசேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல்	இணங்குகிறது		
2.6	காசோலை மற்றும் காசுக் கட்டளை பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணிச் செல்லல்	இணங்குகிறது		
2.7	பொருட்கள் பதிவேட்டினை இற்றைப்படுத்திப் பேணிச் செல்லல்.	இணங்குகிறது		
2.8	இருப்புப் பதிவேட்டினை இற்றைப்படுத்திப் பேணிச் செல்லல்.	இணங்குகிறது		
2.9	இழப்புப் பதிவேட்டினை இற்றைப்படுத்திப் பேணிச் செல்லல்	இணங்குகிறது		
2.10	பொறுப்பு பதிவேட்டினை இற்றைப்படுத்திப் பேணிச் செல்லல்	இணங்குகிறது		
2.11	அடிக்கட்டை புத்தகங்களின் பதிவேட்டை (GAN 20) இற்றைப்படுத்திப் பேணிச் செல்லல்	இணங்குகிறது		

3. நிதி கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி. பி 135)

இல	கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்	இணக்கப்பாட்டு நிலை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கப்பாடு இல்லை எனில் அது பற்றிய சிறிய குறிப்பு	இணக்கப்படா நிலைமையைத் தவிர்க்க எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்கள்/ வழிமுறைகள்
3	**நிதி கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் *(நி .பி 135)***	இணங்குகிறது		
3.1	நிறுவனத்தில் நிதி அதிகாரங்கள் பகிரப்பட்டு இருத்தல்	இணங்குகிறது		
3.2	நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்தில் அறிவூட்டப்பட்டுள்ளமை.	இணங்குகிறது		
3.3	ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம் பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை.	இணங்குகிறது		
3.4	*2014.05.11* திகதிய அரச கணக்கு சுற்று நிருபம் இல *171/2004* இன் படி, அரசு புதிய மென்பொருள் தொகுப்பின் செயல்பாடுகள் கணக்காரர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு செயல்படுகின்றமை.	இணங்குகிறது		

4. வருடாந்த திட்டங்களைத் தயாரித்தல்

இல	கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்	இணக்கப்பாட்டு நிலை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கப்பாடு இல்லை எனில் அது பற்றிய சிறிய குறிப்பு	இணக்கப்படா நிலைமையைத் தவிர்க்க எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்கள்/ வழிமுறைகள்
4	**வருடாந்த திட்டங்களைத் தயாரித்தல்**	இணங்குகிறது		
4.1	வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தை தயாரித்தல்	இணங்குகிறது		
4.2	வருடாந்த பெறுகைத் திட்டத்தைத் தயாரித்தல்	இணங்குகிறது		
4.3	வருடாந்த உள்ளக கணக்காய்வு திட்டத்தை தயாரித்தல்	இணங்குகிறது		
4.4	வருடாந்த மதிப்பீட்டை தயாரித்தல் மற்றும்	இணங்குகிறது		

இல	கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்	இணக்கப்பாட்டு நிலை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கப்பாடு இல்லை எனில் அது பற்றிய சிறிய குறிப்பு	இணக்கப்படா நிலைமையைத் தவிர்க்க எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்கள்/ வழிமுறைகள்
	அதனை தேசிய வரவு செலவுத் திணைக்களத்திற்கு (NBD) உரிய திகதியில் சமர்ப்பித்தல்			
4.5	வருடாந்த காசுப் பாய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்படல்	இணங்குகிறது		

5. கணக்காய்வு வினாக்கள்

இல	கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்	இணக்கப்பாட்டு நிலை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கப்பாடு இல்லை எனில் அது பற்றிய சிறிய குறிப்பு	இணக்கப்படா நிலைமையைத் தவிர்க்க எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்கள்/ வழிமுறைகள்
5	கணக்காய்வு வினாக்கள்			
5.1	கணக்காய்வாளர் நாயகத்தினால் குறிப்பிடப்பட்ட திகதிக்கு அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் பதில் அளிக்கப்படல்.	இணங்குகிறது		

6. உள்ளக கணக்காய்வு

இல	கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்	இணக்கப்பாட்டு நிலை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கப்பாடு இல்லை எனில் அது பற்றிய சிறிய குறிப்பு	இணக்கப்படா நிலைமையைத் தவிர்க்க எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்கள்/ வழிமுறைகள்
6	**உள்ளக கணக்காய்வு**	இணங்குகிறது		
6.1	நி. பி (134) (2) DMA / 1-2019 இன் படி, ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக கணக்காய்வு திட்டத்தை தயாரித்தல்	இணங்குகிறது		2020.10.06 ஆம் திகதிக்குரிய 2196/27 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி

6.2	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல்.	இணங்குகிறது		அறிவித்தலின் மூலம் உருவாக்கப்பட்ட புதிய அமைச்சாகும்.
6.3	2018 ஆம் ஆண்டின் இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் துணைப் பிரிவு 40(4) இற்கு அமைவாக, அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்துக்கு சமர்ப்பித்தல்.	இணங்குகிறது		
6.4	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 134(3) ஆம் நிதிப் பிரமாணக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்.	இணங்குகிறது		

7. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

இல	கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்	இணக்கப்பாட்டு நிலை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கப்பாடு இல்லை எனில் அது பற்றிய சிறிய குறிப்பு	இணக்கப்படா நிலைமையைத் தவிர்க்க எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்கள்/ வழிமுறைகள்
7	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**	இணங்குகிறது		
7.1	DMA/1-2019 சுற்று நிருபத்தின் படி, ஆண்டுக்கு ஆகக் குறைந்தது நான்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்படல்.	இணங்குகிறது		2020.10.06 ஆம் திகதிக்குரிய 2196/27 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் உருவாக்கப்பட்ட புதிய அமைச்சாகும்.

8. சொத்து முகாமைத்துவம்

இல	கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்	இணக்கப்பாட்டு நிலை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கப்பாடு இல்லை எனில் அது பற்றிய சிறிய குறிப்பு	இணக்கப்படா நிலைமையைத் தவிர்க்க எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்கள்/ வழிமுறைகள்
8	**சொத்து முகாமைத்துவம்**	இணங்குகிறது		
8.1	01/2017 ஆம் இலக்க ஆதன முகாமைத்துவ சுற்று நிருபத்தின் 07 ஆம் பத்தியின் பிரகாரம், சொத்துப் பெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கட்டுப்பாட்டாளர் நாயக அலுவலகத்திற்கு சமர்ப்பித்தல்.			

8.2	மேற்குறிப்பிட்ட சுற்று நிருபத்தின் *13* ஆம் அத்தியாயத்தின் படி, அச்சுற்று நிருபத்தின் விதிகளை அமுல்படுத்துவதை ஒருங்கிணைக்கக் கூடிய பொருத்தமான இணைப்பு அதிகாரியை நியமித்து, அவ் அதிகாரியின் விபரங்களை கட்டுப்பாட்டாளர் நாயக அலுவலகத்திற்கு அனுப்பியிருத்தல்.			

இல	**கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்**	**இணக்கப்பாட்டு நிலை (இணக்கமானது / இணக்கமற்றது)**	**இணக்கப்பாடு இல்லை எனில் அது பற்றிய சிறிய குறிப்பு**	**இணக்கப்படா நிலைமையைத் தவிர்க்க எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்கள்/ வழிமுறைகள்**
8.3	அரச சுற்று நிருபம் இலக்கம் *05/2016* இன் பிரகாரம், பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை	இணங்குகிறது		*2020.10.06* ஆம் திகதிக்குரிய *2196/27* ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் உருவாக்கப்பட்ட புதிய அமைச்சாகும்.
8.4	வருடாந்தப் பொருட் கணக்கெடுப்பின் போது இனங் காணப்படும், உபரிகள், குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் ஆகியவற்றை சுற்று நிருபத்தில் குறிப்பிட்டுள்ள காலத்தினுள் நிறைவேற்றியுள்ளமை.	இணங்குகிறது		
8.5	பாவனைக்கு உதவாத பொருட்களை பயன்பாட்டில் இருந்து அகற்றும் செயல்முறை நி. பி *772* இன் பிரகாரம் இடம்பெற்றுள்ளமை.	இணங்குகிறது		

9. வாகன முகாமைத்துவம்

இல	கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்	இணக்கப்பாட்டு நிலை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கப்பாடு இல்லை எனில் அது பற்றிய சிறிய குறிப்பு	இணக்கப்படா நிலைமையைத் தவிர்க்க எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்கள்/ வழிமுறைகள்
9	**வாகன முகாமைத்துவம்**			
9.1	குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கை என்பவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்.	இணங்குகிறது		
9.2	கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு ஆறு மாதங்களுக்குள் அகற்றப்படுதல் வேண்டும்.	இணங்குகிறது		
9.3	வாகனப் பதிவுப் புத்தகங்கள் பராமரிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல் வேண்டும்.	இணங்குகிறது		
9.4	ஒவ்வொரு வாகன விபத்தும் நி.பி *103,104,109* மற்றும் *110* இன் ஆகியவற்றின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.	இணங்குகிறது		
9.5	*2016.12.29.* திகதிய பொது நிர்வாக சுற்று நிருபம் இல *016/30* இன் *3.1* ஆம் பத்தியின் விதிகளுக்கு அமைவாக வாகனங்களின் எரிபொருள் பாவனையை மீண்டும் பரிசீலித்தல்.	இணங்குகிறது		
9.6	குத்தகை வாகனங்களில் உரித்து பதிவுப் புத்தகம் குத்தகை காலத்தின் பின்னர் மாற்றப்படல்.	இணங்கவில்லை		குத்தகை அடிப்படையில் வாகனங்கள் கொள்வனவு செய்யப்படவில்லை.

10. வங்கிக் கணக்குகளின் முகாமை

இல	கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்	இணக்கப்பாட்டு நிலை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கப்பாடு இல்லை எனில் அது பற்றிய சிறிய குறிப்பு	இணக்கப்படா நிலைமையைத் தவிர்க்க எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்கள்/ வழிமுறைகள்
10	வங்கிக் கணக்குகளின் முகாமை			
10.1	உரிய திகதிகளில் வங்கிக் கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சான்றளித்தல் மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல்.	இணங்குகிறது		
10.2	மீளாய்வு வருடத்தில் அல்லது அதற்கு முன்னிருந்து முன்கொண்டு செல்லப்படுகின்ற செயற்படாத வங்கி கணக்குகளை தீர்த்தல்.	இணங்குகிறது		*2020.10.06* ஆம் திகதிக்குரிய *2196/27* ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் உருவாக்கப்பட்ட புதிய அமைச்சாகும்.
10.3	வங்கி கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட மற்றும் சரி செய்யப்பட வேண்டியிருந்த மீதிகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்திற்கு அமைவாக நடவடிக்கை மேற்கொண்டு அம்மீதிகளை ஒரு மாத காலத்திற்குள் தீர்த்தல்.	இணங்குகிறது		

11. நிதி ஏற்பாட்டினை பயன்படுத்தல்

இல	கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்	இணக்கப்பாட்டு நிலை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கப்பாடு இல்லை எனில் அது பற்றிய சிறிய குறிப்பு	இணக்கப்படா நிலைமையைத் தவிர்க்க எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்கள்/ வழிமுறைகள்
11	**நிதி ஏற்பாட்டினை பயன்படுத்தல்**			
11.1	ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளை அவற்றின் வரையறைகளை மீறாத வகையில் செலவு செய்தல்.	இணங்குகிறது		
11.2	நி .பி *94(1)* பிரகாரம் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து பயன்படுத்திய பின்னர் வருட இறுதியில் மீதமான ஒதுக்கீட்டை வரையறைகளை மீறாத வகையில் பொறுப்புகளில் காட்டுதல்.	இணங்குகிறது		*2020.10.06* ஆம் திகதிக்குரிய *2196/27* ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் உருவாக்கப்பட்ட புதிய அமைச்சாகும்.

12. அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு

இல	கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்	இணக்கப்பாட்டு நிலை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கப்பாடு இல்லை எனில் அது பற்றிய சிறிய குறிப்பு	இணக்கப்படா நிலைமையைத் தவிர்க்க எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்கள்/ வழிமுறைகள்
12	அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு	-		
12.1	வரையறைகளுக்குள் இணங்குதல்	இணங்குகிறது		
12.2	பற்றுக் கடன் நிலுவை குறித்த முறையான காலப் பகுப்பாய்வை மேற்கொண்டிருத்தல்.	නැත		
12.3	ஒரு வருடத்திற்கும் மேலான காலத்திலிருந்து தொடரும் நிலுவையில் உள்ள கடன் மீதிகளை தீர்த்து இருத்தல்	නැත		2020.10.06 ஆம் திகதிக்குரிய 2196/27 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் உருவாக்கப்பட்ட புதிய அமைச்சாகும்.

13. பொது வைப்பு கணக்கு

இல	கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்	இணக்கப்பாட்டு நிலை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கப்பாடு இல்லை எனில் அது பற்றிய சிறிய குறிப்பு	இணக்கப்படா நிலைமையைத் தவிர்க்க எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்கள்/ வழிமுறைகள்
13	பொது வைப்பு கணக்கு			
13.1	காலாவதியான வைப்புகளை அகற்றுவதற்கு நி.பி 571 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்.	නැත		2020.10.06 ஆம் திகதிக்குரிய 2196/27 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் உருவாக்கப்பட்ட புதிய அமைச்சாகும்.
13.2	பொது வைப்புகளுக்கான நிர்வாகக் கணக்கை இற்றைப்படுத்திப் பேணிச் செல்லல்	இணங்குகிறது		

14. கட்டுநிதி கணக்கு

இல	கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்	இணக்கப்பாட்டு நிலை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கப்பாடு இல்லை எனில் அது பற்றிய சிறிய குறிப்பு	இணக்கப்படா நிலைமையைத் தவிர்க்க எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்கள்/ வழிமுறைகள்
14	**கட்டுநிதி கணக்கு**	இணங்குகிறது		
14.1	மீளாய்வு வருடத்தின் இறுதியில் காசுப் புத்தக மீதியை திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருத்தல்.	இணங்குகிறது		
14.2	நி.பி 371 இற்கு அமைவாக, தற்காலிக இடைக் கட்டுநிதிகள் குறித்த பணி நிறைவடைந்து ஒரு மாத காலத்திற்குள் தீர்க்கப்பட்டிருத்தல்.	இணங்குகிறது		
14.3	நி.பி 371 இற்கு அமைவாக, அங்கீகரிக்கப்பட்ட பழைய வரையறையை மீறாத வகையில் தற்காலிக இடை கட்டு நிதி வழங்கப்பட்டிருத்தல்.	இணங்குகிறது		
14.4	கட்டு நிதி கணக்கின் மீதியை திறைசேரியின் புத்தகத்துடன் மாதாந்தம் கணக்கிணக்கம் செய்யப்படுகின்றமை.	இணங்குகிறது		

15. வருமானக் கணக்கு

இல	கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்	இணக்கப்பாட்டு நிலை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கப்பாடு இல்லை எனில் அது பற்றிய சிறிய குறிப்பு	இணக்கப்படா நிலைமையைத் தவிர்க்க எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்கள்/ வழிமுறைகள்
15	**வருமானக் கணக்கு**			
15.1	உரிய விதிகளுக்கு அமைவாக சேகரிக்கப்பட்ட வருமானத்திலிருந்து மீளச் செலுத்தியிருத்தல்.	இணங்குகிறது		*2020.10.06* ஆம் திகதிக்குரிய *2196/27* ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் உருவாக்கப்பட்ட புதிய அமைச்சாகும்.
15.2	சேகரிக்கப்பட்ட வருமானத்தை வைப்புக் கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைத்திருத்தல்.	இணங்குகிறது		
15.3	நி.பி .176 இற்கு அமைவாக, குறை வருமான அறிக்கை கணக்காளர் நாயகத்திற்கு சமர்ப்பித்திருத்தல்.	இணங்குகிறது		

16. மனித வள முகாமைத்துவம்

இல	கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்	இணக்கப்பாட்டு நிலை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கப்பாடு இல்லை எனில் அது பற்றிய சிறிய குறிப்பு	இணக்கப்படா நிலைமையைத் தவிர்க்க எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்கள்/ வழிமுறைகள்
16	மனித வள முகாமைத்துவம்	இணங்குகிறது		
16.1	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கள் எல்லையினுள் ஊழியர் அணிகளைப் பேணுதல்	இணங்குகிறது		
16.2	பதவியணியின் அனைத்து அங்கத்தவர்களுக்கும் கடமைப் பட்டியல்களை எழுத்து மூலம் வழங்கியிருத்தல்.	இணங்குகிறது		
16.3	20.09.2017 ஆம் திகதிக்குறிய MSD 04/2017 ஆம் இலக்க சுற்று நிருபத்தின் பிரகாரம் அனைத்து அறிக்கைகளும் நிருவாக சேவைகள் திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்.	இணங்குகிறது		

17. பொதுமக்களுக்குத் தகவல்களை வழங்கல்

இல	கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்	இணக்கப்பாட்டு நிலை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கப்பாடு இல்லை எனில் அது பற்றிய சிறிய குறிப்பு	இணக்கப்படா நிலைமையைத் தவிர்க்க எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்கள்/ வழிமுறைகள்
17	பொதுமக்களுக்குத் தகவல்களை வழங்கல்			
17.1	தகவல் அறியும் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் ஒரு தகவல் அதிகாரியை நியமித்து தகவல் வழங்கும் ஒரு ஆவணத்தைப் இற்றைப்படுத்திப் பேணிச் செல்லல்	இணங்குகிறது	ஒரு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.	2020.10.06 ஆம் திகதிக்குரிய 2196/27 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் உருவாக்கப்பட்ட புதிய அமைச்சாகும். 2021 ஆம் ஆண்டிலிருந்து குறித்த ஆவணம் இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுகிறது.

இல	கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்	இணக்கப்பாட்டு நிலை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கப்பாடு இல்லை எனில் அது பற்றிய சிறிய குறிப்பு	இணக்கப்படா நிலைமையைத் தவிர்க்க எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்கள்/ வழிமுறைகள்
17.2	நிறுவனம் பற்றிய தகவல்கள் அதன் வலைத்தளத்தின் மூலம் வழங்கப்படுதல் மற்றும் வலைத்தளம் ஊடாக அல்லது மாற்று வழிகள் ஊடாக நிறுவனம் தொடர்பான பொது மக்கள் கருத்துகள் / குற்றச்சாட்டுகளைத் தெரிவிப்பதற்கு வசதிகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல்.	இணங்கவில்லை		2020.10.06 ஆம் திகதிக்குரிய 2196/27 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் உருவாக்கப்பட்ட புதிய அமைச்சாகும். (ஒரு புதிய இணையதளத்தை உருவாக்கும் பணி நடைபெற்று வருவதுடன் அதில் ஒரு பக்கம் இதற்காக ஒதுக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.)
17.3	தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 8 மற்றும் 10 பிரிவுகளின் படி ஆண்டுக்கு இரண்டு முறைகள் அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்திருத்தல்.	இணங்குகிறது		

18. குடிமக்கள் சாசனத்தை நடைமுறைப்படுத்துதல்

இல	கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்	இணக்கப்பாட்டு நிலை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கப்பாடு இல்லை எனில் அது பற்றிய சிறிய குறிப்பு	இணக்கப்படா நிலைமையைத் தவிர்க்க எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்கள்/ வழிமுறைகள்
18	குடிமக்கள் சாசனத்தை நடைமுறைப்படுத்துதல்.			
18.1	பொது நிர்வாகம் மற்றும் நிருவாக அமைச்சின் 05/2008 ஆம் மற்றும் 05/2018 (1) ஆம் இலக்க சுற்று நிருபங்களின்படி குடிமக்கள் / வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயல்படுத்தி இருத்தல்.	இணங்குகிறது		
18.2	அந்த சுற்று நிருபத்தின் 2.3 ஆம் பத்தியின் பிரகாரம், குடிமக்கள் / வாடிக்கையாளர் சாசனத்தினைத் தொகுத்தல் மற்றும் செயல்படுத்தலைக் கண்காணிப்பதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் நிறுவனத்தினால் ஒரு வழிமுறையை வகுத்திருத்தல்.	இணங்குகிறது		.

19. மனித வளத் திட்டத்தை தயாரித்தல்

இல	கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்	இணக்கப்பாட்டு நிலை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கப்பாடு இல்லை எனில் அது பற்றிய சிறிய குறிப்பு	இணக்கப்படா நிலைமையைத் தவிர்க்க எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்கள்/ வழிமுறைகள்
19	**மனித வளத் திட்டத்தை தயாரித்தல்**	இணங்குகிறது		தயாரிக்கப்பட்டு வருகின்றது.
19.1	24.01.2018 திகதிக்குரிய பொது நிர்வாக சுற்று நிருப எண் 02/2018 இன் இணைப்பு 02 இன் மாதிரியினை அடிப்படையாகக் கொண்டு மனித வளத் திட்டம் ஒன்றைத் தயாரித்திருத்தல்.	இணங்குகிறது		2021 ஆம் ஆண்டில் தயாரிக்கப்படவுள்ளது.
19.2	ஊழியர்களின் அனைத்து அங்கத்தவர்களுக்கும் ஒரு வருடத்திற்கு குறைந்தபட்சம் 12 மணித்தியாலங்களுக்குக் குறையாத பயிற்சி வாய்ப்புகளை வழங்குவதை மேற்படி மனித வளத் திட்டத்தில் உறுதிப்படுத்தியிருத்தல்.	இணங்குகிறது		2020.10.06 ஆம் திகதிக்குரிய 2196/27 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் உருவாக்கப்பட்ட புதிய அமைச்சாகும். 2022 ஆம் ஆண்டுக்கான ஒரு பயிற்சி நிகழ்ச்சி தயாரிக்கப்பட்டு வருகின்றது.
19.3	மேற் குறிப்பிட்ட சுற்று நிருபத்தின் இணைப்பு 01 இல் காட்டப்பட்டுள்ள மாதிரியை அடிப்படையாகக் கொண்டு, ஒட்டுமொத்த ஊழியர்களும் வருடாந்த செயலாற்றுகை ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டிருத்தல்.	இணங்குகிறது		
19.4	மேற்படி சுற்று நிருபத்தின் (19.1 இல் குறிப்பிட்டுள்ள) 6.5 பத்தியின் பிரகாரம் மனித வள அபிவிருத்தித் திட்டத்தை தயாரித்தல், திறன் விருத்தி நிகழ்ச்சிகளை மேம்படுத்தல், திறன் விருத்தி நிகழ்ச்சிகளை செயற்படுத்தும் பொறுப்பை மேற்கொள்ள சிரேஷ்ட அதிகாரி ஒருவரை நியமித்திருத்தல்.	இணங்குகிறது		2020.10.06 ஆம் திகதிக்குரிய 2196/27 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் உருவாக்கப்பட்ட புதிய அமைச்சாகும். 2022 ஆம் ஆண்டுக்கான பயிற்சி நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

20. கணக்காய்வுப் பத்திகளுக்கு பதிலளித்தல்

இல	கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்	இணக்கப்பாட்டு நிலை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கப்பாடு இல்லை எனில் அது பற்றிய சிறிய குறிப்பு	இணக்கப்படா நிலைமையைத் தவிர்க்க எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்கள்/ வழிமுறைகள்
20.	கணக்காய்வுப் பத்திகளுக்கு பதிலளித்தல்			
20.1	கடந்த ஆண்டிற்கான கணக்காளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட கணக்காய்வுப் பத்திகளின் மூலம் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்திருத்தல் .	இணங்குகிறது		*2020.10.06* ஆம் திகதிக்குரிய *2196/27* ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் உருவாக்கப்பட்ட புதிய அமைச்சாகும். மேலும் இது *2021* ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

செலவுத் தலைப்பு இலக்கம் - 426

சேதன மற்றும் இயற்கை உர உற்பத்தி, வழங்கல்கள் மற்றும் ஒழுங்குபடுத்துகை இராஜாங்க அமைச்சு



2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

நிறுவனத்தின் பெயர் - சேதன மற்றும் இயற்கை உர உற்பத்தி, வழங்கல்கள் மற்றும் ஒழுங்குபடுத்துகை இராஜாங்க அமைச்சு

செலவுத் தலைப்பு இலக்கம் - *426*

கமத்தொழில் அமைச்சு

2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

நிறுவனத்தின் பெயர் - சேதன மற்றும் இயற்கை உர உற்பத்தி, வழங்கல்கள் மற்றும் ஒழுங்குபடுத்துகை இராஜாங்க அமைச்சு

செலவுத் தலைப்பு இலக்கம் - *426*

பொருளடக்கம்		பக்க எண்
அத்தியாயம் *01*	நிறுவன விபரம் / நடைமுறைப்படுத்தல் தொடர்பான பொழிப்பு	3-7
அத்தியாயம் *02*	முன்னேற்றம், எதிர்கால நோக்கு மற்றும் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள்	8-20
அத்தியாயம் *03*	வருடத்தின் ஒட்டுமொத்த நிதிசார் செயலாற்றுகை	21-72
அத்தியாயம் *04*	செயலாற்றுகை குறிகாட்டிகள்	74
அத்தியாயம் *05*	நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை *(SDG)* பூர்த்தி செய்வது தொடர்பான செயலாற்றுகை	75-76
அத்தியாயம் *06*	மனிதவள விபரம்	77
அத்தியாயம் *07*	இணக்கப்பாட்டு அறிக்கை	78-89

அத்தியாயம் 01 நிறுவன விபரம் / நடைமுறைப்படுத்தல் தொடர்பான பொழிப்பு

1.1 அறிமுகம்

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 2187/27 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக 2020 ஆகஸ்ட் மாதம் 09 ஆம் திகதி உர உற்பத்தி மற்றும் வழங்கல்கள், இரசாயனப் உரங்கள் மற்றும் கிருமிநாசினி பாவனை ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சு நிறுவப்பட்டது. பின்னர் இது 2020 ஒக்டோபர் மாதம் 06 ஆம் திகதிக்குரிய 2196/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் திருத்தப்பட்டது. அதே போன்று, 2021 மே மாதம் 03 ஆம் திகதிக்குரிய 2226/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் "சேதன மற்றும் இயற்கை உர உற்பத்தி, வழங்கல்கள் மற்றும் ஒழுங்குபடுத்துகை இராஜாங்க அமைச்சு" எனத் திருத்தப்பட்டது. மேலும் இது 2235/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தப்பட்டு 2021 ஜூலை மாதம் 07 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வண்ணம் "நெல் மற்றும் தானியவகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாட்டு, விதை உற்பத்தி மற்றும் உயர்தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சு" உடன் ஒன்றிணைக்கப்பட்டு "சேதனப் பசளை உற்பத்தி மேம்பாடு மற்றும் விநியோக ஒழுங்குறுத்துகை மற்றும் நெல், தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு, விதை உற்பத்திகள் மற்றும் உயர் தொழில்நுட்ப கமத்தொழில் இராஜாங்க அமைச்சு" எனும் புதிய அமைச்சு நிறுவப்பட்டது.

நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரலிற்கு அமைவாக உலகளாவிய அபிவிருத்தி இலக்குகளை அடைதல் (நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்) மற்றும் உரிய தர நிர்ணயங்களைக்கு அமைவான உரங்களின் பயன்பாட்டை ஊக்குவித்தல், அவற்றை உரிய நேரத்திற்கு விநியோகிப்பதற்கான வழிமுறைகளை உருவாக்குதல் மற்றும் சூழல் நட்பு தாவர போசணைப் பொருட்களின் உற்பத்தியை ஊக்குவித்தல் என்பவற்றுக்கான தனது அபிவிருத்தி இலக்குகளை 2021 ஆம் ஆண்டில் உர உற்பத்தி மற்றும் வழங்கல்கள், இரசாயன உரங்கள் மற்றும் கிருமிநாசினி பாவனை ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சு நடைமுறைப்படுத்தியுள்ளது. அதேபோன்று, அரசினால் மேற்கொள்ளப்பட்டுள்ள இலங்கையில் நிலைபேறான பசுமை சமூக பொருளாதார முறையை உருவாக்குவதற்கான கொள்கைத் தீர்மானத்தின் கீழ் இந்த இராஜாங்க அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள விஷேட பணியான தரத்தில் சிறந்த உரங்களின் வழங்கலை உறுதி செய்யும் பொருட்டு அமைச்சினால் 2021 ஆம் ஆண்டில் மூன்று முக்கிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. அவையாவன, தேசிய உர முகாமைத்துவ தகவல் தொகுதியை உருவாக்குதல் (National Fertilizer Management Information System), தேசிய உரச் செயலகத்தின் மாவட்ட அலுவலகங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் இலங்கை உரக் கம்பனியின் உர ஆய்வுகூடத்தை விருத்தி செய்தல் ஆகிய திட்டங்களாகும்.

இதற்கு மேலதிகமாக, உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல் மற்றும் நிலைபேறான விவசாயத்தை உருவாக்குதல் எனும் விஷேட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உர மானியத்தை வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் நெற் செய்கைக்குத் தேவையான உர வகைகளை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படுவதுடன் ஏனைய பயிர்களுக்கு தேவையான உர வகைகளை மானிய விலைக்கு வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி, 2021 ஆம் ஆண்டின் சிறு போகம் மற்றும் 2021/22 ஆம் ஆண்டின் பெரும் போகம் என்பவற்றுக்கு விவசாயிகளுக்கு மானிய உரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. 2021 ஆம் ஆண்டின் சிறு போகத்தின் நெற் செய்கைக்கு வழங்கப்பட்ட மொத்த இரசாயன உரத்தின் அளவு 119,173 மெற்றிக் தொன் ஆகக் காணப்பட்டதுடன் 2021/22 பெரும் போகத்தில் 11,888 மெற்றிக் தொன் சேதன திண்ம உரம் (கூட்டுப்பசளை), 6,269,108 லிட்டர் சேதன திரவ உரம், 1,272,978 லிட்டர் உயிரியல் திரவ உரம், 152,052 லிட்டர் நனோ நைட்ரஜன் உரம் மற்றும் 29,674 மெற்றிக் தொன் பொட்டாசியம் குளோரைட்டு என்பன விநியோகிக்கப்பட்டன. 2021 ஆம் ஆண்டில் ஏனைய களப் பயிர்களுக்கு வழங்கப்பட்ட இரசாயன உரத்தின் மொத்த அளவு 229,279 மெற்றிக் தொன் ஆகும்.

2021 ஆண்டில் நெல், தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு, விதை உற்பத்திகள் மற்றும் உயர் தொழில்நுட்ப கமத்தொழில் இராஜாங்க அமைச்சின் இரசாயன மற்றும் சேதன உரங்களுக்கான உர மானிய நிகழ்ச்சித் திட்டத்திற்காக மீண்டுவரும் செலவாக 35.00 பில்லியன் ரூபா நிதியும், இதற்கு மேலதிகமாக இராஜாங்க அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனமான தேசிய உணவு ஊக்குவிப்பு சபைக்கு மூலதன செலவுக்காக 05.00 மில். ரூபா நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இராஜாங்க அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனமான தேசிய உரச் செயலகத்தின் ஊடாக அரசின் இலக்குகளை அடைந்துகொள்ளும் பொருட்டு நெல் மற்றும் ஏனைய களப் பயிர்களுக்கான உர மானிய நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் மற்றும் சேதன உர உற்பத்தியை மேற்கொள்ளும் புதிய மற்றும் பழைய உற்பத்தியாளர்களை பதிவு செய்தல், பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல், கள ரீதியாக உர மாதிரிகளை பரிசோதித்தல் மற்றும் உரங்களின் தரத்தை உறுதி செய்தல், உர இருப்புகளை சரி பார்த்தல் மற்றும் களஞ்சிய சோதனை, உர விற்பனை நிலையங்களை பதிவு செய்தல், மாவட்ட உரக் குழுக் கூட்டங்களை நடாத்துதல் மற்றும் சேதன உரப் பாவனையை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தல் போன்ற பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இதன் மூலம், தரத்தில் சிறந்த உரப் பாவனையை ஊக்குவித்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல், விவசாயிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்தல் மற்றும் சேதன உரப் பாவனை தொடர்பான விவசாயிகளின் விழிப்புணர்வை அதிகரித்தல் ஆகிய பெறுபேறுகளை அடைந்து கொள்ள முடியும் என எதிபார்க்கப்படுகின்றது.

வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி மற்றும் கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி என்பன இந்த இராஜாங்க அமைச்சிற்குச் சொந்தமான மேலும் இரண்டு இணை நிறுவனங்கள் ஆகும். மேற்படி நிறுவனங்கள் மூலம் நெல் மற்றும் ஏனைய களப் பயிர்களுக்கான மானிய உரங்களை விநியோகிக்கும் செயற்பாட்டுக்கு மேலதிகமாக இலங்கையில் ஒரு நிலைபேறான பசுமை சமூக பொருளாதார முறையை உருவாக்குவதற்கான அரசின் கொள்கைத் தீர்மானத்திற்கு அமைவாக சேதன உரங்களை விநியோகிக்கும் பணியும் 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.

இராஜாங்க அமைச்சிற்குச் சொந்தமான மற்றைய துணை நிறுவனமான தேசிய உணவு ஊக்குவிப்பு சபைக்கு ஊடாக நச்சுப் பொருட்களற்ற உணவு வகைகளை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் செயற்பட்டு கூட்டுப்பசளை உற்பத்திச் செயற்திட்டம், தென்னை பயிரிடும் செயற்திட்டம், விதை மஞ்சள் உற்பத்திச் செயற்திட்டம், அரிசி போசணையூட்டல், பாரம்பரிய அரிசி வகைகளை ஊக்குவிக்கும் செயற்திட்டம் மற்றும் சோயா கலந்த உணவு வகைகளை உற்பத்தி செய்யும் செயற்திட்டம் மற்றும் நகர்ப்புற மக்களுக்குத் தேவையான விவசாய அறிவை வழங்கவும் மானிய விலைக்கு விவசாய உள்ளீடுகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கிலும் பயிர் நாற்றுகளின் விற்பனை நிலைய செயற்திட்டம் என்பன 2021 ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டன. அதேபோன்று, ஆரோக்கியமான விவசாய உற்பத்திகளின் நுகர்வை அதிகரிக்கும் நோக்கில் "அக்ரோ ப்ரெஷ் சுப்பர்" எனும் பெயரில் உணவு விற்பனை நிலையத்தை ஆரம்பித்தமையும் இந்த நிறுவனத்தினால் 2021 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களில் உள்ளடங்கும்.

